HISTORY
OF
PANJALANKURICHY.

By

N. S. Devadass.

Published by

Prof. M A. CHIDAMBARAM PILLAI,

KOILPATTI, S. I R.

PRINTED AT THE

SARASWATI PRINTING PRESS,

KOILPATTI.

1928.

 (Price As

பாஞ்சாலங்குறிச்சி சரித்திரம்.

எஸ். தேவதாஸ் நாயுடு எழுதியது.

கோவில்பட்டி
Prof: M. A. சிதம்பரம்பிள்ளையால்
வெளியிடப்பட்டது.

1928.

பொருளடக்கம்.

திருநெல்வேலி ஜில்லாவின் அதிபூர்வ ஸ்திதி.

இப்புத்தகத்தில் சொல்லப்படும் விஷயங்கள் பாரத தேசத்தின் தென்கோடியிலிருக்கும் திருநெல்வேலி ஜில்லாவைச்சார்ந்தது. ஆகவே, இந்த ஜில்லாவின் அதிபூர்வ ஸ்திதியிலிருந்து இச்சரித்திர சம்பந்தம் வரைக்கும் உள்ள நிலைமையை கூடியவாறு சுருக்கமாக எழுதி அதன்பின்னர் விஷயத்தைத் தொடங்கி எழுதப் பட்டிருக்கிறது.

இச் சில்லாவின் அதிபூர்வீக குடிகளைக்குறித்த காலத்தைப்பற்றி அல்லது அவர்களுடைய ஆயுளைப் பற்றி நாம் சாசனங்களின் மூலமாயாவது நூல்களின் மூலமாயாவது ரூபிக்கமுடியாது. ஆனால் அவர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்களென்றும் மகா பலசாலிகளென்றும், பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட மதமதக் காத்தாளியினுள் அடங்கியுள்ள சிற்சில சாமான்களின் மூலமாயும், இன்னும் மலைகளில் கட்டப்பட்ட அல்லது வெட்டப்பட்ட கட்டடங்கள் மூலமாயும் நமக்குத் தெரியவருகிறது. மதமதக்காத்தாளியானது, நம்நாட்டில் தற்சமயம் வழங்குகிற ஜாடிக்கு ஒப்பானது. பூர்வத்தில் உள்ள ஜனங்கள், எளிதில் இறக்கமாட்டார்களென்றும், தங்களைத்தாங்களே சுத்தமாய் வைத்துக் கொள்ள திராணியற்றவர்களாயிருக்கும் காலத்தில், குடும்பத்திலுள்ளவர்கள் ஒரு பெரிய ஜாடிமாதிரி

போன்ற தாளியை காற்று உட்செல்லக்கூடியதாய்ச் செய்து வயோதிக ஆளை அதற்குள்ளே வைத்து, வாழையிலையை முன்னாலே விரித்து அறுசுவை பதார்த்தங்களையும் படைத்து, அந்த ஆள் ஓடியாடித் திரியுங் காலத்தில் எந்தெந்தப்பொருளை விரும்பினதோ அந்தந்தப் பொருட்களைக் கொஞ்சம் படைத்து விளக்கும் ஏற்றிவைத்து மேற்படி ஜாடியை அவ்வீட்டின் ஒருபக்கத்தில் வைத்து நேரத்துக்குநேரம் ஜாடியினுள் அசுத்தமில்லாதவாறு சுத்தப்படுத்துவார்கள். ஆகவே இதிலிருந்து அதிபூர்வத்தில் பூமிதானஞ் செய்தார்களென்றும் பின்னால் வரவர தகனஞ் செய்தார்களென்றுந் தெரியவருகிறது.

அதுவுமல்லாமல் இந்த ஜில்லாவின்தென்பாகத்தில் 150 மைல் நீளமுள்ள தரையும் அதிலுள்ள ஊர்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே சமுத்திரத்தில் மூழ்கிவிட்டதாகத் தெரியவருகிறது. இன்னும் பற்பலபேர் அபிப்பிராயப்படுகிறபடி ஜாவாத்தீவுவரைக்கும் இந்த ஜில்லாவிலிருந்து தரைமார்க்கமாய்ப் பிரயாணப்பட்டுப் போகலாமென்றும் சொல்லுகிறார்கள். ஏனென்றால், சிறிதுகாலத்துக்கு முன் ஷெ தீவில் புதைந்து கிடந்த ஒரு கட்டடத்தைக் கண்டுபிடித்து அதைப்படம்பிடித்து அநேக இடங்களுக்கு அனுப்பினார்கள். அது கடைசியாக ஒரு இந்து தேவாலயம் என்று தெரிகிறது.

அது கட்டி எவ்வளவு காலமானதென்று கணக்கிடமுடியவில்லை. அப்படத்தின் மாதிரியைப் பார்த்தால் இத்தேசத்திலுள்ள தேவாலயப் படங்களைப்பார்த்தாற் போல்தானிருக்கிறது. ஆகவே அதிபூர்வீகத்தில் இத்தேசத்தை யார் ஆண்டார்களென்றும் அவர்களுடைய தேச அரசாட்சி எப்படிப்பட்டதென்றும் எவராலும் சொல்லி நிரூபிப்பது கஷ்டமான விஷயந்தான். ஆனால் அக்காலத்தில் செய்யப்பட்ட சித்திரவேலைகளும், இரும்பு, தந்தத்தினால் செய்யப்பட்ட சாமான்களையும் கவனிக்கிறபொழுது, தற்காலத்தில் செய்யப்படுகிற சிற்பத்தைவிட அதிகச்சிறந்ததென்றே சொல்லவேண்டும்.

பாண்டிய நாடு.

இந்த ஜில்லாவின் பூர்வ சரித்திரம் பாண்டியராஜாக்களுடன்தான் பூர்வம்முதல் ஆரம்பிக்கிறது. அவர்கள் காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டுவரை விட்டுவிட்டும் தொடர்ந்தேர்ச்சியாயும் ஆண்டுவந்ததாகத் தெரிகிறது. முதல் பாண்டிய ராஜாவின் பிறப்பிடமே இச்சில்லாவின் ஸ்ரீவைகுண்டம் தாலுகாவிலுள்ள கொர்க்கையென்னும் கிராமமென்றும், இக்கொர்க்கையானது பூர்வீகத்தில் மிகப்பிரசித்திபெற்று ஐரோப்பிய தேசங்களுடனும் மற்றுமுள்ள தேசங்களுடனும் வியாபார முயற்சி செய்துகொண்டுவந்ததென்றும் சரித்திர ஆராய்ச்சியின் மூலமாய் அறிகிறோம்.

காலஞ்செல்லச்செல்ல, மதுரை பாண்டியதேசத்துக்குத் தலைநகராயும் கொர்க்கை இளவரசுக்குத் தலைநகராயுமிருந்ததென்றும் நமக்குத் தெரியவருகிறது. அவர்கள் கொடி மச்சக்கொடி. அவர்கள் நாணயங்களிலும் அதே அடையாளந்தான். அவர்கள் அரசாங்க காலத்தில் புத்தமார்க்கம் பிரபல்யமானதென்றும் அம்மார்க்கத்தின் கிரந்தங்களிலிருந்தே பாண்டிய தேசத்தின் பல விஷயங்களை தேச அரசாட்சிக்காரரும் மறைந்துகிடக்கும் பொருட்களையும், கற்களில் எழுதப்பட்ட வாசகங்களையும் தெளிவுறச் செய்கிறவர்களாலேயும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதுவுமல்லாமல் அசோக இராஜாக்களின் காலத்தில் பாண்டிய தேசமானது புத்தமதத்தை அனுசரித்திருந்தது என்பதாக கற்பாறைகளிலுள்ள சிலாசாசனங்களினாலே தோற்றப்படுகிறது.

இப்பாண்டிய இராஜாக்களுக்கு அநேக விரோதிகள் காலாகாலத்திலிருந்தபோதிலும் கி. பி. 1600 வரை அந்த அரசாட்சி இருந்தேவந்தது. பாண்டிய தேசத்தை 50 இராஜாக்கள்வரை ஆண்டிருந்தார்கள். அவர்கள் காலத்தில் தேசம் அதிக செழிப்பும், நீதிதவருச்செங்கோன் முறைமையும், கல்விச்சிறப்பும், குடிகளுக்கு யாதொரு இடுக்கணுமில்லாமல் மனச்சமாதானமுமுள்ளதாக இருந்தது பண்டைக்காலத்திலுள்ள இராஜாக்கள் எல்லோருமே தங்களுக்கு வேண்டிய

பற்பல வசதிகளைக் கவனிக்கிறதும் சத்துருக்களி னின்றுவரும் மோசத்தினின்று தங்களைக்காப்பாற்றிக் கொள்வதற்கேற்ற, கோட்டை கொத்தளங்களைக் கட் டும் விஷயத்தில் பிரஜைகளைக் கஷ்டப்படுத்துவதும் வழக்கம். ஆனால் பாண்டிய இராஜாக்களோ அப்படிப் பட்ட கஷ்டங்களைக் குடிகளுக்குக் கொடுக்காமல், தற் சமயம் மதுரை நகரிலுள்ள மீனாக்ஷியம்மன் கோவி லுக்கு ஈசான்யத்தில் சாதாரணக் கட்டடத்திலிருந்தே அரசுபுரிந்தார்களாம்.

நாயக்கர் வம்சம்.

பாண்டிய இராஜாக்களுக்குப்பின்பு நாயக்கர் வம்சம் சற்றேறக்குறைய 200 வருஷம் இச்சில்லாவைப் பரிபாலனஞ்செய்தது. நாயக்கர் வம்சத்தில் 15 இரா ஜாக்கள்வரை யிருந்ததாகத்தெரிகிறது. அதே காலத் தில் இச்சில்லாவின் சில பாகங்கள் திருவாங்கூர் இராஜ் யத்திற்குள்ளுமிருந்தது.

பிற்பாடு மகமதியரிடம் சுமார் 50 வருஷகால மிருந்தது. அப்படியிருக்கும்போதுதான் இங்கிலீஷ் காரருக்கு இச்சில்லா கிடைத்தது. எப்படிக் கிடைத்த தென்பதைச் சற்று தெளிவாய் இங்கு கூறுவோம்.

நாயக்கர் வம்சத்தில் கடைசி இராஜாவாகிய விஜயரெங்க சொக்கநாதருக்கு வாரீஸ் இல்லை. ஆகவே அவருடைய மனைவி மீனாட்சியம்மாள் தன் சொந்த

பந்துக்களில் ஓர் ஆண் குழந்தையை ஸ்வீகாரமாய் எடுத்து வளர்த்து, தான் அச்சுவீகார புத்திரன் பிராயமடையும்வரை இராஜப்பிரதிநிதியாக இரண்டொரு வருஷம் அரசாண்டு வருங்காலத்தில், அச்சுவீகார புத்திரனுடைய தகப்பனார் தனக்கு இராஜ்யபாரம் உண்டென்று வீண் வழக்குரைத்து கலகங்கள் எழுப்பிவிட்டார். அச்சமயம் அநேகமாய், இந்தியா முழுவதும் மொகலாய சக்ரவர்த்தியின் கீழ்தானிருந்தது. நாயக்கர் இராஜாக்களும் மொகலாயச் சக்ரவர்த்திக்கு கப்பங் கட்டி வந்தார்கள். தென்பாரிசத்துக்கு அவர்களுடைய பிரதிநிதி ஆர்க்காட் நவாபு. நவாபுக்கு மேல் அதிகாரி ஹைதராபாத் நைஜாம்.

மீனாட்சியம்மாளுக்கு விரோதியாயிருந்து கலகங்களும் குழப்பங்களும் எழுப்பிவிட்டவர், வங்காரு திருமலை என்பவர். இவர்களிருவரும் இப்படிச் சண்டையிட்டுக்கொண்டிருக்குங் காலத்தில் ஆர்க்காட்டு நவாபு தன் புத்திரனையும் மறுமகனையும் தென்தேசத்திற்கு வந்து சிற்றரசர்களிடமிருந்து கப்பத்தை வசூலிக்கவும் ஆங்காங்குள்ள விஷயங்களைக் கவனித்துச் சீர்திருத்தங்கள் செய்வதற்காகவும் அனுப்பினார். அவர்கள் இத்தேசத்திற்கும் மலையாள தேசத்திற்கும்போய் நவாபு கட்டளைகளை நிறைவேற்றித் திரும்பி வருகையில் வங்காரு திருமலை என்பவர் நவாபு மகனிடம் அதிக வெகுமானங்களோடு சென்று, தன்னைப் பட்டத்துக்கு வைத்தால் பெருந்தொகை கொடுப்பதாய் உறுதிமொழியும்

தஸ்தாவேஜூம் முடித்தார். நவாபு மகனும் அதற்கு இணங்கி, தன் மைத்துனரிடம் காரியாதிகளைச் செம்மையாய் முடிக்கும்படி உத்திரவிட்டு, தம் ஜனன பட்டணமாகிய ஆர்க்காட்டுக்குச் சென்றார். நவாபு மறுமகனாகிய சந்தாசாய்பு என்பவர் மேற்கண்ட காரியாதிகளை முடிக்கும்படியாய்த் தாமதித்தபோது மீனாட்சியம்மாள் தன் பக்கத்துக்கு அனுகூலமாகும்பொருட்டு சந்தாசாய்பு என்பவரிடஞ் சென்று, தான், எதிரி நவாபு மகனுக்குக் கொடுக்கும் பணத்தைவிட 3 அல்லது 4 மடங்கு தருவதாய் எழுதிக்கொடுத்துவிட்டான்.

வங்காரு திருமலை என்பவரைச் சந்தா சாய்பு மதுரை திருநெல்வேலி நாட்டை ஆளும்படி உத்திரவு கொடுத்து மதுரைக்குப் போகும்படி கட்டளையிட்டு தாம் ஆர்க்காட்டு நகருக்குச் சென்றுவிட்டார்.

நவாபுகள்.

இரண்டு வருஷங்கழித்து, சந்தா சாய்பு திருச்சிறுப்பள்ளிக்குவந்து சிம்மாசனத்தில் தானே இராஜாவென்று பிரசித்தம்பண்ணி, வங்காரு திருமலைக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து அவரைத்தேசத்தினின்று துரத்திவிட்டு, தன் இரண்டு சகோதரர்களை திண்டுக்கல்லிலும் மதுரையிலும் தேசாதிபதிகளாக நியமித்தார். வங்காரு திருமலையோ, தன் இனத்தானாகிய தஞ்சாவூர் அரசினிடஞ்சென்று அடைக்கலம்புகுந்தார். வங்காரு திருமலையும், தஞ்சாவூர் அரசனும் சந்தா

சாய்புக்கு அதிகமாய்ப் பயந்தபடியால், தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு வடதேசத்தில் அரசு புரிந்த மராட்டியருக்கு அந்தரங்கமாய்த் தூதனுப்பினார்கள். மராட்டியருக்கும் ஆர்க்காட்டு நவாபுக்கும் அந்தரங்கத்தில் மனவருத்தமிருந்தபடியால் இவ்விருவருடைய வேண்டுகோளுக்குச் சந்தோஷமாய் இணங்கினார்கள். மராட்டியர் பெருஞ்சேனையுடன் வந்து ஆர்க்காட்டு நவாபைக் கொன்று, ஷை நவாபு மகனுக்குப் பட்டங்கட்டினார்கள். அதே வருஷத்தில் ஆர்க்காட்டு நவாபு அந்தரங்கமாய் மராட்டியரை வரவழைத்தார். அவர்கள் திடீரென்று வந்து திருச்சினாப்பள்ளிக்கோட்டையை முற்றுகைபோட்டு சந்தா சாய்பைக் கைதியாக்கித் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அவனுடைய இரண்டு சகோதரரையும் கொன்றுவிட்டார்கள். தாங்கள்பிடித்த தேசத்தை கூட்டியிலுள்ள இராஜாவாகிய மொராரிராவ் வசம் ஒப்புவித்து அவனைத் தேசாதிபதியாக்கினார்கள்.

காரியங்கள் தக்ஷணத்தில் இப்படியிருக்கும்பொழுது, ஹைதராபாத் நைஜாம் தக்ஷணத்துக்கு வந்து, தன் அதிகாரத்தை நாட்டினான். அன்வார்யுடின் என்பவனை நைஜாம் ஆர்க்காட்டு நவாப் ஆக்கினான். மொராரிராவ் தேசத்தைவிட்டுப் போய்விட்டான். வங்காரு திருமலை போன இடமும் தெரியாது.

இச்சமயம் சந்தா சாய்பு சிறையிலிருந்து விடுதலையாக்கப்பட்டான். தானும் நைஜாமுக்குச் சொந்தமானவருஞ்சேர்ந்து படையெழுச்சிசெய்து, நைஜாம் ஏற்படுத்திய ஆர்க்காட்டு நவாபாகிய அன்வார்புடினைக் கொன்றுவிட்டு, சந்தா சாய்பு ஆர்க்காட்டு நவாபாக பட்டஞ்சூட்டப்பட்டான். ஆனால் அன்வார்புடின் மகனாகிய மகமதலியோ, திருச்சிறுப்பள்ளிக்குத் தப்பி தன்னை நவாப்யென்று பிரசித்தம்பண்ணிக்கொண்டான். இது காரணத்தால் சந்தா சாய்புக்கும் மகமதலிக்கும் கட்சி பலப்பட்டு சந்தா சாய்புக்கு அனுகூலமாக பிரெஞ்சுக்காரரும் மகமதலிக்கு உதவியாக இங்கிலீஷ்காரருமிருந்தார்கள்.

இங்கிலீஷ்காரரும் மகமதலி சேனையுஞ்சேர்ந்து தெற்கே திருநெல்வேலிக்குப்போய் அங்கே வரவேண்டிய பண வசூல்களைச் செய்யவும், இங்கிலீஷ்காரரும் மகமதலியும் ஒன்றுதானென்று, ஜனங்களுக்குப் பிரசித்தஞ்செய்யவும் தங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் மரியாதையும் சரிவரச்செய்து முடிக்கவேண்டுமென்று பிரசித்தம் செய்யவும் நவாபின் சகோதரனும் இங்கிலீஷ் சேனையும் புறப்பட்டது. அப்படிவந்த சமயத்தில் அநேகம்பேர் அவர்களுக்குப்பயந்து மரியாதை செய்து, வரியையும் கொடுத்தார்கள். சில பாளையப்பட்டுகளோ வரிகொடுக்க மறுத்தார்கள். அப்பாளையப்பட்டுகளில் பாஞ்சாலங்குரிச்சி மரியாதை செய்யாமலும், வரிப்பணம் செலுத்தாமலுமிருந்தது.

சற்றேறக்குறைய 360 வருஷங்களுக்கு முன் மதுரை நாயக்கர் இராஜ வம்சத்தைச்சேர்ந்த 2-வது விஸ்வநாத இராஜா காலத்தில்தான் பாளையப்பட்டுகள் எற்பட்டது.

தற்காலத்திலுள்ள ஜமீன்களில் சில ஜமீன்கள் எற்பட்டு 600 வருஷங்களாகிறதென்றும் சொல்லுவார்கள். அதற்குக்காரணம் என்னவெனில் கி. பி. 1350–வது வருஷத்தில் திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்கள் மகமதியர் ஆளுகைக்குட்பட்டதென்று நாம் சரித்திரத்தில் வாசிக்கிறோம். அப்படியிருக்கும்போது நாயக்கர்கள் மேற்கண்ட ஜில்லாக்களைத் தாங்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். கைப்பற்றியிருந்தால் இராஜாங்கத்தைச்சார்ந்த வம்சத்தாருக்கும், வகுப்பினருக்கும் பெருஞ் சிலாக்கியங்களும், சகாயமும், சொற்சக்தியுமிருந்திருக்குமென்பது வெளிப்படையாய்த் தெரிந்த விஷயந்தானே? பழையகாலத்தில் கொள்ளைநோய், விஷபேதி, எல்லாவற்றிற்கும் மேலான கொடிய பஞ்சங்கள் உண்டாகுஞ்சமயம் வெகு திரளான ஆடுமாடுகள் உடையவர்கள் செழிப்பான தேசங்களுக்குப் போவது வழக்கம். மேற்சொன்னகாரணங்களால் திருநெல்வேலி ஜில்லாவின் செழிப்பான பாகமாகிய மேற்குத்தொடர்ச்சி மலைகளைச்சார்ந்த இடங்களுக்கு முதலில் வந்து இரண்டொரு நூற்றாண்டுகள் தங்கி அதன்பிறகு கிழக்கே நோக்கிச் சென்றிருக்கலாம். விஷயங்கள் மேற்

கண்ட காரணத்துக்கு ஒத்திருந்தால் தற்காலத்தில் உள்ள ஜயின்கள் தாங்கள் வந்து 600—வருஷங்களா கிறதென்று சொல்வதும் சரியே.

ஆனால் இப்புஸ்தகத்தில் சொல்லப்படும் சரித்திர ஆரம்பமானது கி. பி. 1100—ம் வருஷத்தைச்சார்ந்த தென்று பற்பல காரணங்களால் சொல்லவேண்டிய திருக்கிறது. அக்காரணங்களை பின்வரும் பக்கங்களில் காணலாம்.

பாஞ்சாலங்குரிச்சியார் ஆதி உறைவிடம்.

பாஞ்சாலங்குரிச்சியிலுள்ளவர்களும் நம்ஜில்லா விலும் மற்றும் இத்தேசத்தில் உள்ள கம்பளத்தார் அனைவரும் விஜயநகரத்திலேயே குடியிருந்தார்கள். சுமார் கி. பி. 1100—வது வருஷம் அத்தேசம் மகமதிய ரால் ஆளப்பட்டதென எல்லோருக்குந்தெரியும். மகம தியரும் அவருடைய மற்றப்படைகளும் நம் தேசத் திற்கு மேற்கேயுள்ள தேசங்களைச் சார்ந்தவர்கள். ஒரு தேசத்தின்மேல் படையெழுச்சிசெய்ய நினைக்கிறவர்கள் தங்களுடன் பெண் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போக முடியாதல்லவா? அதுபோல் மேற்சொன்னவரு டையபடைகள் தனிமையாகவே வந்தன. வந்து தேசங் களைப்பிடித்தார்கள். நிலங்களைச் சம்பாதித்தார்கள். காடு நகரங்களை உண்டுபண்ணினார்கள். பிறகு என்ன

குறையிருந்தது. கல்யாணம் செய்து சொத்துக்களை ஆள புத்திரர்களைப் பெற்றுக்களிக்கவேண்டியதுதான்.

நவாபு தங்களைச்சார்ந்த அநேகமாயிரம் ஆண்கள் கல்யாணமில்லாமலிருக்கிறார்களே என நினைத்துத் தூக்கித்தார். அவர்கள் கல்யாணமில்லாமலிருக்கிறதினால் இரண்டுவித நஷ்டம். முதலாவது கல்யாணம்செய்து குடும்ப வாழ்க்கையிலுள்ளவர்களுக்கு அதிக இடைஞ்சல். இரண்டாவது ஜனப்பெருக்கந்தான். இராஜாக்களுக்கு மகிமையும், பலமும் எதிரிகள் படையெடுத்து வருங்காலத்தில் தன்னிடத்தில் ஏராளமான சைன்யங்களிருந்தால்தான் எதிரியை எழிதில் ஜெயிக்கலாம். இவ்விதமான விஷயங்களை மனதில்வைத்து வெகுநாள் யோசனையிலிருந்து கடைசியாய் ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

நம்முடைய தேசத்திலுள்ள விஜயநரத்தில் குடியிருக்கும் கம்பளத்தார்என்னும் வம்சத்தார் அதிக சௌந்தர்யமும், பராக்கிரமமும், கடவுள் பக்தியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். நாம் தேசத்தை அரசாட்சி செய்கிறவர்களானதாலும் அவர்கள் நம் அரசாட்சிக்குள் இருக்கிறபடியாலும் நம்முடைய வார்த்தைக்கு மீறி எங்கே போவார்களென மனதில் வீண் எண்ணங்கொண்டு, ஒருசமயந் தன் மந்திரிகளில் பிரதான மந்திரியைக் கூப்பிட்டு தன் யோசனையைச் சொன்னார். அக்காலத்தில் இராஜாக்கள் சொன்னதின்படி மந்திரிகள்

சரிப்போட வேண்டியதுதானே. ஆகையால், மந்திரி இதை வெகு எழிதில் முடிக்கலாம் என்று சொல்லி ஓர் தினம் மந்திரியும் சில பிரதானிகளுஞ்சேர்ந்து ராஜ நோக்கத்தைக் கம்பளத்தாரிடம் தெரியப்படுத்த அவர் களும் அதற்கு உடன்பட்டார்கள். இராஜாவுக்கு அதிக ஆனந்தமுண்டாகி எல்லோருக்கும் ஒருதினத்தில் விருந்துசெய்ய நினைத்து ஓர்நாளையும் குறிப்பிட்டு சகல பேர்களையும் விருந்துக்கு அழைத்தார்.

கம்பளத்தார் அச்சமயம் சக்கதேவிக்குத் தான் தொண்டர்கள். சக்கதேவியின் உத்திரவுப்பிரகாரந்தான் எந்தக்காரியத்தையுந் தொடங்குவார்கள். எதையும் அத்தேவதையின் ஒத்தாசையால்தான் முடிப்பார்கள்.

புறப்பட்டதற்குக்காரணம்.

இன்று—நாளை இன்று—நாளையென்று கடைசியாக விருந்து தினம் வந்தது. கம்பள வம்சத்தார் சகலரும் விருந்திற்கு வந்தார்கள். வந்தவர்களெல்லாரும் வரிசைவரிசையாய் விருந்துண்ண உட்கார்ந்தார்கள். அவர்களில் ஒரு ஆளுக்கு உட்கார இடமில்லாமல் போயிற்று. அங்கே ஒரு கடைசியில் ஒருகூடை கவிழ்க் கப்பட்டிருந்தது. அந்தக்கூடையை எடுத்துவிட்டு அதில் அந்த ஆளை உட்காரச்சொன்னார்கள். அந்தக் கூடைக்குள் இவர்களுக்கு அருவருப்பான பொரு ளொன்றிருந்தது. அந்தப் பொருளைக்கண்ட கம்பளங் கள் தங்களுக்கு முன்னால் படைக்கப்பட்ட ஆகாரத்

தைப் புசிக்காமல் எல்லோரும் ஒன்றுபோல் எழுந்திருந்து போய்விட்டார்கள். சரி இராஜா விருந்துசெய்தார். குடிஜனங்களும் சம்மதித்து விருந்து சாப்பிடப் போயிருந்தார்கள். நாம் ஓரிடத்தில் சாப்பிடப்போயிருக்கும்போது நமக்குப்பிரியமில்லாத வஸ்துக்களைப் படைத்தால் நாம் சாப்பிடச் சம்மதிப்போமா? அல்லாமலும் நம்முடைய சிநேகிதர்களுக்கு மரியாதைசெய்ய வேண்டுமென நினைத்துச் சாப்பிட்டாலும் நாம் சாப்பிட்ட ஆகாரம் வயிற்றில் தங்குமா? இதை வாசிக்கிறவர்களே யோசித்துக்கொள்ளுங்கள்.

சக்கம்மாள் தேவியும் ஆற்றைக் கடத்தலும்.

ஆகவே இருதாத்தாருக்கும் மனவருத்தம். இராஜாவுக்குத்தான் அதிக மனவருத்தம். ஏனென்றால், பெண் எடுக்கப்போகிறவர். தாம் நினைத்தது முடியாததுபோல் தோன்றுகிறது. விருந்து சாப்பிடப்போனவர்களுக்கோ நாம் இராஜாவின் விருந்தைச் சாப்பிடாமல் வந்துவிட்டோமே இராஜாவின் ஆக்கினைக்குள்ளாக வேண்டுமே எனக் கம்பளத்தார்களனைவரும் வியாகூலப்பட்டு, தங்கள் குலதெய்வமாகிய சக்கதேவியிடம் உத்திரவு கேட்டு, தென்தேசத்தை நோக்கிப் புறப்பட எத்தனித்தார்கள்.

விருந்து வைத்த நேரம் இரவு. காலையில் இராஜ தண்டனைக்கு ஆளாகவேண்டியதிருக்கிறது. ஆகையால்

விடியுமுன் தங்கள் குலதெய்வமாகிய சக்கதேவியை ஒரு கூடைக்குள் எடுத்து வைத்துக்கொண்டு தென் திசையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் தென்திசையை நோக்கிப்புறப்பட வேண்டிய காரணம் என்னவென யாரும் கேட்கலாம். நாம் முன்னே பார்த்தபடி தென்தேசம் பாண்டிய அரசர்களால் அரசாளப்பட்டது. மழைக்குக் குறைவில்லை. பாண்டிய நாடெங்கும் சிற்றரசர்கள் பரவியிருந்தார்கள். ஏன்? அங்கங்கேயுள்ள குடிபடைகளைக் கவனித்து அவரவர்களுடைய குறைகளை நிவர்த்திபண்ணி நீதிநியாயஞ் செய்வதற்காக. பாண்டிய இராஜாவுக்குத் தலைநகரோ மதுரைப்பட்டணம்.

கப்பளத்தார் தங்களுடன் கொண்டுவந்தது தங்கள் குலதெய்வமாகிய சக்கதேவியம்மாள் சிலையும் பசுமாடுகளுந்தான். வேறெந்தப் பொருட்களையும் கொண்டுவரவில்லை. பாலைக்கறந்து சாப்பிடுகிறது. வேறெந்த உணவுப்பொருட்களையும் சாப்பிடுகிறதில்லை அவர்களுக்குப் பிராணதாரமாயுள்ளது அவர்களுடன் புறப்பட்ட பசுமாடுகள். அவர்கள் மிகுந்த தெய்வபக்தியுள்ளவர்கள். வாக்கில் வல்லவர்கள். மாந்தரீக சக்தியுள்ளவர்கள் உலகப் பொருட்களில் நாட்டமில்லாதவர்களென்று இதற்கு அடுத்துவரும் சரித்திரத்தால் அறியலாம். பொருட்களில் நாட்டமில்லாதவர்களாயிருக்கவேண்டுமென்றதே அவர்கள் குலதெய்வமாகிய சக்கதேவியம்மாளின் கண்டிப்பான உத்திரவு.

தென்திசையை நோக்கிப் புறப்படும் அன்று இரவில் தங்கள் அயலகத்தாரெல்லாரையும் எழுப்பினார்கள். அப்படிச்செய்யும்போது ஒரு வீட்டில் ஒரு குடும்பம் நித்திரை மயக்கத்திலகப்பட்டு தங்கள் ஜனங்களுடன் தென்தேசத்திற்குப் போகப்புறப்படவில்லை. அப்படி நித்திரை மயக்கத்தாலே பின்னடைந்தவர்களுக்கு "நித்திரைவார்" என்று பெயர். இவர்களும் ஒன்பது கம்பளத்தில் ஒரு பிரிவினரேயாவார். இனி புறப்பட்டவர்களைப்பற்றிப் பார்ப்போம். புறப்பட்டவர்கள் இரவில் கூடியவரைக்கும் அதிகக் கூட்டங்கூட்டமாய் புறப்படவில்லை. புறப்பட்ட விஷயத்தில் அதிக விவேகமாய் நடந்துகொண்டார்கள். நாம் பார்த்தபடி பொருட்களையெல்லாம் சேகரிக்கும்போது தான் இதர ஜனங்களுக்கு தெரியுமேயொழிய, தான் உடுத்தின வஸ்திரத்தோடு புறப்பட்டால் வீட்டிலுள்ள சொந்த ஜனங்களும் தெரிந்துகொள்ளமாட்டார்கள். அவர்களோடு புறப்பட்டது பசுக்கள் மாத்திரந்தான். எல்லோரும் ஒவ்வொருவராய்த் தென்திசையை நோக்கிப் புறப்படும்போது அவர்கள் போகவேண்டிய திசைக்குக்குறுக்கே ஒரு பெரிய நதி இருந்தது. அந்த நதியில் ஒருநாளுமில்லாத வெள்ளம் ஓடிற்று. வந்த பிரயாணிகள் என்னசெய்வார்கள். முன்னால் நதி, பின்னால் எதிராளி. உடனே தங்கள் குலதெய்வமாகிய சக்கதேவியிடம் தங்கள் வருத்தங்களை முறையிட, சக்கதேவியம்மாள் ஜனங்களை நடத்திவருவதில் தளகர்த்தராகிய

வீரமல்லு, கெட்டிபொம்மு என்பவர்களைப்பார்த்து நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் நான் உங்களுக்கு வழிபடுந்தெய்வமாயிருந்து உங்களைக் காப்பாற்றுவேன். என்று சொல்லி அந்த வீரர்களைப் பார்த்து நதிக்கு இக்கரைக்கும் அக்கரைக்குமுள்ள விருக்ஷங்களை ஒன்றுசேரும்படி குவியச் சொல்லு கிறேன். நீங்கள் உங்கள் பசுமாடுகளை முன்னால் நீந்த வையுங்கள். பிற்பாடு குவிந்துகிடக்கும் கிளைகளின் மேல் ஏறி நடந்து அக்கரை செல்லுங்களென, அப்படியே அக்கரையிலும் இக்கரையிலுமுள்ள மரங்கள் குவிந்து ஜலத்தின்மேல் ஒரு பாலம் மாதிரியிருந்தது. அதைக்கண்ட ஜனங்கள் தேவியாரின் கட்டளைப் பிரகாரம் பசுக்களை ஓட்டிவிட்டு, பின்பு தாங்கள் கிளை களின்மேல் ஏறி அக்கரை சேர்ந்தார்கள். கம்பளங்களுடைய பசுக்களும் கரையில் பத்திரமாய்ச் சேர்ந்தன. அப்படி முதலாவது கரையில் சேர்ந்த பசு தோக்கலவருடைய பசு. ஆகையால் தோக்கலவாருக்கு முந்தாவுல வார் என்னும் பெயருண்டு. முந்தாவுலவார் என்னும் தெலுங்குப் பதத்திற்கு முன்னால்வந்த பசுக்களையுடையோர் என்று அர்த்தம். இக்கரையில் எல்லோரும் சேர்ந்தவுடன் படிந்துகிடந்த மரங்களெல்லாம் முன் மாதிரி நிமிர்ந்துகொண்டன. பட்டணத்திலுள்ள கம்பளத்தார் தேசத்தைவிட்டுத் தென்திசையாய்ப் போய் விட்டார்களென நவாபுக்குத் தெரிந்தவுடன் அதிகாலையில் தென்திசையை நோக்கிப் புறப்பட அங்கே குறுக்கேயுள்ள நதியில் வெள்ளம் கடந்துவரக்கூடாதபடி

பிரவாகித்தது. அக்கரையில் நவாபும் அவனுடைய சேனைகளும். இக்கரையிலோ கம்பளத்தாரும் அவர்கள் சேனைகளாகிய பசுக்களும், எல்லாருக்கும் கர்த்தாவான சக்கம்மாளும்.

நவாபும் தன் சேனைகளும் தரைக்கு இப்புறம்வந்து சேர்ந்த ஜனங்களைப்பற்றி ஆச்சரியப்பட்டார்களோ, அல்லது வெள்ளம் வருமுன்னதாகவே இக்கரைக்கு வந்துவிட்டார்களென்று இருந்தார்களோ, நமக்குத் தெரியாது. ஆனால் தாங்கள்மாத்திரம் இக்கரைக்கு வர முடியாதென நிச்சயமாயிருந்தார்கள். ஆனாலும் தங்கள் பலவீனத்தை வெளியே சொல்லாமல் கம்பளத்தாரை பலமாய் பயமுறுத்தினார்கள். எவ்விதமாய் பயமுறுத்தினாலும் பயப்பட எதுவில்லை. என்ன தந்திரம் செய்தாலும் ஜலம் வற்றுமுன்னே ஆற்றைக் கடா முடியாது என்பது நிச்சயம். ஆகவே நவாபும் தன் சேனைகளும் விஜயநகரத்துக்கு ஏகினார்கள். கம்பளத்தார் தென் திசை நோக்கிப் புறப்பட்டார்கள் நவாபு விஜயநகரம் சேர்ந்தவுடன் விசாரணை செய்ததில் கம்பளத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமிருந்ததாகத் தெரியவந்தது. அதில் ஏதாவது பெண்ணிருக்குமோவென்று தேடிய போது அங்கே பெண்ணென்கிற பேரே இல்லை. நவாபுக்கு அதிக வருத்தந்தான். என்ன செய்கிறது.

ஒட்டப்பிடாரம்-சாலிகுளம்.

தென்திசையை நோக்கிச் சென்ற ஊர்களைப் பற்றி இனி பார்ப்போம். இவர்கள் ஆற்றங்கரையோர

மாய்ப் பிரயாணப்பட்டார்கள். வழியில் அநேக ஆறுகளைக்கடந்து கடைசியாய் சயற்றூற்றுக்குவந்து அதன்மேல் தங்கள் தேவியின் கட்டளைப்பிரகாரம் கிழ்முகமாய்ப் பிரயாணப்பட்டு ஒட்டப்பிடாரத்துக்கு வடமேற்கிலுள்ள சாலிகுளத்துக்குச் சமீபமாய் வந்து தங்கள் பசுமந்தைகளுடன் குடியிருந்தார்கள். அவர்கள் புறப்பட்டு இங்கு வந்துசேர இரண்டுவருஷமாயிற்று.

வேறே தொழில் ஒன்றும் பார்க்கவில்லை. பசுமாடுகளைக்காத்து மேய்த்து அவைகளின் பாலை மாத்திரம் புசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைப்பார்த்தால் அதிக சந்தோஷமுள்ளவர்களாகவே காணப்பட்டார்கள். சக்கதேவியாரின் பூஜை மாத்திரம் ஒழுங்காயும் கிரமமாயும் நடந்தேறியது. குலதேவதையும் இதைவிட்டுப் பெயர்ந்துபோக உத்தரவு கொடுக்கவில்லை.

அழகிய வீரபாண்டியபுரம்.

இவர்கள் குடியிருந்த பக்கத்துக்கு தெற்கே 2 மைல் தூரத்தில்தான் கொஞ்சக்காலத்துக்கு முன் அழகிய வீரபாண்டியபுரம் என்றும் தற்சமயம் ஒட்டப்பிடாரம் என்றும்பெயர் வழங்குகிற பட்டணம் அழகிய ஜெகவீரபாண்டிய அரசனால் ஆளப்பட்டு வந்தது. அவ்வூரில் அதிக இழிகுலத்தான் ஒருவன் மாந்திரீகத்தில் பெயர் பெற்றவனாயிருந்தான். அவனிடம் ஒரு விசேஷ சக்தியிருந்தது. அவனிடம் வருகிற எதிரியை ஒரு

பார்வை பார்த்த மாத்திரத்தில் மரணம் நேரிடும். அப்படிப்பட்டவனோடு யார் சண்டையிடுவார்கள். ஊர் அரசனை பயந்தான். அப்படிப்பட்ட அந்த ஈனகுல மாந்த்ரீகன் அப்பட்டணத்திலுள்ள ஒரு தாசி வீட்டுக்குப் போக்குவரத்தாயிருந்தான். அவன் அந்தத் தாசி வீட்டுக்குப்போய் வருகிறது. அந்தத் தாசிக்குமாத்திரம் கேவலமில்லையெனினும் அந்தத் தாசி ஜாதியாருக்கும் மற்றவர்களுக்கும், அரசனுக்கும் கேவலமாயிருந்தது. இந்த மாந்த்ரீகனைக் கொலைசெய்து விடவேண்டுமென்பது அந்தப் பட்டணத்திலுள்ள அரசன்முதற்கொண்டு சகலருக்கும் விருப்பம். ஆனால் ஒருவராலும் முடியவில்லை. அவன் பேச்சையே பட்டணத்திலுள்ளவர்கள் எடுக்கமாட்டார்கள். அவனிடம் எல்லோருக்கும் பயம்.

அழகிய பாண்டியபுரத்திலுள்ளவர்கள் சாலிகுளத்தில் குடியிருப்பவர்களைக்கண்டு முதலில் கேவலமாய்த்தான் நினைததார்கள். ஏதோ பிழைக்கவந்தவர்களென்றும், புசிக்க யாதொன்றும் கிடைக்காததால் பாலைப் புசிக்கிறார்களென்றும் நினைத்தார்கள். அதுவுமல்லாமல் மாடுகளை மாத்திரம் திரட்டிக்கொண்டு வந்தால் யார்தான் மதிப்பார்கள்? ஒருவரும் மதிக்கமாட்டார்கள். இவர்கள் தங்களைப்பற்றியாவது தங்கள் குலதெய்வத்தின் மகிமையாவது மற்றவர்களுக்குச் சொல்லவுமில்லை. கெட்டிக்காரர் பொதுவாய்த் தங்களை கெட்டிக்காரரென்று சொல்லுவார்களா? நிறைகுடம்

கிர் ததுப்புமா இவர்கள் தங்களைப்பார்க்க வருபவர்களிடம் ஒன்றும் பேசாமல் தாங்கள் கொண்டுவந்திருக்கும் பசுக்களிலிருந்து பாலைக்கறந்து சாப்பிட்டுவிட்டு தங்கள் குலதெய்வமாகிய சக்கதேவியை சதா பூஜித்துக்கொண்டு இருப்பது வழக்கம். அதிலிருந்து மேற்படியார்களிடம் ஏதோ சக்தியிருக்கிறதென்றும் அதேமாதிரியாக இவர்கள் அமைதியாயிருக்க அழகியபாண்டியபுரத்திலுள்ள சாதாரண ஜனங்களுக்கு வடக்கேயிருந்துவந்த ஆட்களின் தெய்வசக்தித் தெரியலாயிற்று. தெரிந்தவுடன் ஊரிலேயே இவர்களைப்பற்றி வீடுகள்தோறும் பேசிப்பேசிக் கடைசியில் மந்திரிவரைக்குந் தெரிந்தது.

கூடிய சீக்கிரம், காலதாமதமில்லாமல் மந்திரி தன் பட்டணத்தில் தனக்கு நிகரில்லையென்று கர்வங்கொண்டு அலையும் இந்த மாந்தரிகளை வதைசெய்து கொல்லக்கூடியவர்கள் நம்முடைய குளத்தில் பசு மந்தைகளுடன் தங்கியிருக்கும் கம்பளத்தார்களை என்று அரசனிடம் சொன்னான். ஏனென்றால் தங்களுடன் கொண்டுவந்திருக்கும் அவர்கள் குலதெய்வம் விசேஷமானது. அவர்கள் அந்தக் குலதெய்வத்தின் உத்தரவின் பிரகாரந்தான் செய்வார்கள். அவர்களிடம் விசேட பலமும், சக்தியும், தெய்வகடாட்சமுமிருக்கிறதென்று நான் கண்டறிந்திருக்கிறேனென்றும் அரசனிடம் சொல்ல, அரசனும் தன் மந்திரி வார்த்தைகளுக்கிணங்கி வடக்கேயிருந்து வந்தவர்களை தான் பார்க்க

அபேட்சைகொண்டார். அப்படியே மந்திரி இராஜாவி னிடம் அழைத்துவர ஆட்களை அனுப்பினன். போன ஆட்கள் வீரமல்லு, கெட்டிபொம்மு என்பவர்களை அரசனிடம் அழைத்துவர, அரசனும் மேற்படியார்களை மரியாதையுடன் வரவேற்பித்துக் காரியாதிகளை மந்திரி மூலமாயத் தெளிவாய்ச் சொல்ல அதற்கு வேண்டிய சிரத்தையெடுத்து அந்த ஈனசாதி மாந்திரீகனைத் தொலைத்துவிட்டால் அரசன் அதிக வெகுமதிகொடுப்ப தாய் வாக்களித்தான்.

அரசன் வாக்குத்தத்தத்திற்காக அவ்வளவு வீரச்செய்கை செய்யத் துணியாமல் மற்றவர்களுக்குக் கேவலம் வரக்கூடிய விஷயம் தங்களுக்கே வருகிற மாதிரி நினைக்கக்கூடிய அவர்கள் இராஜா கட்டளைக்குக் கீழ்ப்படிவோம் என உறுதிமொழி சொன்னார்கள். இராஜ சமுகத்தைவிட்டுப் போனவர்கள் தாங்கள் தங்கியிருக்குமிடத்திற்குச் சென்று சக்கம்மாள் தேவிக் கும் பூஜைகள் ஜெபங்கள் செய்து வரங்கேட்கவே, அத்தேவதையால் வரமும் கொடுக்கப்பட்டது. காலத் தை வீணில் கழிக்காமல் துரிதமாய் ஒருநாள் அந்த ஈனகுல மாந்திரீகன் வரும் வழியில் சென்று அவனைத் தடுக்க ஆரம்பித்தார்கள். அவன் வழக்கப்படி மற்றவர் களைச் செய்த பிரகாரமே இவர்களையும் செயித்துவிட லாமென வேண்டிய பிரயத்தனங்கள் செய்தும் ஒன்றும் பயன் படவில்லை. தான் என்ன செய்வதெனத் திகைத்து மயங்கி நின்றான். அவனிடமிருந்த சக்தியும்

வர்களையும் போய்விட்டது. சமயம் பார்த்து அவனுடைய தலையை வாங்கிவிட்டார்கள்.

தலையை வெட்டின உடன் இராஜாவை அந்த சேவனுடைய தலையுடன் கண்டார்கள். இராஜாவுக்கும், மந்திரிக்கும், ஜனங்களுக்கும் அளவிறந்த ஆனந்தமுண்டாயிற்று. என்னென்னவிதமாயெல்லாம் சந்தோஷங் கொண்டாடியிருப்பார்களென்றால் இங்கே வர்ணிக்க முடியாது. தீபாவளிப் பண்டிகை மாதிரி சந்தோஷங் கொண்டாடியிருப்பார்கள். பட்டணத்தாரெல்லோரும் இராஜாவரைக்கும் எண்ணெய் ஸ்நானஞ் செய்தார்கள். வீரர்களை பல்லக்கில் வைத்துப் பட்டணப்பிரவேசஞ் செய்தார்கள்.

இராஜா அளவிறந்த ஆனந்தங்கொண்டு என்ன வெகுமதி வேண்டுமென்று கேட்டார். அதற்குப் பதில் வீரர்கள் கேட்டுக்கொண்டதாவது எங்களுக்கு பசு மந்தை அதிகமிருக்கிறது. அதற்கு மேய்ச்சல் வசதியும் அரண்மனை மேய்ச்சலாட்களாலோ மற்ற காவல்காரர்களாலோ யாதொரு தொந்திரவுங் கஷ்டமும் எங்களுக்காவது எங்கள் மாட்டு மந்தைக்காவது நேரிடாதபடி எங்களை இராஜாவினுடைய பிள்ளைகள்மாதிரி காப்பாற்றவேண்டியது என்று பிரார்த்தனை செய்தார்கள். இவர்கள் ஒருவிதமான பிடிவாதக்காரரென்று இராஜா தெரிந்துகொண்டு அவர்களிடம் அதிக வார்த்தையாடாமல் நீங்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம் நடக்குமென்று

சொல்லி, பின்னும் நான் வேட்டையாடும்போதெல்லாம் உங்களுக்குச் சொல்லியனுப்புவேன் நீங்களும் கூட வந்து வேட்டையாட வாருங்கள் என்று சொல்லியனுப்பினார். அக்காலத்தில் இராஜாக்கள் அடிக்கடி வேட்டைக்குப்போவதுண்டு. இராஜா சொன்னபடியே வேட்டைக்குப் புறப்படும்போது சாலிகுளத்தில் குடியிருக்கும் வீரர்களுக்குச் சொல்லியனுப்ப, அவ்வீரர்களும் இராஜ கட்டளைக்கு இணங்கி வேட்டையாட வரும் வழக்கமுண்டு. வேட்டையாடும்பொழுதெல்லாம் காட்டில் இராஜா இவர்கள்மேல் அதிக தயவும் பிரியமுமுள்ளவராக இருந்தார். ஒவ்வொரு தடவையிலும் தங்களுக்கு என்ன வேண்டும். என்று கேட்கிறவழக்கமுண்டு. இவர்களும் எங்களுக்கு யாதொன்றும் வேண்டாம் இராஜாவினுடைய கிருபை மாத்திரம் இருந்தால் போதும் என்றார்கள்.

இப்படியாக வேட்டையாடுங் காலத்தில் இருமுறை மும்முறை வேட்டை நாய்கள் முயலைத் துரத்திக்கொண்டே போகும்போது ஓரிடத்திற்கு வந்தவுடன் முயல் நாயைத்துரத்த, நாய் பயந்து ஓடுகிறதை வீரமல்லு, கெட்டிபொம்மு என்பவர்கள் கவனித்து ஒருவருக்குஞ் சொல்லாமல் தங்கள் மனதில் வைத்துக் கொண்டார்கள். இந்த அற்புதசெய்கையை நம்முடைய வீரர்கள் கவனித்தபடி இவர்களை அரசனிடம் கொண்டு போய்த் தெரிவித்த மந்திரியும் தெரிந்துகொண்டார்.

வழக்கப்போல் மற்றோர் தினம் வேட்டையாடி முடிந்து வரும்பொழுது அரசன் முன் கேட்ட கேள்வியைக் கேட்க இவர்கள் வழக்கப்போல் சொன்ன பதிலைச் சொல்லிவிட்டு வந்து தங்கள் குலதெய்வமாகிய சக்கதேவியம்மாளிடம் மேற்கண்ட விஷயங்களை ஜெபத்தின் மூலமாய் ஆராதிக்க தேவியாரிடமிருந்து இடம் குறிப்பிட்டு அந்த நிலத்தை அரசனிடம் கேட்டு அதே நிலத்தில் கோட்டை கட்டுங்கள் என உத்திரவு கிடைத்தது.

மற்றோர் தினம் வேட்டையாடி முடிந்தவுடன் இவ்வீரர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன வேண்டியது என்று இராஜா கேட்க இவர்கள் சக்கதேவி குறிப்பிட்டுச் சொன்ன நிலத்தை வேண்டுமென்று கேட்டார்கள். அதுதான் அவர்கள் கோட்டைகட்டி சக்கதேவி கோவிலும் அமைத்து குடியிருந்த இடம்.

மந்திரியும் நாயை முயல் துரத்துவதையும், அவ்வீரர்களுடைய சக்தியையும் நெடுநாளாகக் கவனித்திருந்தபடியால், அரசன் மந்திரியினிடம் இவர்கள் கேட்ட நிலத்தைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்க மந்திரி சிற்சில விஷயங்களைச் சொல்லி அவர்கள் கேட்ட நிலத்தைத் தவிர வேறே இரண்டு கிராமங்களையாவது கொடுக்கலாம் அவர்கள் குறிப்பிட்ட நிலத்தைக் கொடுக்கக் கூடாதென்று உத்திரவு செய்தான். அதைக்கேட்ட அரசனும் மந்திரி சொன்னபிரகாரமாகவே உடன்பட்டு

அவர்கள் குறிப்பிட்ட நிலத்தைத் தவிர வேறே குடி யிருப்பதற்கு கிராமங்கள் தருவதாகச் சொன்னர். கம்பளத்தார் தாங்கள் இருக்கும் இடத்தைவிட்டுப் போகமாட்டார்கள். அவர்கள் அங்கு இருந்தால் அந்த இராஜாங்கத்துக்கு மோசம் வருவதாக மந்திரியும் அரசனும் நினைத்து இவர்களை எப்படியாவது துரத்தி விட வேண்டுமென்கிற கெட்ட எண்ணங்கொண்டு காட்டில் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்களைத் தன் வசம் கொண்டுவந்து சேர்க்கும்படி உத்திரவு செய்தார். அரசனுடைய ஆட்கள் பசுக்களைத் தங்கள் கைவசப் படுத்தப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கும்போது கம்பளத்தார் போய் அவர்களை யெல்லாம் மடங்கடித் துக் கொன்று விட்டார்கள். இன்னும் அரசர் சேனைக ளெல்லாவற்றையுமே அப்படி செய்தார்கள். கடைசி யாக அரசனும் அவனுடன் சேர்ந்த கொஞ்சப் படை களும் வந்தன. வீரமல்லு, கெட்டிபொம்மு என்பவர் கள் அரசன் படையையும் கொன்று அரசனையும் கொன்றுவிட்டார்கள்.

வீரமல்லு, கெட்டிபொம்மு கோட்டை.

அரசன் இறந்தபோது பட்டத்துக்கு வாரிஸ் இல்லை. வாரிஸ்தார்களும் சண்டையில் இறந்துவிட்டார் கள். அரசனுக்குக் கருமஞ் செய்யவும் ஆட்களில்லை. இறந்துபோன அரசனுக்கு 96 கிராமங்கள் இருந்தன. அக்கிராமங்களை ஆளுகை செய்வதற்கும் சரியான

ஆட்களில்லை. எல்லாவற்றையும் வீரமல்லு கெட்டு போமென்று என்பவர்கள் யோசித்துப் பார்த்து தங்கள் குலதெய்வத்தின் வாக்கினால் இறந்துபோன அரசனுக்குக் கருமஞ் செய்து 96 கிராமங்களைத் தங்கள் கை வசப்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால் மந்திரி மாத்திரம் இன்னும் அகப்படவில்லை. கடைசியாக மந்திரியைப் பிடித்துச் சிரச்சேதம் பண்ண உத்தேசித்தார்கள். தலையை வாங்க பிரயத்தனம் செய்யும்போது அம்மந்திரி ஒரு வார்த்தை அவ் வீரர்களிடம் சொன்னான். அதாவது அவர்கள் புதிதாய்க் கட்டும் பட்டணத்திற்குத் தன்பெயர் வைத்துக் கட்டச்சொன்னார். அந்த மந்திரி பேரால் தான் இன்றும் அக்கோட்டை அழைக்கப்படுகிறது. அந்த மந்திரி பெயர் பாஞ்சாலன் பிள்ளை. இவ்வீரர்களும் அந்தப் பெயரை வைத்து கட்டுகிறோமென்று வாக்களித்தார்கள் மறுபடி சிரசை வெட்டப் போனபொழுது இன்னொரு வார்த்தை. கதையில் சிங்கத்தினிடம் சுண்டெலி சில வார்த்தைகள் சொல்லி உயிர் தப்பிக்கொண்டபடி இம் மந்திரியும் தான் உயிரோடிருந்தால் 96 கிராமங்களின் கணக்கு வழக்குகளை முடித்துக்கொடுக்கக் கூடுமென்றும் சொன்னான். அதைக்கேட்ட வீரர்கள் அதுவும் மெய்தான். நாம் புதிதாய் வந்த நாட்டில் நமக்கு என்ன தெரியும் நமக்கு கொஞ்ச காலத்துக்கு இப்படிப்பட்ட ஆள் வேண்டியதுதானே என்று நினைத்து அந்த மந்

திரியைக் கொல்லாமல் வைத்துக்கொண்டார்கள். நாட்பட்டால் பகைதீரும் என அந்த மந்திரியைக் கொல்லவில்லை. ஆனால் மந்திரிப்பட்டம் அவனுக்காவது அவன் வாரிஸ்தாருக்காவது இல்லை.

45 பட்டங்களுக்கு அதிகாரிகள் என்று சொல்லப்பட்ட தேவமார்கள்தானிருந்தார்கள். பிள்ளைமார் 3 பட்டத்துக்குத்தானிருந்தார்கள். அவர்களுக்கு முந்தின இராஜாவாகிய அழகிய ஜெகவீரபாண்டியன் அப்போதுள்ள பாண்டிய இராஜாவுக்கு 2000 பொன் கிஸ்தி கட்டினன். அதே தொகையைத்தான் பின் பட்டத்துக்கு வந்தவர்களெல்லாரும் கட்டிக்கொண்டு வந்தார்கள். 2000 பொன் ரூ 4166—10—8 க்குச் சரி ஆகவே 1 பொன் இரண்டு ரூபாய். ஒரு அணு 4 பைசாவுக்குச் சரி. அவர்கள் கிஸ்தி கட்டினவிதத்தைப்பற்றிய விபரம் பின்பக்கங்களில் வரும்.

அருங்குளம் பாஞ்சாலங்குரிச்சிக்குச் சேர்ந்தவிதம்.

கட்டபொம்மு நாயக்கருக்கு 96 கிராமங்களைத் தவிர, கூட பத்துக் கிராமங்கள் கிடைத்ததற்குக் காரணம் யாதெனில் அருங்குளம் என்னும் கிராமம் வெகு காலங்களுக்கு முன்னே சூரியக்கவுண்டர் என்பவரால் ஆளப்பட்டது. அவருக்கும் மந்திரி பொன் வேலை செய்யும் ஒரு தட்டாசாரி. ஒருநாள் அந்த அரசன் தன் மந்திரியைப் பார்த்து நம்மை செயிக்கக்கூடிய அரசர்கள்

இப்பக்கத்திலிருக்கிறார்களா என்று கேட்டதற்கு அந்த மந்திரி இப்பக்கத்தில் ஒருவரும் கிடையாது என்று சொன்னார். அரசன் மந்திரியைப் பார்த்து அப்படியானால் நம்மிடமுள்ள இவ்வளவு சேனைக்கு ஏன் வீண் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று அரசன் கேட்க மந்திரி வீண் செலவுதான் என்று சொல்லி படைவீரர் அநேகரைக் குறைத்துவிட்டான்.

தற்செயலாய் அரண்மனையில் ஒரு விசேஷம் நடந்தது. அதற்கு பந்தல் போட்ட சமயத்தில் தன் படைவீரர்கள் உபயோகிக்கும் வல்லயக்கம்புகளை உபயோகித்துவிட்டான். அவ்விஷயம் அக்காலத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சி அரசனுக்குத் தெரிந்து அந்த அருங்குளத்துக்குப் போய் அவர்களை அடக்கி அருங்குளத்தைத் தன் வசமாக்கிக்கொண்டார். அந்த அருங்குள வணிதத்திற்கு 5 கிராமமும் மாவேலியோடை வணிதத்திற்கு 5 கிராமமும் ஆக பத்துக்கிராமங்கள் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சேர்ந்தன.

கெட்டிபொம்மு நாயக்கர்.

கெட்டிபொம்மு நாயக்கர் என்பது வம்சவழிப் பெயராக, பாஞ்சாலங்குறிச்சி பாளையப்பட்டாய் ஏற்பட்டு, பட்டத்துக்கு வந்தவர்களெல்லாம் இப்பெயரால் அழைக்கப்பெற்றார்கள். இப்பெயர் என்னகாரணத்தால் வந்தது என்பதைப்பற்றி அறிய ஆசைப்படுவோம். அவர்கள் ஆராதித்த தெய்வத்தின் பெயரால் அழைக்

கட்டப்பட்டதென்று தெரியவருகிறது. பொதுமு றையில், சக்கம்மாள் என்பவளை அவர்கள் குலதேவதையாய் இன்றளவும் தொழுதுகொண்டு வருகின்றனர். இத்தேவதை கள் வியாதிகளுக்கும் பாக்கியங்களுக்கும், பேறுகளுக்கும், புத்திரர்களுக்கும், மற்ற உதவி புரிவதாக அவர்கள் நம் பிக்கை. இக்கிரமத்தின் முறையால் அவர்கள் ஜாதியில் பெரியவர்களில் சிலர் பேய், பசாசு, தீராத நோய் முதலியவைகள் அணுகாமல் தடுப்பதாகவும் இன்னும் பல அரிய விஷயங்களையும் செய்து முடிக்கிறார்கள். இன்னும் சிலர் அத்தேவதைகளின் பெயரைச் சொல் லிக்கொண்டு அந்நிய தேசங்களுக்குப் போய்ப் பணம் சம்பாதிக்கிறார்கள். அத்தேவதைகள் ஒத்தாசையால் அல்லது பெயரால் ஆசீர்வாதமோ சாபமோ, பிணி வாதமோ கொடுப்பதாகி, இன்னும் எல்லாம் செய்து முடிக்கலாமெனவும் பகிரங்கமாய்ச் சொல்லுகிறார்கள்.

கோட்டையின் விஸ்தரிப்பு.

கோட்டையின் தோற்றம்.

கோட்டை கட்டப்பட்டிருக்கும் விதமாவது, சுவரின் நிருமாணம், பார்வைக்குப் பிரியம் சோபிக்க வில்லை. இப்படியில் கோட்டைக்கு உட்புறம் கட்டப் பட்ட கார் கோட்டைதான் மிகச்சிறந்ததும் பார் வைக்கு அலங்காரத்தைச் சோபிக்கக்கூடியதாயுமிருக் கிறது. அந்த அலங்காரக் கோட்டையை மறைத்துக் கட்டப்பட்ட சுற்றுக்கோட்டை 500 அடி நீளமும் 300 அடி அகலமுமாயிருக்கிறது. அக்கோட்டைச் சுவர் இரு

அகலமாயும் மேலே போகப் போக குறைவாயும் 15 அடி உயரத்தில் இருந்தது. சுவர் இரட்டைச்சுவர். சுவர்களின் இடையில் கம்பு உமியும் வாரு வைக்கோலையும் சேர்த்துச் செலுத்தப்பட்டது. இரண்டாவது சண்டைக்கு முன் கட்டப்பட்ட அந்தக் கோட்டையின் எல்லாப்பாகமும் பனஞ்சாறு சேர்க்கப்பட்டிருந்தது. காரைக் கோட்டையின் கட்டுமானம் பிரமிக்கப்படத் தக்கது. நாலு மூலைகளிலும் நாலு கொத்தளங்களும் இடை யிடையே அலங்கங்களும் கொத்தளங்களின் உச்சிகளிலும் அலங்கங்களின் உச்சிகளிலும் தங்கக் கலசங்களும் வைக்கப்பட்டிருந்தன. கோட்டையின் நான்கு பக்கங்களிலும் நான்கு வாசல்கள்.

இக்கோட்டைக்கும் மற்றக்கோட்டைகளுக்குமுள்ள வித்தியாசம்.

இக்கோட்டைக்கும் மற்றக் கோட்டைகளுக்கும் உள்ள விசேஷ வித்தியாசம் என்னவென்றால் இக் கோட்டை மலையின்மீது கட்டப்படவுமில்லை. மலையின் சரிவில் கட்டப்படவுமில்லை. கோட்டையைச் சுற்றி அகழும்கிடையாது. வெட்டவெளியில் கட்டப்பட்ட கோட்டை. இக்கோட்டைக்கு முக்கிய ஆதாரமா யுள்ளது முன்சொல்லிய சுற்றுப்பக்கத்து இரட்டைச் சுவர்தான். அதைச்சுற்றிலும் இலந்தமுள் வேலிக் கோட்டை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

கிளிக்கூட்டு அலங்கம்.

கோட்டைச்சுவரில் கிளிக்கூட்டு அலங்கம் என்ற ஒரு விசேஷ கட்டிடமிருக்கிறது. கோட்டைக்குள்ளிருப்பவர்கள் வெளியிலுள்ளவர்களை கண்டு, கத்தி முதலியவைகளைக்கொண்டு குத்தவும், இன்னும்பலவித இடைஞ்சல்கள் செய்யக்கூடியதாயும், வெளியிலுள்ளவர்கள் இவர்களை ஒன்றும் செய்யமுடியாதபடியும், மேற்படி குத்து வெட்டுகள் எப்பக்கத்திலிருந்து கிளம்புகின்றனவென அறிந்துகொள்ளக்கூடாத நிலைமையிலும் அவ்வலங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வலங்கத்திலுள் சுமார் 40 பேர் வரை இருக்கலாம்.

கோட்டைக்கு தெற்குவாசல்தான் பிரதான வாசல். அந்த வாசலுக்கு முன்னால்தான் மைதானத்திலிருந்து இராமேஸ்வரத்துக்குப் போகிற ரஸ்தா இருக்கிறது. அந்த ரஸ்தாவின் தென்பக்கம் பிராமணர்கள் வீடுகளிருக்கின்றன. அரண்மனைக்கு மேற்புறமே (தென்மேற்றிசை)யில் ஒரு பெரிய சத்திரம் பிரயாணிகளுக்கு வசதியாய்க் கட்டப்பட்டிருக்கிறது. கிழவாசலுக்கு முன்னால்தான் யானை கட்டுமிடமும் குதிரை லாயங்களுமிருக்கின்றன. மற்றும் ஆடு மாடுகள் கட்டுமிடம் அதற்குக் கிழக்கே. பாதுகாவலுக்குரிய கோட்டை பேட்டைக்கடுத்த தென்பக்கத்தில் தற்சமயம் பெண்கள் வெகு சமீபத்திலிருக்கிறது. சன்னைக்கப்புறத்தால் இந்த ஸ்தலமெல்லாம் பயங்கரமானது. கிழக்கே

கொமயிருந்தது உயர்ந்த ஜாதிகளான பிள்ளைமார். பிறகேயும் செட்டியாரும் கைக்கோளரும் தேவமார்களும் கோட்டைக்கு சமீபமாயும் கீழ்ச்சாதிகளானவர்கள் வெகுக்கு கொஞ்சம் தூரத்தில் கிழக்காயுங் குடியிருந்தார்கள்.

ஆவரங்காடு.

தற்சமயம் ஆவரங்காட்டில் குடியிருக்கிறவர்கள் கோட்டையிருந்த காலத்தில் வடக்கே தள்ளியிருந்தார்கள். அவர்கள் தினந்தோறும் மாலையிலும் இராத்திரி வேளைகளிலும் ஓயாமல் சத்தமிட்டுச் சண்டை போட்டுக்கொண்டிருந்த அரண்மனையாருக்குத் தொந்திரவாயிருந்தபடியால் அவர்களை அப்போது குடியிருந்த இடத்தைவிட்டுத் தற்சமயம் குடியிருக்கும் ஆவரங்காட்டிற்குப் போக உத்திரவு கொடுக்க குடிகள் உடனே புறப்பட்டு வந்துவிட்டார்கள். மறு தினத்தில் எல்லோருஞ் சேர்ந்து குடியிருக்கமுடியாதபடி செடிகள் அதிக மிருக்கிறதென்று பிராது கொடுத்தார்கள். பிராதைக் கேட்ட துரை மகன் காட்டை அழிக்க ஒரு பகுதி ஆட்களை அனுப்பினார். அதுவுமல்லாமல் இதற்கெல்லாம் வெகு தூரத்தில் கிழக்கே பகடைகள் வீடு 300 வரைக்குமிருந்தன. அரண்மனைக்கு வடபாகத்தில் அரண்மனையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் குடியிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களில் பிரக்யாதி பெற்றவர் **சிவசுப்ரமண்யபிள்ளை** என்பவர். அவரும்

பாளையக்காரரும் மற்றவர்களும் திருநாட்களிலும் மற்ற விசேஷங்களிலும் ஒன்றாகக்கூடி ஒரு சிறப்புச் செய்து முடிப்பதும் மற்ற விஷயங்களைச் செய்துமுடிப்பதும் அரண்மனை வடமேற்கேயுள்ள கட்டடத்தில். தானுவதிப் பிள்ளை குடும்பசகிதமாய்க் குடியிருந்தது ஒட்டப்பிடாரத்தில்தான் ஆனாலும் அவருக்குமாத்திரம் கோட்டைக்குள்ளும் ஒரு சிறு அரண்மனை பாளையக்காரர் கட்டிக் கொடுத்திருந்தார்கள். இதிலிருந்து நாயக்கர் பிள்ளையின்மீது எவ்வளவு பற்றுதலுள்ளவராக இருந்தாரென்று தெரியவருகிறது.

தெப்பங்கள்.

கோட்டைக்குத் தெற்கே இரண்டு தெப்பக் குளங்களும் வடகிழக்கு மூலையில் ஒரு பெரிய தெப்பமும் இருந்தன. வடமேற்கு மூலையில் உள்ள தெப்பம் மூன்றுபக்கங்கள் படிக்கற்களினால் கட்டப்பட்டு ஒரு பக்கம் கட்டப்படாமலிருந்தது. அப்பக்கத்து வழியாய்த்தான் யானைகள் குளிக்க இறங்கும். மற்றெல்லா தெப்பக்குளங்களும் நாலுபக்கங்களும் கற்களால் கட்டப்பட்டிருந்தன.

தேவாலயங்கள்.

வடமேற்கு மூலையிலுள்ள பெரிய தெப்பக் குளப் பக்கத்தில் ஒரு சிவாலயம் உண்டு. இது தவி இன்னும் இரண்டொரு சிறு தேவாலயங்களை தவி

வேறு ஆலயங்களிருந்ததாகத் தெரியவில்லை. கோட்டைக்குள் தென்மேற்கு மூலையில் சுப்ரமண்யசுவாமி கோவிலும், மத்தியில் சக்கதேவி ஆலயமும் அதற்கும் வடகிழக்கு பாகத்தில் மாடபீடமும் இருந்தன.

குளங்கள்.

பாஞ்சாலங்குரிச்சியைச் சுற்றி குளங்கள் இருந்தன. தென்மேற்கு மூலையில் தற்சமயம் உள்ள மூன்று குளங்களும் கோட்டை மேட்டுக்கு மேற்கேயிருக்கிற குளங்களும் இருந்தன. அதன்மேல் உண்டாயிருக்கிற பனைமரங்கள் தற்சமயம் போட்டது. தென்மேற்கு மூலையிலுள்ள மூன்று குளங்களும் பயிர் விளைச்சலுக்கே யென்று சொன்னாலும் ஒன்று ஊரணியாக உபயோகித்து வந்தார்கள். அதாவது ஆடுமாடுகளைக் குளிப்பாட்ட உபயோகித்தார்கள். மேல்பக்கத்திலுள்ள குளத்திலிருந்து பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள தெப்பக் குளங்களுக்கு மடை வழியாக ஒரு தெப்பம் நிறைந்து மற்றொரு தெப்பத்துக்குப் போகும். ஆகவே கோட்டைக்கு மேற்கே மாத்திரம் வீடுகள் இல்லை. மற்ற மூன்று பக்கங்களிலும் வீடுகள் இருந்தன.

கோட்டைக்குள்ளிருந்த கட்டடங்கள்

கட்டப்பட்ட விதம்.

கோட்டைக்குள்ளிருந்த கட்டடங்கள் திருமலை நாயக்கர் மஹால் கட்டப்பட்ட காலத்திற்கு வெகு

நாளைக்குப் பின்பு கட்டப்பட்டது. கருக்கட்டு வேலைகள் அதிக சொற்பந்தான். இரண்டுமெத்தைக் கட்டடங்களும் சொற்பந்தான். அநேகமாய்க் கட்டடங்கள் தேக்கு, தோதகத்தி முதலிய மர உத்தரங்களாலும் சுண்ணும்பு செங்கல் முதலியவற்றாலும் கட்டப்பட்டுள்ளது. அரண்மனை கட்ட செங்கல் சீவலப்பேரியில் காளவாசல் போட்டு அதன் பின்னர் காளைவாயிலிலிருந்து பாஞ்சாலங்குரிச்சி வரைக்கும் கூலியாட்களை வரிசையாக நிறுத்திக் கைவரிசைச் செங்கலாக குவிந்தது. சீவலப்பேரிக்கும் பாஞ்சாலங்குரிச்சிக்கும் சுமார் 20 மைல் தூரமிருக்கிறது. எத்தனை ஆட்கள் வேலை செய்திருக்குமென்று இச்சரித்திரத்தை வாசிப்போரே அறிந்துகொள்ளலாம். ஆகையால் அவர்கள் அக்காலத்தில் எவ்வளவு சொற்சக்தியுள்ளவர்களும், பிரபல்யமானவர்களும் அதிகாரஞ் செலுத்தினவர்களாயுமிருந்திருக்கவேண்டுமென்று அறிந்துகொள்ளுங்கள். பூர்வ காலத்தில் கட்டப்பட்ட பெரியகட்டடங்களும் கோபுரங்களும் இம்மாதிரி ஏற்பாட்டிலேயே கட்டப்பட்டது. கோட்டை கட்டப்பட்ட காலத்தில் கட்டடங்கள் சிறிதாயும் வெகு சொற்பமாயிருந்தாலும் அரண்மனையிலுள்ள குடும்பங்கள் பெருக்கப்பெருக்க அவரவர்களுக்குக் குடியிருக்க தனித்த சிறு சிறு அரண்மனைகள் கட்டப்பட்டு கோட்டை பிடிபட்ட காலத்தில் கோட்டை முழுவதுமே அரண்மனைகளால் நிறைந்திருந்தது. இந்தக் கோட்டையின் மத்தியில் நாம் முன்னே சொல்

லியபடி அரண்மனையாரின் குலதெய்வமாகிய சக்கதேவி யின் கோவில் வட்டவடிவமாய்க் கட்டப்பட்டிருந்தது. தற்சமயமும் சக்கம்மாள் கோவில் எங்கெங்கே இருக்கிறதோ அங்கங்கே போய்ப் பார்த்தால் அத்தேவாலயம் வட்டவடிவமாய்த்தானிருக்கிறது. இன்னும் விசேஷமாய் நெல் பட்டரைகள் கட்டப்பட்டிருந்தது. அக்காலத்தில் திடீரென்று மழையில்லாமல் பஞ்சம் நேரிடும். அதை முன்னிட்டு அக்காலத்துக்கு வேண்டிய உணவுப்பொருட்களை காலா காலத்தில் தேடிச் சேகரித்துப் பத்திரப்படுத்திவைப்பது வழக்கம்.

அரசு நிலைமை.

முதல் அத்தியாயத்தில் எவ்விதமாய் இச்சில்லா ஈஸ்டு இந்தியாக் கம்பெனியாருக்குக் கிடைக்கப் பெற்றது என்பதைப் பொதுவாய்க் கூறினேம். ஒரு தேசம் மற்றொரு இராஜாங்கத்தோடு சேரும்போது பலவிதமான சீர்திருத்தங்கள் செய்யப்படுவது வழக்கமே. இச்சில்லாவில் பல பாகங்கள் பாளையப்பட்டைச் சேர்ந்தவைகளா யிருந்தபடியால் சமாதான நிலைமைக்குக்கொண்டுவர சில நாட்களாயின. அதன் வரலாறு பின் வருமாறு.

மகமது அலியும் கர்னல் ஹெரானும்.

திருச்சினாப்பள்ளி நவாபாகிய மகமதலிக்கு உதவிபுரிந்ததால் டில்லி நவாப் திருநெல்வேலிக்கு தன்

திரியைக் கொல்லாமல் வைத்துக்கொண்டார்கள். நாட்பட்டால் பகைதீரும் என அந்த மந்திரியைக் கொல்லவில்லை. ஆனால் மந்திரிப்பட்டம் அவனுக்காவது அவன் வாரிஸ்தாருக்காவது இல்லை.

45 பட்டங்களுக்கு அதிகாரிகள் என்று சொல்லப்பட்ட தேவமார்கள்தானிருந்தார்கள். பிள்ளைமார் 3 பட்டத்துக்குத்தானிருந்தார்கள். அவர்களுக்கு முந்தின இராஜாவாகிய அழகிய ஜெகவீரபாண்டியன் அப்போதுள்ள பாண்டிய இராஜாவுக்கு 2000 பொன் கிஸ்தி கட்டினன். அதே தொகையைத்தான் பின் பட்டத்துக்கு வந்தவர்களெல்லாரும் கட்டிக்கொண்டு வந்தார்கள். 2000 பொன் ரூ 4166—10—8 க்குச் சரி ஆகவே 1 பொன் இரண்டு ரூபாய். ஒரு அணா 4 பைசாவுக்குச் சரி. அவர்கள் கிஸ்தி கட்டினவிதத்தைப்பற்றிய விபரம் பின்பக்கங்களில் வரும்.

அருங்குளம் பாஞ்சாலங்குரிச்சிக்குச் சேர்ந்தவிதம்.

கட்டபொம்மு நாயக்கருக்கு 96 கிராமங்களைத் தவிர, கூட பத்துக் கிராமங்கள் கிடைத்ததற்குக் காரணம் யாதெனில் அருங்குளம் என்னும் கிராமம் வெகு காலங்களுக்கு முன்னே குரியக்கவுண்டர் என்பவரால் ஆளப்பட்டது. அவருக்கும் மந்திரி பொன் வேலை செய்யும் ஒரு தட்டாசாரி. ஒருநாள் அந்த அரசன் தன் மந்திரியைப் பார்த்து நம்மை செயிக்கக்கூடிய அரசர்கள்

இப்பக்கத்திலிருக்கிறார்களா என்று கேட்டதற்கு அந்த மந்திரி இப்பக்கத்தில் ஒருவரும் கிடையாது என்று சொன்னார். அரசன் மந்திரியைப் பார்த்து அப்படியானால் நம்மிடமுள்ள இவ்வளவு சேனைக்கு ஏன் வீண் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று அரசன் கேட்க மந்திரி வீண் செலவுதான் என்று சொல்லி படைவீரர் அநேகரைக் குறைத்துவிட்டான்.

தற்செயலாய் அரண்மனையில் ஒரு விசேஷம் நடந்தது. அதற்கு பந்தல் போட்ட சமயத்தில் தன் படைவீரர்கள் உபயோகிக்கும் வல்லயக்கம்புகளை உபயோகித்துவிட்டான். அவ்விஷயம் அக்காலத்திலுள்ள பாஞ்சாலங்குரிச்சி அரசனுக்குத் தெரிந்து அந்த அருங்குளத்துக்குப் போய் அவர்களை அடக்கி அருங்குளத்தைத் தன் வசமாக்கிக்கொண்டார். அந்த அருங்குள வணிதத்திற்கு 5 கிராமமும் மாவேலியோடை வணிதத்திற்கு 5 கிராமமும் ஆக பத்துக்கிராமங்கள் பாஞ்சாலங்குரிச்சிக்குச் சேர்ந்தன.

கெட்டிபொம்மு நாயக்கர்.

கெட்டிபொம்மு நாயக்கர் என்பது வம்சவழிப் பெயராக, பாஞ்சாலங்குரிச்சி பாளையப்பட்டாய் ஏற்பட்டு, பட்டத்துக்கு வந்தவர்களெல்லாம் இப்பெயரால் அழைக்கப்பெற்றார்கள். இப்பெயர் என்னகாரணத்தால் வந்தது என்பதைப்பற்றி அறிய ஆசைப்படுவோம். அவர்கள் ஆராதித்த தெய்வத்தின் பெயரால் அழைக்

காரியங்கள் இப்படியிருக்கும்போது மதுரைக்கு மகமது யூசப் என்பவர் கம்பெனியார் உத்திரவுப் பிரகாரம் தன் சைன்யங்களோடு புறப்பட அவசியப் பட்டது. மதுரைக்கு இவர் போனவுடன் நவாபின் சகோதரர் இதுதான் சமயமென்று சேனையை திரட்டிக்கொண்டு பூலித்தேவர் ஊருக்குச் சென்று மேற்படி தேவருக்கும் அவர் கட்சிக்காரருக்கும், தான் சுத்த கைதாரென்று பிரசித்தம் செய்தார். மகமதுயூசப் திருநெல்வேலிக்குவந்து தனக்கு விரோதமாய் அதிக விஷயங்கள் நடந்தேறியிருக்கிறதென்று தெரிந்து அதை ஒழுங்குக்குக் கொண்டுவர யத்தனிக்கையில் சென்னைபட்டணம் அப்போது பிரெஞ்சுக்காரரால் முற்றுக்கை போடப்பட்டிருந்தது. அந்த முக்கியமான காரியத்துக்கு சென்னபட்டணத்திற்குப் போய்விட்டான்.

அப்போது கம்பெனியாருக்கு அனுகூலமாயிருந்த பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் இறந்து போனதையும் பட்டத்துக்கு வந்தவர் கம்பெனியாருக்கு நேர் விரோதியென்றும், பிரெஞ்சுக்காரர் வல்லமை வடபாகத்தில் உன்னத நிலைமையிலிருக்கிறதென்பதையும் பூலித் தேவர் கேள்விப்பட்டுத் தனக்கு இது ஒரு ஏற்ற சமயந்தான் என்று சந்தோஷித்தார்.

1759ல் மகமதுயூசப் திருநெல்வேலிக்கு வந்தார். மேற்கண்ட விஷயங்களைக் கண்ணாலே கண்டு காரியங்கள் மோசமாய் முடியுமெனத் தீர்மானித்து

கொல்லன்கொண்டான், கோலார்பட்டி, சுரண்டை, இக்கோட்டைகளைப் பிடித்து இடித்துச் சமமாக்கி மலையாளத்தாரோடு சேர்ந்துகொண்டார்.

இதுவுந்தவிர மகமதுயூசப் டக்சுக்காரரையும் இச்சில்லாவிலிருந்து துரத்திவிட்டார். இச்சில்லாவில் உள்ள பாளையப்பட்டுகளுக்கு அடிக்கடி அந்தரங்கமாய் ஒத்தாசை செய்தார்கள். தூத்துக்குடியையும் 1780–ம் வருஷத்தில் பிடித்துக்கொண்டார்கள்.

மகமதுயூசப் திருநெல்வேலி ஜில்லாவில் எவ்வளவோ பராக்ரமஞ்செலுத்தி உத்தியோகம்பார்த்து வந்தாராகுலும் மதுரையில்தான் இருந்தார்.

கம்பெனியாருக்கு மகமதுயூசப்பேரில் பலமான சந்தேகம் ஏற்பட்டபடியால் மதுரையில் அவரைப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள்.

இச்சமயத்தில் இச்சில்லாவிலுள்ள களக்காடும் பணக்குடியும் திருவாங்கூரைச் சேர்ந்திருந்தது. 1766–ம் வருஷத்தில் நவாபுக்குத் திரும்பவந்தது.

தேச நிலமை.

இன்னும் தேசத்தில் சமாதானமில்லை. அச்சமயம் ஜனங்களுடைய மனதில் என்னேரமும் குழப்பம். உயிருக்கு என்னேரம் மோசம் வருமோ தெரியாது. தேசத்தில் சிலவேலைகளில் பஞ்சம்நேரிட்டால் ஆதரிப்

பாரில்லை. இலட்சக்கணக்கான மரணம் நேரிட்டது. விரோதிகளான இராஜாக்கள் படை வந்தாலோ இரு பக்கங்களிலேயும் ஆயிரக்கணக்கான சேதம். வீட்டிலே அழகான பெண்கள் இருந்தாலோ சிறைகடத்துதல் அநேகம். அதை எதிர்த்தாலோ மரணம். இதுவுமல்லாமல் வைசூரியால் இறந்ததற்குக் கணக்குவழக்கில்லை. வைசூரி குத்துதல் அச்சமயம் கிடையாது. துஷ்டதேவதையால் நடக்கிறதென்று தப்பான எண்ணங்கொண்டு ஒரு பக்குவமுமில்லை. இவ்வளவு நாகரீக காலங்களிலுங்கூட அதைப்பற்றிய பேதமையானபயம் நம்மிடத்தில் உண்டு. விஷபேதிக்கோ இருப்பிடத்தை விட்டுவிட்டு ஓட்டம். இப்படியாக இச்சில்லாவில் அநேக இலட்சம் ஜனங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்பு மடிந்திருக்கிறார்கள்.

அக்காலத்தில் நவாபும், கம்பெனியாரும் சேர்ந்து தேசத்தை சமாதானத்துக்குக் கொண்டுவர வெகு முயற்சியெடுத்து 1767ல் மேஜர்பிலிண்டு என்பவரை பாஞ்சாலங்குரிச்சிக்கு அனுப்பியதில் அவரால் ஒன்றும் முடியாமல் தோல்வியுடன் திரும்பிவிட்டார். 1781ல் நவாப் கம்பெனியாருக்குத் திருநெல்வேலி ஜில்லாவின் ரெவினியூவை வசூலித்துத் தனக்கு ஆறில் ஒன்றை செலுத்தும்படி உடன்படிக்கை எழுதி ஒப்படைத்தார். எழுதிக்கொடுத்துவிட்டது லேசான காரியந்தான் பணம் கைக்கு வருகிறது கஷ்டம். தேசத்தின்

நிலைமையோ மகாமோசம். பெரிய மீனுக்குச் சிறுமீன் இரை என்றாப் போலிருந்தது. இம்மாதிரி குழப்பங் களை சீர்திருத்தம் செய்து காலாகாலத்தில் தீர்வை களைச் செலுத்துவதற்காகவுள்ள ஏற்பாடு என்ன வுண்டோ அதைச் செய்து முடிப்பதற்காகவே 1783ம் வருஷத்தில் **கர்னல்புல்லார்டன்** என்பவர் வந்து பாஞ்சாலங்குரிச்சிக்கே நேரில் போய் கோட்டையை முற்றுக்கைபோட்டார். கோட்டையிலுள்ளவர்கள் கோட்டையை விட்டுத்தப்பி ஓடிவிட்டார்கள்.

கோட்டைக்குள் போய்ப் பார்த்தபொழுது 40,000 வராகனிருந்ததாம். அதை பட்டாளத்தாரே பகிர்ந்துகொண்டார்கள். ஒரு பட்டாளம் போய் கோட்டையைப் பிடித்தால் அதிலுள்ள பொருள்களும் பணமும் அதைப் பிடித்தவர்களுக்கே. இது எப்போ தும் வழக்கம். அதுவுமல்லாமல் பாஞ்சாலங்குரிச்சிக் காரருக்கும் கொழும்பை அரசாண்டு வந்த டச்சுக்கார ருக்கும் அந்தரங்கத்தில் முடித்துக்கொண்ட ஒரு உடன்படிக்கை நகலும் கிடைத்ததாம்.

ஆகவே **கர்னல் புல்லார்ட்டன்** யார் யார் கிஸ்தி கொடுக்கவில்லையோ அவர்களை யெல்லாம் ஏற்ற காலத்தில் கிஸ்தி செலுத்தும்படி செய்தார்.

இந்த ஏற்பாடும் சரியாய் வரவில்லையென்று கண்டு, நவாப் 1792 திட்டமான உடன்படிக்கை எழு திக் கொடுத்துவிட்டார். அதுவிபரம் பின்பக்கங்களி னால் தெரியவரும்.

காவல் ஏற்பாடுகள்.

பொதுவாக மனிதர்கள் தங்களுக்கும், தங்களைச்சார்ந்த மிருகஜீவன்களுக்கும் ஆகாரம் வசதியாய்க் கிடைக்குமிடத்தில் குடியேறுவது வழக்கம். கிராமங்கள் உண்டாவதற்குக் காரணங்கள் இரண்டுண்டு. ஒன்று விபசாயத்தினால் பெருத்த வரவு வரக்கூடிய இடத்திலும், மற்றொன்று அந்நிய தேசத்தில் விளைகிற பொருள்கள் கிடைப்பதற்கேற்ற துறைமுகத்திலும். முந்தினதற்கு தண்ணீர் அவசியம். பிந்தினதற்கும் ஒருவாறு தண்ணீர் அவசியந்தான். விபசாயத்திற்கேற்ற கிராமங்கள் மலையடிவாரங்களிலும், ஆற்றுப்பக்கங்களிலும், மற்றும் வசதிகளால் தண்ணீர் கிடைக்கும் இடங்களிலும் அதுவுமல்லாமல் மழைகளால் நல்ல விளைச்சலுண்டாகும் கரைகளிலும் அங்கங்கே தினந்தோறும் தங்கள் நிலங்களுக்குப் போய் சாகுபடி செய்துவிட்டுத் திரும்பி தங்கள் வீடுகளுக்குவரும் சௌகரியத்திற் கேற்ற தூரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிந்திய கிராமங்கள் படவுகள், தோணிகள், பாய்க் கப்பல்கள் புகைக் கப்பல்கள் தாராளமாய் வந்து சேர்ந்து சரக்கைத் தரையில் தள்ளுவதற் கேற்ற வசதியுள்ள சமுத்திரத்தில் சங்கமாகும் ஆற்றுக்கரையிலோ சமுத்திரக்கரையிலோ கட்டப்பட்டிருக்கின்றன. வீடுகளிலுள்ளவர்கள் தங்கள் காடுகளுக்கோ

மற்றெந்த விஷயத்திற்கோ வீட்டை விட்டுப் போக வேண்டியதிருக்குமல்லவா? எப்போதும், எல்லோரும் தங்கள் வீட்டைக் காத்துக்கொண்டிருந்தால் பிழைப்பு நடக்குமா? இது காரியத்திற்காக கிராமத்தார் எல்லோரும் கூடிப்பேசித் தங்களில் சமர்த்தனை ஒரு மனுஷனைத் தங்கள் கிராமத்தைக் காவல் காக்கும்படி நியமிப்பார்கள். அப்படிக் காவல் காப்பவனுக்கு ஜீவனுமிசத்திற்கு கிராமத்தாரெல்லோருங்கூடி வருஷத்திற்கு இவ்வளவு தானியமென்றும் பணமிவ்வளவு என்றும் கொடுப்பது வழக்கம். இன்னும் சில கிராமங்களில் நிலங்களையும் மானிபமாக விடுவதுமுண்டு. இது தவிர காவல்காரனுக்கு அவசியம் சொத்து இருக்க வேண்டும். ஏனென்றால் தன் காவலுக்குட்பட்ட காட்டிலோ வீட்டிலோ ஏதாவது பொருட் சோர்வானல் அந்த நஷ்டத்திற்கு கிராமத்தார் சொன்னதற்குக் கட்டுப்படவேண்டும். அப்படிப்பட்ட காவலுக்குத்தான் குடிகாவல் அல்லது ஸ்தலகாவல் என்று பெயர். அப்படிக் காவல்காக்கிறவனுக்கு தலையாரி என்று சொல்லுவார்கள், இந்த உத்தியோகம் பாரம்பரைப் பாத்தியதையுள்ளது.

திசைகாவல்.

திசைகாவல் என்கிற பதத்திற்குத் தேச காவலென்றும் சொல்லலாம். ஒரு சக்ரவர்த்தி அரசாளும் தேசங்களில் திசை காவலர்கள் ஏற்படுத்தப்படுவார்கள்.

அயல் அல்லது அருகாண்மையிலுள்ள அரசர்கள் முற் காலத்தில் திடீரென்று வந்து கைப்பற்றிக்கொள்வார் கள். இச்சமாச்சாரம் சக்ரவர்த்திக்குத்தெரிந்து அதன் பிற்பாடு சைன்யங்களைத் தயாரித்து புறப்பட்டு வந்து சத்துருவைத் தன் தேசத்திலிருந்து துரத்த காலம் அதிகமாகிறபடியாலும், சக்ரவர்த்தியானவர் ஒரே திசையை நோக்கிப் போர்புரிந்துகொண்டிருக்கிற சங்கதி இன்னொரு திசையில் தெரிந்தா அத்திசையி லுள்ள எதிரி மற்றொரு திசையைக்கவர்ந்துகொள்ளாத படிக்கும், அங்கங்கே இராஜாவுக்குச் சேரவேண்டிய தீர்வையைக் காலாகாலத்தில் வசூலித்து அனுப்புவதற் காகவும், திசைகாவலர்கள் பூர்வத்தில் நியமிக்கப்பட் டார்கள். இன்னும் கிராமங்களில் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறதினால்வரும் கெடுதிகளை நிவர்த்திசெய் யவும், பக்கத்துக் கிராமங்களால் வரும் சண்டைகளை அமர்த்தவும், துஷ்டமிருகங்களால் வரும் மோசங்களி னின்று தற்காப்பதற்காகவும், ஏற்படுத்தப்பட்டார்கள். இப்படி ஏற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒரு கிராமத் திற்கு வருஷத்திற்கு இவ்வளவு பணமென்று தீர்மா னம் செய்யப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட ஏற்பாடுகள் நாயக்கர் அரசாங்கத்தில் ஏற்பட்டிருந்ததென்று நாம் சரித்திரத்தின் மூலமாய் அறிகிறோம். இவ்விதமான உத்தியோகம் அதிபராக்ரமமுள்ள பாளையப்பட்டுக் களுக்கே அளித்தார்கள். இவ்விதமாக ஏற்படுத்தப்பட் டவர்களை நிறுத்தவோ அல்லது கூட இரண்டு திசை

களைக் காவல்காக்கவோ ஏறபாடுசெய்ய அரசர்களுக்குத்தான் அதிகாரம் உண்டு. திசைகாவலர்கள் செலவுக்கு ஈடுசெய்ய ஏருக்கு இவ்வளவென்றும், தரிக்கு இவ்வளவென்றும் பொதிக்கு இவ்வளவென்றும், கோட்டைக்கு இவ்வளவென்றும் ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இம்மாதிரியான உத்தியோகத்தால் குடிகளுக்கு எல்லாவித வசதிகளும் உண்டு. சத்துருக்கள் பயமும் கிடையாது.

இவ்வுத்தியோகமுறை ஏற்பட்டது நல்லதுதான். அநேக விஷயங்கள் முதல் முதல் நன்மையாய்த்தானிருக்கிறது. ஆனால் எடுத்து நடத்துகிறவர்கள் நல்லவர்களாயிருந்தால்தான் முயற்சியும் நன்மையாய் முடியும். திசைகாவல் உத்தியோகம் ஆரம்பத்தில் குடிகளுக்கு எவ்வளவு நன்மையாயிருந்ததோ அதே அளவு கெடுதியும் துன்பங்களும் பிரஜைகளுக்கு வருவித்தது. குடிகள் அக்காலத்தில் பட்ட துன்பம் இவ்வளவுதானிருக்குமென்று நாம் இப்பொழுது கிரகிக்க முடியாது. அப்படியே அவைகளை எடுத்து எழுதினாலும் ஒருவரும் நம்பவுமாட்டார்கள். இராஜாவின் அதிகாரத்துக்குட்பட்டவர்கள் காலஞ் செல்லச் செல்ல தாங்களே இராஜாங்கத்தை எதிர்த்தார்களென்று சொல்லவேண்டும். திருநெல்வேலி ஜில்லா என்ன காரணமாய் இங்கிலீஷ் அதிகாரத்துக்குட்பட்டு விட்டதென்று இப்புத்தகம் முதல் அத்தியாயத்தில் வாசித்

தோம். இச்சில்லா நவாபின் ஆளுகையிலிருக்கும் போது 1781 வது வருஷத்தில் நவாப்தானே இச்சில்லாவின் வருமானத்தை ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியார் வசூலித்து அதில் ஆறில் ஒரு பாகத்தை தனக்குச் செலுத்தும்படியாய் ஒப்பந்தம.

1792வது வருஷத்தில் நவாபுக்கும் ஈஸ்டு இந்தியாக் சம்பனியாருக்கும் ஒரு உடன்படிக்கை நடந்தது. அதில் பணவசூல் பொறுப்பு கம்பனியாருக்குத்தான். பாளையக்காரர் கம்பனியாருக்குத்தான் கிஸ்தி செலுத்தவேண்டும். திசைகாவல் வரி சர்க்கார் கிராமத்திலிருந்து வசூலிக்கப்படாது. ஆனல் இதற்கு மாருக பாளையக்காரர், திசைகாவல் பொறுப்பு கம்பனியாரைச் சார்ந்தபோதிலும் தங்கள் மாமூலை விடப்படாதென்ற எண்ணங்கொண்டு சர்க்கார் கிராமங்களில் அதிகக் கண்டிப்பாய் வரி வசூலித்தார்கள்.

இப்படியாக அதிகாரமும் அதிகாரத்துக்குத் தகுந்தபடி தேசத்தின் மேல் தேசம் ஜெயிப்பதும் ஜெயித்த இடங்களைப் பாதுகாப்பதற்கேற்ற காவலர்களையும், தேசத்தைப் பரிபாலனம்பண்ண மந்திரிகளையும், ஸ்தானதிபதிகளையும், சேனதிபதிகளையும் பாளையக்காரர்கள் நியமித்தார்கள். பாளையக்காரர்களுக்குத் தங்கள் குடிகளிடமிருந்து தீர்வையும் சர்க்கார் கிராமங்களிலிருந்து திசைகாவல் தீர்வையும் கிடைத்தது. அங்கங்கேயுள்ள பெரியகிராமங்களில் தங்கள் அதிகாரிகளை ஏற்படுத்தினர்கள்.

இப்படியிருக்கும்பொழுது தாங்கள் யாருக்குக் கப்பங்கட்டினார்களோ அந்த இராஜாவுக்கு விரோதமாய் இன்னொரு இராஜா சண்டையிட ஆரம்பித்தபோது முந்தினவர் கம்பெனியாருடன் சேர்ந்துகொண்டார். பிந்தின நவாபுக்கு பிரெஞ்சுக்காரர் உதவிபுரிவதாக வாக்களித்தார்கள். அதுபோல் யுத்தம் நடந்தது.

கம்பெனியார் பக்கத்தார் வெற்றியடைந்தார்கள். ஆகவே கம்பெனியார் செய்த ஒத்தாசைக்கு நவாபு ஈடு செய்ய வேண்டியதிருந்தது. அப்படிச் செலவுக்குச் சரி சொல்லத்தான் நவாபு இச்சில்லாவைக் கம்பெனியாருக்கு ஒப்புவித்து பாளையக்காரரிடமிருந்து தீர்வை வசூலித்துக்கொள்ளவும் உத்திரவு பிறப்பித்தார்.

கோட்டைமேல் படையெழுச்சி.

முதல்முதலாக கிஸ்தி வசூலிக்கவந்தவர், கர்னல் ஹெரான் என்ற துரை. இவர் வந்து கிஸ்தி வசூலித்த சமயம் பாஞ்சாலங்குரிச்சியார் கிஸ்தி செலுத்த சம்மதிக்கவில்லை. அப்போது இந்தக் கர்னல் 2000 சிப்பாய்களும் 500 ஐரோப்பிய பட்டாளத்தாருடன் போய் கோட்டையை இடிக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கையில் திருச்சினாப்பள்ளிக்கு ஒரு அவசர காரியத்திநிமித்தம் புறப்பட்டுப்போனபடியால் அப்போது யெடுத்த முயற்சி தடுக்கப்பட்டது. இச்சமயத்தில் கீழ்பக்கத்தில் பாஞ்சாலங்குரிச்சியும் எட்டையாபுரம்

பாளையப்பட்டும் விசேஷமானது. மேல்பக்கத்தில் சொக்கம்பட்டி, நெற்கட்டுஞ்செவல் பாளையப்பட்டுக்கள் விசேஷமானது.

மேஜர் பிளிண்டு.

1767 ம் வருஷம் பாளையக்காரர் கிஸ்தி செலுத்த மறுத்தபடியால் மேஜர் பிளின்ற் என்பவர் பாஞ்சாலங்குரிச்சிக் கோட்டையைத் தாக்கினர். கோட்டைக்குள்ளிருந்தவர்கள் இராத்திரியே தப்பி ஓடிவிட்டார்கள்.

கர்னல் புல்லார்ட்டன்.

மறுபடியும் தேசத்தில் குழப்பங்களும் கிஸ்தி செலுத்தாமலுமிருந்தபடியால் 1783ம் வருஷத்தில் கர்னல் புல்லார்ட்டன் என்பவர் மதருஸ் கவர்ண்மெண்டின் உத்தரவின்பேரில் பெருஞ் சேனையுடன் பாஞ்சாலங்குரிச்சிக் கோட்டையைச் சூழ்ந்துகொண்டார். கோட்டைக்குள்ளிருந்தவர்கள். சமாதானத்துக்கு வர வழியில்லை. உடனே பீரங்கியால் கோட்டையைத் தாக்கப் பிரயாசைப்பட்டார். இருபக்கமும் சேதம் ஏற்பட்டது. வெகுநேரம்வரைக்கும் குண்டுகள் பொழிந்துகொண்டே யிருந்தபடியால் கோட்டைக்குள்ளிருந்தவர்கள் திகிலடைந்து கீழவாசல் வழியாய்த் தப்பி ஓடிவிட்டார்கள்.

கோட்டைக்குள்ளிருந்தவர்கள் ஓடிவிட்டார் களென்றுதெரிந்த உடன் கம்பனி சிப்பாய்களும் ஐரோப்பிய பட்டாளத்தாரும் கோட்டைக்குள் நுழைந்து, கிடைத்த பொருள்களை யெல்லாம் யெடுத்து பங்கிட்டுக் கொண்டார்கள்.

முன்னால் சொல்லப்பட்ட 40,000 வராகன்களை, யும் சொழும்பிலுள்ள டச்சுக்கவர்னருக்கும் பாஞ்சாலங் குரிச்சிக்காரருக்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கைப் பத்திரம் தகட்டில் எழுதப்பட்டதையும் எடுத்தார்கள்.

இச்சமாச்சாரம் நடந்தகாலத்திலுள்ள கட்டபொம்மு நாயக்கர் கம்பெனியாருக்கு விரோதி, ஆகையால் நெற்கட்டுஞ்செவல் பாளையக்காரராகிய பூலித்தேவருடன் சேர்ந்துகொண்டார். இப்பாளையக்காரருடைய தகப்பனாரிடம் பூலித்தேவர் வந்து தன்னுடைய சிநேகிதத்தை நாடினாலும் அவரும் எட்டையபுரத்தாரும் இடங்கொடுக்கவில்லை. ஆகவே தற்சமயம் வரை கோட்டையை மூன்று தடவை ஐரோப்பிய சுதேசப் பட்டாளங்கள் வந்து முற்றுக்கை போட்டது வாஸ்தவமே.

ரெவினியு போர்டு ஸ்தாபகம்

பாளையக்காரக் கலெக்டர் நியமுகமும் செட்டில்மெண்டு ஏற்பாடும்.

நவாபிடமிருந்து கம்பெனியாருக்கு வரவேண்டிய பணம் வருவதற்கு அதிகக் கஷ்டமாயிருந்தபடி

யால் கம்பெனியாரே ரெவினியு போர்ட்டாரை ஏற்படுத்தி (1786ம் வருஷம்) பாளையக்காரக் கலெக்டர் என்ற உத்தியோகம் வகித்த ஒரு துரையை 1790ம் வருஷத்தில் அனுப்பினார்கள். அவருடன் வேறொரு துரையை பாளையக்காரருடைய கிராமங்களை எல்லாம் சரிபார்த்து அவர்களுக்கு ஏற்பட்ட கிராமங்கள் இவ்வளவுதான் என்பதைத் திட்டப்படுத்தும்படியாய் அனுப்பினார்கள். அப்படி அனுப்பப்பட்டவருடைய பெயர் கர்னல் மேக்ஸ்வெல். இவர் செட்டில் மெண்டில் பாஞ்சாலங்குரிச்சிக் கிராமங்களில் 2 கிராமம் எட்டையபுரத்துக்குச் சேர்த்துவிட்டாரென்று பாஞ்சாலங்குரிச்சிக்காரர் வழக்கு. கடைசிவரை பாஞ்சாலங்குரிச்சிக்காரர் தகராறிலுள்ள அருங்குளம், சிவஞானபுரம் என்னும் கிராமங்களை எட்டையாபுரத்தாருக்கு ஒப்படைக்கவில்லை யெனத்தெரிகிறது. இம்மாறுதல் தங்களுக்கும் கம்பனியாருக்கும் மனவருத்தத்திற்குக் காரணம். எட்டையாபுரத்தாரோடும் மனவருத்தத்திற்குக் காரணந்தான். இவ்விஷயத்திலிருந்தே பாஞ்சாலங்குரிச்சிக்காரர் சரியாய் கிஸ்து செலுத்துகிறதில்லை. கலெக்டர் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியவுமில்லை. அக்காலம் கலெக்டர் இருப்பிடம் இராமனாதபுரம். அங்கிருந்துகொண்டு பாளையப்பட்டாருடைய கிஸ்தி வசூலிக்க அங்கங்கே உத்தியோகஸ்தர்களை நியமித்தார். இவ்வுத்தியோகஸ்தர்களைத்தவிர இராமனாதபுரத்திலும், மதுரையிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், சங்கரநயினார்கோவிலிலும்,

பாளையங்கோட்டையிலும், திருவனந்தபுரத்திலும், ஆழ்வார்திருநகரிலும், தூத்துக்குடியிலும்ஐரோப்பிய சுதேசப் பட்டாளங்கள் இருந்தன.

திருநெல்வேலிக்கு முதல் கலெக்டர்.

1801ம் வருஷத்தில் இராமனுதபுரத்திலிருந்த கலெக்டர் ஆபீசு திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டது. திருநெல்வேலியிலுள்ள கலெக்டரே இராமனுதபுரம், சிவகங்கையும் மேல்பார்த்துக்கொள்ள வேண்டிய திருந்தது.

இவர்கள் கம்பனியாருக்கு மாத்திரம் கிஸ்தி கட்டவில்லையென்று நாம் நினைக்கவேண்டுவதில்லை. அநேக நூற்றாண்டுகளாகவே இச்சில்லாவின் பாளையப் பட்டுக்களிலிருந்து நவாபுகளுக்கோ, அதற்கப்புறம் வந்த அரசருக்கோ இப்பாளையக்காரர் ஒழுங்காய்க் கட்டினதில்லை.

ஏனென்றால் நவாபுவின் காலத்திலும் அதற்கு முந்தினவர்கள் காலத்திலும் 72 பாளையப்பட்டுக்க ளிருந்ததாகப் பார்க்கிறோம். இந்த 72 பாளையக்காரரிட மிருந்தும் கிஸ்திவசூலித்து அனுப்பினவர் கட்ட பொம்மு நாயக்கர்தான். பூர்வத்தில் பணம் வசூலிப் பது சாமான்யகாரியமல்ல. பாளையக்காரருக்கும் குடி களுக்கும் இவர் மேல் அதிக மனவருத்தமும் பொறு மையுந்தான். அப்படி மற்றவர்களிடமிருந்து பணம்

வசூலித்து காலா காலத்தில் அனுப்பியபடியால் நவா புக்கு இவர் மேல் அதிகப்பிரீதி. ஆகையால் நவாபு இவரை பேட்டா என்று கூப்பிடுவாராம். பேட்டா என்னும் பதத்திற்கு மகன் என்று அர்த்தம்.

இப்படிக் கலெக்டர் ஏற்படுத்தப்பட்டதின் காரணம் 1792ம் வருஷத்தில் கம்பெனியாருக்கும் நவாபுக்கும் நடந்த உடன்படிக்கையே.

இப்பேர்ப்பட்ட சமயத்தில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையப்பட்டுகளின் குணக்கேட்டை இங்கே கொஞ்சம் வர்ணிப்பது நலமென்று தோன்று கிறது. அக்காலத்து ஜில்லா கணக்குப்படி, 31 பாளை யப்பட்டுகளிருந்தன.

சிவகிரி பாளையப்பட்டார் சேத்தூர் பாளையப் பட்டாரைக் கொன்று விட்டார். சேத்தூர் பாளையம் இன்னொருவரால் கையாளப்பட்டது. பாஞ்சாலங் குறிச்சி பாளையப்பட்டு, ஆழ்வார் திருநகரியையும், ஸ்ரீவைகுண்டத்தையும் கொள்ளையடித்தது. ஊர்க்காடு ஜமீன்தாரை 1797ம் வருஷத்தில் சிங்கம்பட்டி ஜமீன் தார் சுட்டுக் கொன்றுவிட்டார்.

ஆனால் இவ்வளவுக்குங்காரணம் அப்போதுள்ள அரசாட்சிதான். சர்க்கார் கிராமங்கள் கம்பெனியார் அதிகாரத்தில் இல்லை. அவைகளுக்கு நவாப் அதி காரந்தான். பாளையக்காரர் சம்பந்தமாய் கம்பெனியா

ருக்கு வசூலிக்கும் விஷயத்தில் தான் அதிகாரம். மற்றப்படி கம்பனியாருக்கு பாளையக்காரர்மேல் கூட அதிகாரமில்லை. ஆகவே நவாபு தான் அரசன் என்றும் அவர் அதிகாரந்தான் நடக்குமென்றும், பாளையக்காரரும் சர்க்கார் கிருமத்தாரும் தெளிவாய் அறிந்திருந்தார்கள். இது காரணத்தால் தேசமெங்கும் பெருங்குழப்பங்களும், சந்தடிகளும். ஊருக்கு ஊர் கொள்ளையும், இன்னும் பலவித ஒழுங்கீனங்களும் நடந்தேறியது.

அவைகள் எல்லாவற்றிலும் பாஞ்சாலங்குரிச்சி பாளையப்பட்டே முதன்மையானது. 1797ம் வருஷத்தில் இராமனுதபுரம் ஜில்லாவில் நடந்த பெருங்குழப்பத்தில் பாஞ்சாலங்குரிச்சியார் அங்குள்ள கலகக்காரருடன் சேர்ந்து நடத்தினர்கள். பாஞ்சாலங்குரிச்சியாருக்கு வேளாவேளையில் உதவிபுரிந்த இதரபாளையங்கள் நாகலாபுரம், காடல்குடி, மேல்மாந்தை, குளத்தூர், ஏழாயிரம்பண்ணை ஆகிய ஐந்தும். அதில் காடல்குடி, குளத்தூர், மேல்மந்தை முதலிய பாளையப்பட்டார் பாஞ்சாலங்குரிச்சிக்காரரின் இனத்தவர். அங்கங்கேயுள்ள மற்ற கிராமத்திலுள்ள குடிகளும் உதவிபுரிந்தார்கள்.

இப்படித் தாருமாறுகளும் குழப்பங்களும் நடந்துகொண்டிருந்த காலத்தில் 1797ம் வருஷம் ஜேக்ஸன் என்பவர் இராமனுதபுரம் ஜில்லாவுக்கு

கலெக்டராக நியமிக்கப் பட்டார். அவர் உத்தியோகத்துக்கு வந்த உடன் கட்டபொம்ம நாயக்கரை இராமனாதபுரத்தில் வந்து தன்னைக் கண்டு பேசும்படி உத்தரவு கொடுத்தார். இதற்கிடையில் ஆழ்வார் திருநெல்வேலியிலுள்ள இராணுவ அதிகாரியின் வீட்டில் பாஞ்சாலங்குரிச்சியைச் சேர்ந்தவர்கள் இராத்திரியில் போய் அதிக கலகங்கள் கிளப்பி, தூஷணையானவார்த்தைகளையும் பேசினார்களென்று அந்த இராணுவஅதிகாரியாகிய கேப்டன் ஹாமில்டன் துரை இராமனாதபுரம் கலெக்டரிடம் பிராது கொடுத்தார். இது நடந்தது 3—2—1798.

கிஸ்துவின் விஷயமாய் ஜெக்ஸன் கலெக்டர் 28—4—1798ல் பாஞ்சாலங்குரிச்சிக்காரருக்கு உத்திரவு அனுப்பியும் அதையும் கவனிக்கவில்லை பாஞ்சாலங்குரிச்சிக்காரர்மேல் இச்சில்லாவிலுள்ள வர்த்தகக் கம்பனியின் முதலாளித் துரையினிடமிருந்தும், நவாப் உத்தியோகஸ்தரிடமிருந்தும் இராமனாதபுரம் கலெக்டருக்கு பிராது கொடுத்ததின்பேரில், கலெக்டர் ஒரே ஒரு கண்டிப்பான ஆர்டர் போட்டார். ஆர்டர் எப்படியெனில் என் உத்தரவை மீறி நடந்து என்னை நேரில் வந்து ஒழுங்காக்கிக்கொள்ள உமக்குப்பிரியமில்லாமல் போனால் உம்முடைய பாளையத்தை பிடுங்கிக் கொள்வோம் என்றிருந்தது. இத்தடவைக்கு முன்னாலேயே இரண்டுமூன்று சமன்களுக்குக் கட்டபொம்ம நாயக்கர் ஆஜராகவில்லை.

ஆஜராகாததற்கு காரணம் என்னவென்றால் இவர் கலெக்டரை இராமனுதபுரத்திலே தான் கண்டு கொள்ளவேண்டுமென்றும், வரும்போது 30 பேர்களுக்கு அதிகமானவர்கள் பாளையக்காரரோடு வரக்கூடாதென்றும் ஆர்டர். நாயக்கருக்கோ அது பிரியமில்லை. எல்லா சர்க்கார் அதிகாரிகளைக் கண்டு பேசும் போதும் தன்னோடு தன் பரிவாரங்களைக் கூட்டிக் கொண்டு போவது வழக்கந்தான் என்று சாதித்தார்.

தான் கட்டவேண்டிய கிஸ்தியையும் காலா காலத்தில் கட்டாதபடியால் தொகையும் அதிகமாகி விட்டது. அதுவுமல்லாமல் அச்சமயம் தாத்துக்குடியில் உள்ள பட்டாளததுக்குப் பாளையக்காரர் கொடுக்க வேண்டிய, சாப்பாடு உணவுப் பொருட்களை சேகரித்துக் கொடுக்கவும் இல்லை. இது காரணங்களையிட்டு கலெக்டரிடமிருந்து அடிக்கடி ஆர்டர்கள் வந்து கொண்டிருந்தும் அவைகளை யெல்லாம் கவனியாமலும் சரியான மறுமொழி கொடுக்காமலு மிருந்துவிட்டார்.

இராமனுதபுரமும் கட்டபொம்மு நாயக்கரும்.

கடைசியாகத் தாம் நினைத்தபடியே 4000 கையாட்களோடு கலெக்டர் துரையைப்பார்க்க கலெக்டர் எங்கெங்கே முகாம் போட்டாரோ அம்மார்க்கமாய்த் தானே இராமனுதபுரம் போய்ச் சேர்ந்தார்.

4000ம் பேரையும் கோட்டைக்கு வெளியே யுள்ள இராணுவத்தோடு கலந்து கலந்து இருக்கச் சொன்னார். தனக்கு ஏதாவது மோசம் நடக்கிறதா யிருந்தால் குலவைச் சத்தத்தின் மேல் உடனே எல்லோருஞ் சேர்ந்து தன்னை விடுவிக்கும்படி உத்தி ரவு செய்தார்.

கோட்டைக்குள் கூட வந்தவர்கள் பிரவேசிக் கக்கூடாது என்ற கட்டளையினால், தானும், தன் தம்பி ஊமைத்துரையும், வக்கீல் பிள்ளையும் மற்றும் இரண் டொருவராக கலெக்டர் இருக்கும் இடத்திற்குச் சென்றார்கள். உள்ளே சென்ற உடன் கலெக்டர் துரை பாளையக்காரரைப் பார்த்து உபசார வார்த்தைகளைப் பேசிய பின்பு, வராத காரணத்தைக் கேட்க தனக்குச் சுகமில்லை யென்றும் நல்லநாள்ப் பார்த்து துரையவர் களைக் கண்டுகொள்ளவேண்டுமென்றிருந்ததாகவும் சொன்னார்.

கலெக்டர் கடிதங்கள்.

பின்பு கலெக்டர் அனுப்பிய கடிதங்கள் எல் லாம் வந்ததா என்று கேட்க ஆம் என்று ஒத்துக் கொண்டார். பின்பு கலெக்டர் தான் அனுப்பிய கடிதங் களின் நகல்களைக் கொண்டுவரச் சொல்லி தன்னிடம் உத்தியோகம் பார்த்த கோபால் அய்யரை வாசிக்கச் சொல்ல, அவர் ஒவ்வொன்றாய் வாசித்து முடித்துக் கடைசியில் ஒரு கடிதத்தை வாசிக்கும்போது நாயக்

களுக்கு மனதில் வருத்தம் நேர்ந்ததால் முகத்தில் கடு கடுப்பு தென்பட்டது. அவர் கலெக்டரிடம் சற்று நேரம் வெளியேபோய்வர உத்திரவுகேட்க அவ்வாறே கலெக்டர் மனவருத்தத்துடன் விடை அளித்தார்.

நாயக்கர் வெளியே வரும்பொழுது திடீரென்று தன் கூடவந்தவர்கள் தோளில் கையைப் போட்டு தள்ளிக்கொண்டு கோட்டைவாசலுக்கு ஓட, அங்கி ருந்த ஐரோப்பிய துரை ஒருவர் போகக்கூடாதென்று தடுத்தார். நாயக்கர் தன் கையிலிருந்த வாளால் துரை யைக் குத்தித் தரையில் வீழ்த்திவிட்டு கோட்டை வாசலுக்கு வெளியே குலவைச் சத்தமிட்டுக்கொண்டு வந்தார். பிற்பாடு நாயக்கர் தம்பி ஊமைத்துரையும் கோட்டைக்கு வெளியே தப்பி ஓடிவந்துவிட்டார். ஆனால் கூடப்போன வக்கீல்பிள்ளையையோ கைதி செய்து திருச்சினப்பள்ளிக்கு அனுப்பிவிட்டார்கள்.

குலவைச் சத்தத்தைக் கேட்ட பாளையக்கார ரின் ஆட்கள் கம்பெனியார் சேனையுடன் போர் புரிந்து விட்டு பாளையக்காரரோடு வந்து சேர்ந்து, எல்லோரு மாகத் தமது நாட்டுக்கு வரும்வழியில் அநேக கிராமங் களையும் கொள்ளையடித்துக்கொண்டே வந்தார்கள். இதுவிஷயத்தைத்தெளிவாய் அப்போதுள்ள கலெக்டர் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தார்.

கலெக்டரிடமிருந்து நாயக்கருக்கு வந்த கடிதத்தின் சாராம்சம்.

நாயக்கர் இராமனாதபுரம் கலெக்டரைப் பார்த்த சமயம் கிளார்க்கு என்னும் துரையைக் கொன்றதாயும், அந்த காரியத்திற்காக இராமனாதபுரம் கலெக்டரிடமாவது அல்லது திருச்சிராப்பள்ளியிலிருக்கும் பட்டாளத்து அதிகாரியிடமாவது ஆஜராகாமற் போனால், தனக்கு நேரிடப் போகிற கெடுதிகளைத் திட்டமாய் அவர் அறிந்துகொள்ளவேண்டியது என்ற கட்டளையை நிறைவேற்ற இரண்டு உத்தியோகஸ்தர்கள் இராமனாதபுரம் கலெக்டர் கச்சேரியிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு 12—10—1798ல் போனார்கள். இவர்களிருவரும் போனதும் நேரே கோட்டைக்குப் போய் வாசலிலுள்ளவர்களிடம் இராமனாதபுரத்திலிருந்து இரண்டு உத்தியோகஸ்தர்கள் வந்திருக்கிறார்களென்று சொல்லியனுப்ப, பாளையக்காரர் வந்து வேண்டும் உபசாரணைகள் செய்து, வந்த காரணம்யாது என்று விசாரித்து, இருவரும் வந்த விஷயத்தைச் சொல்லி: தங்களிடமிருந்த விளம்பரத்தைக் கொடுக்க, பாளையக்காரர் அசல் இருக்கிறதா என்று விசாரித்தார். அதற்கு ஆம் என்று சொல்லி அசலைக் கொடுக்க எங்களுக்கு உத்திரவில்லை என்று சொல்லி இரண்டையுமே கொடுத்தார்கள். கலெக்டர் க்ஷேமலாபங்களை விசாரித்துவிட்டு அவர்களிருவரையும் அரண்மனைக்குக் கூட்டிக்

கொண்டு போய் அங்கே ஓரிடத்தில் தாமதிக்கச் செய்துவிட்டு அரண்மனைக்குட் போகும் போது அவர்கள் கொடுத்த ரிக்கார்டைத் திரும்பக் கேட்டார்கள். பார்த்துவிட்டுத் தருவதாக வாக்களித்து விட்டு உள்ளே போய் அரண்மனையிலுள்ள உத்தியோகஸ்தரிடம் யோசித்துப் பின்பு அவர்களிடம் அசல் ரிக்கார்டைத் தந்துவிட்டார். பார்த்து முடிக்க இரண்டுமணி நேரமாயிற்று. நேரமாகிறது என்று சொல்லிவிட்டு கோட்டைக்கு வெளியேயிருக்கிற ஒரு பிராமணுள் வீட்டில் இருந்தார்கள். இதற்கிடையில் ரிக்கார்டுகளை பல்லக்கில் வைத்து ஊர்கோலம் செய்து பின்பு அவர்களிடம் திரும்பக்கொடுத்து அவர்களிருவருக்கு தலைக்கு லேஞ்சியும் கொடுத்து, வந்த விளம்பரத்துக்கு பதில் ஓலையும் எழுதி அவர்களிருவரோடுங்கூட தன் ஆள் மூலமாய் 13—10—1798ல் அனுப்பினுர். அந்த ஓலையின் விபரமாவது:- கம்பனியாருடைய ஆர்டர் அவருக்குக் கிடைத்தது. கலெக்டருடைய ஆர்டர்களையும் பெற்றுர். கம்பனியாருடைய உத்தரவுகளுக்குச் சதா கீழ்ப்படிய ஆவலுள்ளவரு யிருந்தார். கலெக்டர் திருக்குற்றுலத்திலும் சொக்கம்பட்டியிலும், சேத்தூரிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் தனக்கு பேட்டி கொடுக்காததால் இராமனுதபுரம் வரைக்கும் பேரையூர், பாவலி, பள்ளிமடம், கமுதி மார்க்கமாய்ப் போனுர். தன் மனதில் கலெக்டர் ஏதோ கெடுதி செய்யப் போகிறுர் என்று நினைத்தபடி தான் எப்போதும் பார்த்த இடத்

தில் பெட்டி கொடாமல் வேறொரு இடத்தில் சொடுத்ததாகவும் கலெக்டரைப் பார்க்கப்போன சமயம் தன்னுடன் வந்தவர்களை கோட்டைக்குள் விடவில்லையென்றும், தன்னுடைய ஆட்களுக்கும் கம்பனியார் சேவகர்களுக்கும் சண்டை நடந்தது தனக்குத்தெரியாதென்றும், தன்னைச்சேர்ந்த ஆள் ஒரு துரையைக்கொன்ற சமாச்சாரம் தன்ஆட்கள் மூலமாய்த்தான் தெரியுமென்றும், தன்னுடன் கொண்டுபோன கிஸ்திப்பணம் மற்றப்பொருட்களை எல்லாம் கம்பெனியார் ஆட்களே கொள்ளையடித்து விட்டார்களென்றும், தான் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு வெளியேறினதே தெய்வச் செயல் என்றும் எழுதியிருந்தது.

இன்னும் கலெக்டர் பாளையக்காரரைப் பார்த்து சர்க்கார் கிராமத்தில் உம்மால் குழப்பங்கள் நடந்ததற்குக் காரணமென்னவென்று கேட்டதில் அப்படி அவர் செய்தார் என்று ஜனங்கள் நேரில் வந்து ருசுப்படுத்தினால் அதற்குத் தான் பொறுப்புதார் ஆவார் என்றும், இவருக்குக் கோட்டைக்குள் தங்க ஒரு அரண்மனை கொடுப்பதாய்ச் சொன்னதற்கு இவர் தன் தகப்பனார் வைசூரியில் இறந்துபோனபடியால் தனக்கு வைசூரியைப்பற்றிய பயமிருக்கிறதென்றும் சொன்னார். ஏனென்றால் அச்சமயம் கோட்டைக்குள் வைசூரிநடந்ததாம் மேலும் கலெக்டர் தூத்துக்குடிக்கு வந்த சமயம் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்ததாகவும் அச்

சமயம் பாளையக்காரரிடம் அதிகப் பிரியமுள்ளவராக இருந்ததாகவும் எழுதினர்.

தன் வக்கீல்பிள்ளையைக் கைதியாக்கித் திருச்சினப்பள்ளிக்கு அனுப்பிவிட்டதாகக் கேள்விப்பட்டார் என்றும் எழுதினர்.

முடிவிலே தன்மேல் எப்போது கலெக்டர் துரையவர்களுடையதயவும், கம்பெனியார் தன்னைப் பிள்ளைமாதிரி பாவித்து நடத்தவும், கைதியாக்கப்பட்ட வக்கீலை விடுதலை செய்யவும் பிரார்த்தித்தார். தனக்குச் சமயாசமயம் ஏற்ற ஆலோசனை கொடுத்தால் அதன்படி நடப்பதாயும் எழுதினர்.

கலெக்டர் மேற்கண்ட ஓலையை வாசித்துப் பார்த்துவிட்டுத்தான் ஊர் ஊராய் அலையவைக்கவில்லை என்றும் திருக்குற்றாலத்துக்கு நாயக்கர் பார்க்க வந்த சமயமே அடுத்தமாசம் 5-ந்தேதி இராமனாதபுரத்துக்கே வரவேண்டியது என்று எழுதிவிட்டதாகவும் சொல்லுகிறார். இவ்வாறாக நாயக்கர் எழுதின பதில் ஓலைக்கு முகாந்தரங்கள் கூறுகிறார். எப்படியெனில் நடக்கும் விஷயங்கள் வெளிப்படையாய் நடக்கவேண்டுமென்றே தான் செய்ததாகவும் அந்தரங்கத்தில் யாதொன்றும் செய்யப்படவில்லையென்றும் கலெக்டர் சொன்னர்.

கவர்ன்மெண்டார் இருதாரத்தாருடைய வாக்கு மூலங்களையும் அவரவர்களுடைய சாட்சியங்களையும் வாசித்துப்பார்த்துக் கேஸை விடுதலை செய்தார்கள். அதுவுமல்லாமல் கலெக்டரை இராமனுதபுரத்தைவிட்டு மாற்றி வேறொரு உத்தியோகங்கொடுததார்கள். ஜேக்ஸன் துரைக்கப்புரம் லஷிங்டன் என்பவர் இராமனுத புரத்துக்கு கலெக்டராக வந்தார். அவர் உத்தியோகத்துக்கு 1799ம் வருஷத்தில் வந்தவுடன் கட்டபொம்மு நாயக்கருக்கு கேஸின் விடுதலையைப்பற்றி ஒரு சந்தோஷகரமான கடிதம் எழுதி அக்கடிதத்திலேயே தாம் கம்பெனியாருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்திபாக்கித் தொகையையும்பற்றி ஞாபகப்படுத்தும் விதமாய் எழுதினர்.

அக்கடிதத்தை கட்டபொம்மு நாயக்கர்வாசித்துப் பார்த்து அதற்கு பதில் அதிக வணக்கமாய் கம்பனியாருக்குத்தான் பிள்ளையென்றும், தனக்கு கஷ்டகாலத்தில் கம்பனியார் தான் சகாயஞ் செய்யவேண்டுமென்றும் இன்னும் பல பல ஸ்தோத்திரங்கள் செய்துயெழுதி தம்மிடம் வக்கீல் உத்தியோகம் வகித்த பொன்னையா பிள்ளை வசம் இராமனுதபுரத்துக்குக் கொடுத்தனுப்பினர்.

கொள்ளைகள்.

காளையார்கோவில்.

இச்சங்கதிகள் நடந்துகொண்டிருக்கும் போது தனக்கு திசைகாவல் தீர்வை காளையார் கோவிலி

விருந்து வரவேண்டியதிருக்கிறதென்று சில ஆட்களை அனுப்பி மேற்படி தொகையை வசூலிக்க உத்தரவு பிறப்பித்தார். போன ஏவலாட்கள் போய் காளையார் கோவிலிலுள்ள ஜனங்களை அதிக நிஷ்டூரஞ் செய்த விஷயத்தை மேற்படி ஊரிலுள்ள தாசில்தார் கலெக்டருக்கு ரிப்போர்ட் செய்தார்.

மறுபடியும் சில தினங்களுக்குள்ளே காளையார் கோவிலுக்குச் சமீபத்திலுள்ள கிராமத்தில், மேற் சொன்னபடியே அக்கிராமத்திலுள்ள குடிகளைக் கஷ்டப்படுத்தினதாக மறு பிறுது கலெக்டருக்குத் தாசில்தார் செய்தார்.

காரியங்கள் இப்படியிருக்கும்போது பாஞ்சாலங் குறிச்சிக்காரருக்கும் நாகலாபுரத்துக்காரருக்கும் அதிக ஐக்கியம் ஏற்பட்டது. நாகலாபுரத்துப் பாளையக்கார ரும் பாஞ்சாலங்குறிச்சிக்காரரும் ஒரே ஜாதி. நாகலா புரம் சில்லவார். பாஞ்சாலங்குறிச்சி தோக்கலவார். பாஞ்சாலங்குறிச்சி மாதிரியே நாகலாபுரமும் விசே ஷித்த பாளையப்பட்டுத்தான். தற்சமயம் பாஞ்சாலங் குறிச்சிக்காரர் செய்யும் சகலவித சண்டைகளிலும் குழப்பங்களிலும் நாகலாபுரத்தார் தங்களால் இயன்ற உதவிசெய்துவந்தார்கள்.

அருப்புக்கோட்டை, கோபாலபுரம்.

அக்காலத்து ரெவினியு டிவிஷன்படி இராமநா தபுரம் ஜில்லாவிலுள்ள அருப்புக்கோட்டை, கோபால

புரம் என்னும் கிராமங்களில் காவல் வரி வசூலிக்கப் போனபோது நாகலாபுரத்துப் பாளையப்பட்டார் 300 ஆட்களை அனுப்பினர். இவர்களெல்லோருஞ் சேர்ந்து மேற்சொன்ன இரண்டு ஊரையுங் கொள்ளை யடித்தார்கள். கொள்ளையடிப்பதோடுங்கூட கொடூர வதைசெய்வதும், கொலை செய்வதும் கைதிகளாக்கிச் சிறைச்சாலையில் பட்டினியாய்ப் போடுவதும், கைதி களையே தங்கள் தலைநகருக்குக் கொண்டு அடிமைகளாக வைத்துக்கொள்வதும் வழக்கமாயிருந்தது. இக்காலத் திலேயே ஒரு சர்க்கார் கிராமத்தில் பெரியதனக்காரர் சர்க்காருக்காக நிலத்தீர்வை வசூலித்ததை மேற் படி பாளையக்காரர் ஆட்கள் ஒன்று பல இம்சைகள் செய்து பணத்தை பலாத்காரமாய்க் கைப்பற்றிக் கொண்டதையுஞ் சர்க்கார் ரிக்கார்டுகளிலிருந்து வாசிக் கிறோம். இன்னொரு தடவை நல்லெண்ணெய் விற்கும் ஒரு வியாபாரியிடம் இந்த மாதிரியே அடித்து பல கேவலங்கள் செய்து எண்ணெய் விற்ற பணத்தையும் அபகரித்துக்கொண்டார்கள்.

இன்னும் ஓர் தடவை மேற்படி பாளையக்காரர் ஆட்கள் ஒரு சத்திரத்திற்குப் போய் அங்கேயுள்ள பிராமணரொருவரிடம் பல அவதூரான வார்த்தைகள் பேசி கன்னத்தில் அடித்து இழுத்துக் கீழே போட்டு உதைத்துத் தள்ளினார்கள்.

குரும்பூர்.

மாநாடு, குரும்பூர் என்னும் இடங்களில் காவல் தீர்வை செலுத்தாததற்கு அடித்ததில் சில ஜனங்களுக்கு கைகால் முறிந்துவிட்டது. அதே சமயத்தில் அப்பாகங்களில் நெய் விற்றுவந்த இரண்டு பெண்களிடமிருந்து தாங்கள் நெய் விற்றுவந்த பணத்தையும் அவர்கள் போட்டிருந்த ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் களைந்துவிட்டார்கள். இம்மாதிரி எதிர்பாராத துன்பங்களை திடீரென்று அனுபவிக்க வேண்டியதிருந்ததாலும், காவல் வசூலிப்பதற்கு அக்காலத்து முறைமைப்படி பெருங் கூட்டமாக வருவார்கள். வந்தவர்களெல்லாருக்கும் வழக்கமாகிய வரியைச் செலுத்துவதுமல்லாமல் வெற்றிலை, பாக்கு, புகையிலை, மற்றச் சகலவிதமான காரியாதைகளும் செய்து ஜனங்கள் அலுத்துப்போனபடியாலும், தங்களுக்கு அக்காலத்தில் இப்படிப்பட்ட கஷ்டங்களினின்று விடுவிப்பதற்கு யெவருமில்லையெனத் தெரிந்து சில கிராமங்களிலிருந்து ஜனங்கள் எங்கேயாவது ஓடித் தப்பிப் பிழைக்கிறது வழக்கம். இவைகளெல்லாம் 1799ம் வருஷத்தில் நடந்தன.

இப்படித் தாறுமாறுகளுக்குக் காரணம் ஒரே அதிகாரத்துக்குள்ளிராதபடி இதை வாசிப்பவர்களுக்குத் தெரிந்தபடி நவாபுக்கும் கம்பனியாருக்கும் பொதுவான அதிகாரமாயிருந்ததுதான்.

இப்படி அதிகாரந்தான் தேசத்தைப் பாழாக்கினதா? இடைக்கிடையே மழைத் தாட்சியால் கொடிய பஞ்சம். அதனுலேயும் ஜனங்கள் அதிகக் கஷ்டமடைந்தார்கள்.

சில பாளையக்காரர் நவாபுக்கும் கம்பனியாருக்கும் கீழ்ப்படியாமலிருந்ததற்கும், கிஸ்தி கட்டாததற்குங் காரணம், அச்சமயம் இந்தியா இருந்த நிலைமை. அதாவது திருச்சினுப்பள்ளி நவாபுக்கு எதிரியாகிய சந்தா சாயபும் அவருக்கு ஒத்தாசை செய்த பிரெஞ்சுக்காரரும். பிரெஞ்சுக்காரருக்கும் மற்ற ஐரோப்பிய இராஜாங்கத்தாருக்கும் எவ்வளவு பெரிய பெரிய யுத்தங்கள் ஐரோப்பாக்கண்டத்தில் நடந்தனென்று நமக்குத் தெரியும். பிரெஞ்சுக்காரருக்கு இராஜாவும் தளகர்த்தனுமான நெப்போலியனுடைய சரித்திரத்திரத்தை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். நெப்போலியனுக்கு எப்போதும் இந்தியாவின் மேலேயே நோக்கந்தான். பாளையக்காரர் முரண்டுத்தனம் பண்ணினதற்கு இது ஒரு காரணம்.

திப்பு சுல்தான்.

இரண்டாவதாக திப்பு சுல்தானுக்கும் ஈஸ்டு இந்தியாக் கம்பனியாருக்கும் ஓயாத சண்டை, சண்டையிலெல்லாம் இங்கிலீஷ்காரர் தோற்றுப் போனார்கள் என்ற பொய் வதந்தியும் பரவிற்று. அதைக் கேட்டவுடன் சில பாளையக்காரருக்கு சந்தோஷம்.

கடைசியாக, கொழும்பு அக்காலத்தில் டச்சுக் காரரைச் சேர்ந்தது என்றும் அந்த கவர்ணருக்கும் பாஞ்சாலங்குரிச்சிக்காரருக்கும் ஒரு உடன்படிக்கை நடந்ததென்றும் அந்த உடன்படிக்கை செப்பத்தகட்டு நகலை கர்னல்புல்லார்டன் என்பவர் பா. கோட்டையை முற்றுக்கைபோட்டு பின்பு இடித்துக் கோட்டைக்குள் போன சமயம் எடுத்தார்களென்றும் முன்னமே வாசித்தோம். அதுவுமல்லாமல் போதுமான பீரங்கிக் குண்டுகளும், மருந்துகளும் அங்கே யிருந்ததென்றும் பார்த்தோம். அந்த அந்தரங்க சிநேகிதம் வெகு நாட்களாகவே யிருந்தது. இச்சில்லாவில் அவர்களுக்கு அநேக இடங்கள் சொந்தமாயும் அந்த இடங்களில் வியாபாரம் அதிகமாய் நடத்தினார்களென்றும் நாம் சரித்திரத்தின் மூலமாய் வாசிக்கிறோம். அவர்கள் ஒத்தாசை செய்வார்களென்ற நம்பிக்கையுமிருந்தது.

பின்னால் நமக்குத் தெரிந்தபடி இவர்கள் நினைத்த ஒவ்வொரு காரியமும் சிதைந்து போனது. இந்தியாவில் பிரெஞ்சுக்காரரை கம்பனியார் அநேகந் தட்வை ஜெயித்தார்கள். திப்பு சுல்தானை 1799ம் வருஷத்தில் சீரங்க பட்டணத்தில் பிரிட்டிஷ்காரர் கொன்றுவிட்டார்கள். டச்சுக்காரர் கையிலிருந்த தூத்துக்குடியும் அதைச் சார்ந்த மற்றக் கிராமங்களும் ஈஸ்டு இந்தியாக் கம்பனியார் கையில் கிடைத்தது.

இதற்கு முன்னதாக கெழுதி வட்டகையில் நாகலாபுரத்தாரும் பாஞ்சாலங் குரிச்சியாரும் செய்த அநேக தீச்செயல்களைப்பற்றிப் பார்த்தோம். அவர்கள் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் அந்தந்த ஸ்தலத்திலுள்ள தாசில்தாரோ அல்லது வேறெந்த உத்தியோகஸ்தரோ தங்களுக்கு அருகிலுள்ள இராணுவ உத்தியோகஸ்தருக்கோ, கலெக்டருக்கோ தெரிவித்துக்கொண்டே யிருந்தார்கள். கலெக்டர் அங்கங்கேயுள்ள இராணுவ அதிகாரிகளுக்கும் பிரசி டெண்டு ரெவினியு போர்டுக்கும் ரிப்போர்ட் செய் தார். அதே காலத்தில் கட்டபொம்மு நாயக்கருக்கும் அநேக சம்மன்கள் ஆஜராகும்படி அனுப்பினார். கடைசிவரை கலெக்டரிடமிருந்து வந்த சமன்களைக் கவனிக்கவில்லை.

எட்டையபுரத்தாருக்கும் பாஞ்சாலங்குரிச்சிக் காரருக்கும் ஷெட்டில்மெண்டு விஷயமாக மனஸ்தாபம் ஏற்பட்டது. எப்படியெனில் இரண்டு கிராமத்தை (முன்னே பாஞ்சாலங்குரிச்சியைச் சேர்ந்தது) எட்டையபுரத்துக்குச் சேர்த்துவிட்டாயிற்றென்று அறிந்து கடைசிவரை மேற்படி கிராமங்களை எட்டையாபுரத் துக்கு ஒப்படைக்கவில்லை என்று முன்னமே பார்த் தோம்.

அச்சங்குளம் வண்டானம்.

ஒருசமயத்தில் அச்சங்குளம், வண்டானம் என் னும்இரண்டு எட்டையாபுரத்துக் கிராமங்களுக்குப்

போய் அங்கே விளைந்திருந்த கதிர்களை எல்லாம் அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அதுகாரியத்தை எட்டையபுரத்தார் மேற்படியார்மீது கலெக்டருக்கு ரிப்போர்ட்டு செய்திருந்தார்கள்.

சோளபுரம்.

அக்காரியம் நடந்து சிறிது தினங்களுக்குப் பின்பு எட்டையபுரம் கிராமங்களில் ஒன்றாகிய சோளபுரத்துக்குப் பாஞ்சாலங்குரிச்சி ஆட்கள்போய் அநேகம் ஆடுமாடுகளை அடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்த விஷயத்தையும் எட்டையபுரத்தார் பாஞ்சாலங்குரிச்சியார்மீது பிராது கலெக்டரிடம் கொடுத்தார்கள்.

அற்பத்தனமான விஷயங்களை கட்டபொம்மு நாயக்கரே செய்திருப்பாரோ அல்லது அவர் கையின்கீழ் உள்ள உத்தியோகஸ்தர்கள் செய்திருப்பார்களோ என்பது சந்தேகம். பெரியபெரிய காரியங்களைத் தடையின்றிச் செய்திருப்பாரென்று நம்பலாம்.

பிராதுகள் மேல்பிராதுகள்வர கலெக்டருக்கு அதிக மனவருத்தமாயிருந்தது. நேரில் கண்டுபேசி சங்கதிகளை முடிவுக்குக் கொண்டுவர நோக்கங்கொண்டு சமன்களின்மேல் சமன்கள் அனுப்பினாலும் பாளையக்காரர் வர ஏதுவில்லை. அதன்மேற் கலெக்டர் சென்னை கவர்ன்மெண்டாருக்கு நடந்த விஷயங்களையெல்லாம் தெளிவுற எடுத்துக்காட்டி, அதேசமயம் இராணுவ அதிகாரிகளையும் ஜாக்கிரதை செய்தார்.

பானர்மன் துரையும், கட்டபொம்மு நாயக்கரும்.

அந்தக்காலத்தில் இராணுவ அதிகாரிகளில் மிகச்சிரேஷ்டமானவராகிய மேஜர்பானர்மன் திருவனந்தபுரத்திலிருந்தார். அவரிடம் கலெக்டர் ரிப்போர்ட் போக அவர் அங்கில்லாதபடியால் பாளேயங்கோட்டை இராணுவ ஸ்தல அதிகாரிக்கு அனுப்பப்பட்டு அவர் கலெக்டருக்கு பதில் உத்திரவளித்தார்.

பாளேயக்காரரர் கம்பனியார் உத்திரவுக்கு கீழ்ப்படியாமலிருந்ததற்குக் காரணங்கள் பலவற்றை முன்னமே சொன்னேன். இன்னும், அவர்கள் சண்டை போடலாம் என்றும் கம்பனியாரையும் நவாபையும் ஜெயித்துப் போடலாமென ஒரு தைர்யமும் மனதில் அதிக பலமாக இருந்தது. 1755ம் வருஷத்தில் கர்னல் ஹெரான் படை எழுச்சியில் இவர்கள் தோற்றுப்போகவில்லை யென்று தாங்களே நினைத்துக்கொண்டார்கள். காரியத்தைப் பார்க்கும்பொழுது அப்படியல்ல. ஒரு அவசரத்தால் கர்னலும் சேனையும் வடக்கே போய் விட்டது என்று நாம் முன்னமே பார்த்தோம். இரண்டாந்தடவை 1767ல் மேஜர் பிளிண்டு என்பவரும் உண்மையாகவே சண்டையிடாமல் ஒரு அவசர வேலையினிமித்தமே பின்னடைந்தார்கள். இன்னும் பாஞ்சாலங்குரிச்சிக்காரருக்கு அனுசரணையாய் இச்சில்லாவிலுள்ள பாளேயப்பட்டுகள் இரண்டு மூன்று தவிர

மற்றையப் பாளையப்பட்டார் எல்லாமே பாஞ்சாலங் குரிச்சிக்காரருக்கு உதவி செய்தார்களானாலும், அவற்றில் விசேஷமாய் அவர்களுக்குக் கடைசிவரைக்குந் துணையாக நின்றது ஏழாயிரம்பண்ணை, நாகலாபுரம், கோலார்பட்டி, காடல்குடி, குளத்தூர் இவைகளே.

பாஞ்சாலங்குரிச்சிக்காரர் தைர்யம்.

பாஞ்சாலங்குரிச்சிப் பாளையக்காரரே அதிக பலசாலியும், தைர்யச்சித்தமும், அஞ்சாத்தன்மையும் வாய்ந்தவர். அவர் அவ்வளவு பலசாலியாயும், மனத் தைர்யமாயுமில்லாவிட்டால் இராமனாதபுரம் கோட்டையிலிருந்து அவ்வளவு பட்டாளத்தார் காவலிலிருந்து தப்பி பாஞ்சாலங்குரிச்சிக்கு வந்திருக்கமாட்டார். அவர் அரண்மனையிலுள்ள சேனைத்தலைவர்களை வீரத்திலும், பராக்கிரமத்திலும் அவர்களுக்கு நிகரானவர்கள் அக்காலத்திலில்லை. தேசத்தின் ஒழுங்கோ தேகாப்பியாச வழியில் சிறந்ததாகவே யிருந்தது. மனிதர்களின் தேகநிலைமையோ வெகு சுமார். நமக்குத் தெரிந்தபடி பூர்வத்தில் ஆண்களோ பெண்களோ திடகாத்திரர்களாயிருந்து பலசாலிகளாயிருந்தால் தான் பூமியில் காலந்தள்ளலாம். கிராமம் என்னேரம் யாரால் கொள்ளையடிக்கப்பட்டு உயிர்கள் சேதமாகுமென்று ஒருவருக்குந் தெரியாது. கிராமத்திலுள்ள ஆட்களின் பெருக்கும் பராக்கிரமத்தின் பெயருந்தான் கிராமத்துக்கு யாதொரு மோசத்தையுந் தருவிக்காது.

கலியாணம் செய்யப் பெண்கள் கேட்கப்போனால் மாப்பிள்ளையின் பலத்தை பற்பல வகையில் சோதிக்கிறதுண்டு. சத்துராதிகளினின்று திடீரென வரும் விபத்தை நிவர்த்திபண்ணிக்கொள்ளவும் பலம் இன்றியமையாத அவசியம். அரசனுக்கு ஒத்தாசையாய் நின்று போர் புரியவும் பலம் வேண்டும்.

தேகாப்பியாசங்கள்

இதுகாரியங்களுக்காகவே பூர்வத்திலே ஒவ்வொரு வாலிபனும் தேகாப்பியாசங்கள் செய்து தேகத்தை வளர்த்தான். பூர்வத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இளவட்டக்கல் ஒன்று அல்லது இரண்டு தூரத்தில் தெருக்களில் வெளியே கிடக்கும். அந்நிய இடத்திலிருந்து வரும் ஒவ்வொரு வாலிபனும் அக்கல்லைத் தூக்கி தோள்புறமாக மறுபுறத்தில் போட்டுவிட வேண்டும். கற்களை கையில் எடுத்துத் தூரத்திலுள்ள பொருட்களைக் குறிப்பாய் எறிவது. சற்சமயம் ஒரு கல்லினால் தென்னைமரத்திலுள்ள ஒரு இளநீரைக் குறித்துக் காட்டினால் ஒரே எறியாய் எறிந்து கீழே விழத்தட்டக் கூடியவர்களும் உண்டு. வில்லப்பியாசம் பூர்வத்தில் அதிகம். இரவில் பறக்கக்கூடிய வௌவால், பட்சிகளை எய்யக்கூடியவர்களும் உண்டு. சிலம்பு வித்தை ஆடுவதும் உண்டு. அதாவது நெற்றிமட்டத்துக்குக் கம்புவைத்து அந்தக்கம்பால் எதிராளி கையிலுள்ள கம்பையோ வாளையோ பிடுங்கிக்கொள்வது.

இதைப்போலொத்த அனந்தம் தேகப்பியாச விளையாட்டுக்கள். அவைகளை பழக்கிவைக்கும் சாமர்த்தியமுள்ள உபாத்தியாயர்களுக்குச் சம்பளமும்பேசி கிராமத்தாரே வரவழைக்கிறதுமுண்டு. மேற்சொல்லிய இவ்வளவு விளையாட்டுகளிலேயும் இந்நாட்டிலுள்ளவர்கள் தேறினவர்களாக யிருந்தார்கள் என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை.

ஆயுதங்கள்.

பாஞ்சாலக்குறிச்சியில் சண்டை நடக்கும் போது கத்தி, அரிவாள், பட்டாக்கத்தி, வீச்சுவாள், சொருகுவாள், ஈட்டி வல்லையம், வில்லம்பு, வேல்கம்பு, சாதாத்தடி, பிரங்கி, கைத்துப்பாக்கி முதலானவைகளை உபயோகித்தார்கள். மேற் சொல்லப்பட்ட ஆயுதங்களில் கடைசி இரண்டுதவிர மற்றவைகள் சாதாரணமாய் இத்தேசத்தில் செய்யப்பட்டவைகள். கடைசியில் சொல்லப்பட்ட இரண்டு ஆயுதங்களும் அதற்குவேண்டிய மருந்தும் அப்போது கொழும்பையும், தூத்துக்குடியையும் அரசாண்ட டச்சுக்காரரால் பாளையக்காரருக்கு கிடைத்ததென்பதை முன்னமே சொன்னோம். அச்சமயம் உபயோகித்த சாதாக் கம்பானது இக்காலத்தில் பெண்கள் உபயோகிக்கும் உலக்கை போன்றது. தற்சமயம் உபயோகப்படுகிற உலக்கைகுட்டையாயிருக்கிறது. அந்தக்கம்பே ஆண்பிள்ளைகளின் நெற்றிமட்டத்துக்கு சரியாயிருக்கும் இவ்வளவு பல

மானதும் கனமானதுமான கம்பை எவ்வளவு எளிதில் எடுத்து உபயோகப்படுத்தியிருக்க மாட்டார்களென் பதை இதை வாசிக்கிறவர்களாகிய நீங்களே அறிந்து கொள்ளுங்கள். பிற்பாடு அவர்கள் வேல்கம்பு 20அடி நீளம், சிலது 18அடி. சொருகுவாள் என்பது கைத் தடியில் துவாரமிட்டு அந்தவாளை அந்தக்கம்பினுள் செலுத்திவிட்டால் பார்வைக்கு சிறு கம்பு மாதிரியாக வேயிருக்கும். அந்தவாளைப் பார்க்கும்போது சாதா ரண வாளைப் பார்த்த மாதிரியாய் அவ்வளவு பள பளப் பாயிராது. பார்வைக்குத் துருப்பிடித்த மாதிரியாய்த் தான் தெரியும். அதைக்காய்ச்சி அடிக்கும்போதே விஷத்தைக் கலக்கிறதென்றும் அந்த வாளினால் தேகத் துக்குக் கொஞ்சம் கோரை ஏற்பட்டால் உடனே மாணமென்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு விளையாட்டுக்களுக்கும் வீரத்தொழில் களுக்கு மேல் அந்தர் அடிப்பதும் நம் நாட்டார் சாமர்த்தியம். நம்பிக்கைக்கு அடங்காத உயரம் வரைக் குமோ அல்லது வெகு உன்னதத்திலிருந்து தாழவோ அந்தர் அடித்துக் குதித்தால் தேகத்தில் யாதொரு காயமாவது வேறெந்த விதமான கோரையாவது படுவ தில்லை. அப்படிப்பட்ட வீரர்களும் எத்தனையோ பேர்கள் பாஞ்சாலங்குறிச்சிச் சேனையிலிருந்தார்கள்.

தண்டனை.

அக்காலத்தில் உள்ள இன்னொரு சிறந்த தண்டனை பாஞ்சாலங்குறிச்சியாருக்குள் வழக்கமாயிருந்தது. நடத்தைப் பிசகாய் நடக்கும் ஆண்களையாவது பெண்களையாவது தாங்கள் செய்த தப்பிதம் ருசுவானால் அப்படிப்பட்டவர்களைக் கழுவில் ஏற்றிக் கொலை செய்வது வழக்கமாயிருந்தது. இந்தக் கண்டிப்பான உத்திரவு பாஞ்சாலங் குறிச்சியாரைச் சேர்ந்த தொக்கலவார்க் கம்பளத்தாருக்குத்தான் ஏற்படுத்தப் பட்டது.

இவ்வளவு கண்டிப்பான ஆக்கினைக்கு ஆளாக வேண்டுமெனப் பயந்து அக்காலத்தில் ஆண்களோ பெண்களோ தங்களைக் காத்துக்கொண்டு வந்தார்கள். இவ்வளவு கண்டிப்பான அக்காலத்திலுங்கூட எத்தனையோ தவறுதல்கள் நேர்ந்தது. அத் தவறுதல்களைத் தண்டிப்பதற்காகவே தற்சமயம் பாஞ்சாலங்குறிச்சி மேட்டுக்கு வடமேற்கு மூலையிலுள்ள சாலிகுளத்து அருகாண்மையிலுள்ள காட்டிலே கழுவேற்றுமேடு என்னுந்திடல் இந்நாள்வரைக்கும் பெயர்வழங்கி வருகிறது. அக்காலத்தில் இந்தயிடத்தில் எத்தனையோ பேர் கழுவேற்றப்பட்டு இறந்திருப்பார்கள். நந்நடத்தை பலத்துக்குக்காரணம். நந்நடத்தையாயிருந்தால் மாத்திரம் தேகபலம் உண்டாகாது. தினந்தோறும் தேக அப்பியாசம் செய்துவந்தால் தேகவலிமை ஆச்சரியப்படத் தக்கவிதமாய் உண்டாகும்.

பாஞ்சாலங்குரிச்சியாருக்கு தங்கள் பிராணனை யும் பெரிதாக எண்ணுமல் அனுசரணையாயிருந்தவர்கள் தங்கள் பாளையப்பட்டிலேயுள்ள குடிகள்தான். மேற் படி பாளையப்பட்டோடு நாம் முன் பார்த்தபடி 5 பாளை யப்பட்டுகள் சேர்ந்திருந்தாலும் அப்பாளையப்பட்டு களில் வந்து சண்டையிட்டவர்களில் அதிக பராக்ரம சாலிகளைப்பற்றி நமக்கு ஒன்றுந்தெரியவில்லை. உண்மை யாகவே பிரபல்ய வீரராயிருந்து சண்டையிட்டிருந் தால் அவர்கள் பேர் இந்நாள்வரைக்கும் தொனியா யிருக்கும். பாரம்பரையாயும் அப்படிப்பட்ட சொல் இல்லை. ஆனல் பாஞ்சாலங்குரிச்சியைச்சேர்ந்த கிராமங் களிலிருந்து நூற்றுக்கணக்கான படைவீரர் கிளம்பிச் சண்டையிட்டார்களென்று சண்டைக்காலத்தில் எழு தப்பட்ட ஏடுகளிலிருந்து தெரியவருகிறது.

சண்டை நடந்தது 1799ம் ஞு செப்டம்பர்மீ 5-ந்தேதி. ஆகவே கணக்குப் பார்க்கும்போது சற்றேற றக்குறைய நூற்றிருபத்தொன்பது வருஷமாகிறது.

பாஞ்சாலங்குரிச்சி 1755-ம் வருஷத்துக்கு முன்னல் சிறுசிறு பாளையப்பட்டுகளுடன் சண்டை செய்திருக்கலாம். அச்சண்டைகளுக்கும் 1755-ம் வரு ஷத்திற்கு அப்புறம் நடத சண்டைகளுக்கும் அதிகந் வித்தியாசமுண்டு. தொடர்ந்தேர்ச்சியாய் சண்டை நடக்கவில்லையென்று நமக்குத் தெரியவருகிறது. ருஜ நூற்றாண்டுக்கு முன்னல் கடிதங்கள் இங்கே அதிக

அபூர்வம். காகிதங்களிலே எழுதக்கூடியவர்களே வெகு சொற்பம். அக்காலம் இராமனுதபுரத்திலுள்ள கலெக்டருக்கூட பாஞ்சாலங்குரிச்சி பாளையப்பட்டார் ஓலையில்தான் மறுமொழியனுப்பினூர்கள். ஆங்கிலேய பாஷை இச்சில்லாவுக்குவர பழைய ஓலை எழுத்துக்கள் ஒழிந்தன.

சுமார் 100 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகளைப் பார்த்தால் அந்தப்பனைஓலை ஏடு எவ்வளவோ அகலமாயிருக்கிறது. அதில் ஒரு பக்கத்தில் 10 வரிகள்வரை எழுதப்பட்டிருக்கின்றன. அப்படிப் பட்ட சுவடிகளில் சற்று கல்வி ஞானமுடையவர்களால் சண்டைச்சரித்திரம் எழுதப்பட்டது. அதில் பார்க்கும் போது பொதுவாய் சண்டை நடந்த இடங்களும் சண்டையில் கியாதிபெற்ற வீரர்கள் பேர் மாத்திரம் அடிக்கடி வருகிறது. ஐரோப்பிய துரைமார்கள் பெயர்கள் அவ்வளவு சரியாய் எழுதப்படவில்லை.

பிரக்யாதிபெற்றவர்கள்.

வீரர்களில் பிரக்யாதி பெற்றவர்களில் அச்சமயம் அரண்மனை அலுவல்களிலுள்ள ஸ்தானுதிபதிகளாகிய சிலசுப்ரமண்ய பிள்ளை, வீரபத்ர பிள்ளை, செங்குப் பிள்ளை, பொன்னையா பிள்ளை, செவத்தையா பிள்ளை ஆகியவர்கள்தான்.

பராக்கிரமசாலிகள்.

சிவத்தையா நாயக்கர், சின்ன முத்தையா, வீரபாண்டிய நாயக்கர், வெட்டுருச்சி நாயக்கர், மதார் சாயுபு நாயக்கர், கர்னல் நாயக்கர், குமாரசுவாமி நாயக்கர், சுப்பா நாயக்கர், சின்னவெட்டு நாயக்கர், வீர மல்லு நாயக்கர், காலாடி, எட்டன் பகடை, பொட்டிப் பகடை, இவர்கள் எல்லாருக்கும் தளகர்த்தன் ஊமைத் துரை யென்ற சுப்பா நாயக்கர். இவர் என்ன உத்தரவு கொடுத்தாரோ அதை யாதொரு தடைசொல்லாவல் செய்து முடிப்பார்கள். வயது கொஞ்சம். பார்வைக்கு நோய்பிடித்த ஆள்மாதிரி யிருக்குமாம். மற்றவர்கள் ஊமைத்துரை என்றபோதிலும் நேரில் அவர்களை சாமி என்றே அழைப்பதுண்டு. வாய் பேசாதவரா யிருந்தபடியால் வைக்கோல் துரும்புகளைப் பொறுக்கி எடுத்து ஒரு கையில் வைத்துச் சேர்த்துப் பிடித்து வைத்துக்கொண்டு தன்சைன்யங்களைப்பார்த்து சைகை யால் கைக்குள்ளிருக்கிற வைக்கோல் துரும்புகளை எதிரிகள் என்று சொல்லியபின்பு அந்தத் துரும்புகளை பூ என்று ஊதுவராம். ஊதினவுடன் துரும்புகளெல் லாம்பறந்துபோகுமல்லவா? அதேமாதி எதிரி படை களைப்பறக்கவைக்கமுடியும் என்று சொன்னல்போலி ருந்ததாம்.

செவத்தையா.

இவர் கயத்தாரில் தூக்குப்பட்டவருக்கு தகப்பனார் கூடப்பிறந்த பெரியய்யா மகன். இவர்தான் பட்டத்துக்குப் பாத்தியப்பட்டவர். ஆனால் இவரைவிட இவருடைய சின்னையா மகன் மகா பராக்கிரமசாலியும், சொற்சக்தியும், வாய்ச்சாதுர்யமுமுள்ளவரா யிருந்தபடியால் கம்பளங்களெல்லோருஞ்சேர்ந்து மேற்படியாருக்குப் பட்டஞ்சூட்டினார்கள். செவத்தைய்யா என்பவர் மனதில் வியாகூலம் அடைந்தவராய் கோட்டைக்குள்ளிருக்க மனவெறுப்புற்றுக் கீழ்த்திசையாய்ப் பிரயாணஞ்செய்து தூத்துக்குடிக்கு வடபாரிசத்திலிருக்கும் கொல்லன்பரும்பு என்னும் கிராமத்தருகாண்மையில் கோட்டைபோட்டுக் குடியிருந்தார். அவருக்கும் கோட்டையிலுள்ளவர்களுக்கும் அநேக வருஷங்களாய் நன்மை தீமைகூட இல்லாமலிருந்தது.

பாஞ்சாலங்குரிச்சிக் கோட்டையை மேஜர் பானர்மன் வந்து முற்றுக்கைபோட்ட சமாச்சாரத்தை அரண்மனை ஆட்கள் மூலமாயோ மற்றெந்தக் காரணத்தாலோ செவத்தையா நாயக்கர் கேள்விப்பட்டு தன் ஏவலாட்களோடு கோட்டையை நோக்கிச் சென்றார். இச்சமாச்சாரம் முதலாவது சண்டை என்னும் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வந்த நாயக்கரும் ஏவலாட்களும் திரும்ப ஊர் போய்ச் சேர்ந்ததாகத் தெரியவில்லை. அநேகமாய்ச் சண்டையிலேயே மடிந்

திருப்பார்கள். அவர்கள் குடியிருந்த இடம் கொல்லன் பருமபுக்குச் சமீபம் மண் மேடாய்க்கிடக்கிறது.

அக்காலத்தில் தோக்கலவார் கம்பளத்தார் அதிகம். பாஞ்சாலங்குரிச்சி பாஞ்சாலங்குரிச்சி பாளையப்பட்டைச் சேர்ந்த கிராமங்களில் கம்பளத்தார் குடியிருந்த கிராமங்கள் அதிகமாயிராவிட்டாலும் அவர்கள் குடியிருந்த கிராமத்தில் வேறே வகுப்பார் சிலர் மாத்திரம் இருப்பார்கள். பாளையப்பட்டு இருந்த காலத்தில் அவர்களைச் சேர்ந்த வகுப்பார் வெளியே மற்ற கிராமங்களிலும் இருந்தார்கள். அவர்கள் முக்கியமாய்க் குடியிருந்த கிராமங்கள் ஒட்டாரம்பட்டி, ஒட்டுடை நத்தம், ஒத்தராசுப்பட்டி, நாகம்பட்டி, தட்டப்பாறை, கொல்லன் பருமபு, அரசடி, கீழமுடிமண், குலையநல்லூர், எப்போதும்வென்ருன், பாறைக்குட்டம், மலையாச்சி, முதலியவைகளே. ஆகவே பன்னீராயிரம் படை வரைக்கும் பாஞ்சாலங்குரிச்சியார் சேகரித்து வைத்தார்கள். இவ்வளவு திரளான தொகையைக் கண்ட மாத்திரத்தில் இயற்கையாகவே யாருக்கும் சண்டைபோட்டு பார்க்கலாமென்ற மனது இருக்கிறது. ஆச்சரியமல்லவே. இது தவிர கோட்டை விஸ்தரிப்பிலே சொல்லப்பட்டபடி மண் கோட்டையோ பார்வைக்குத்தான் கேவலமாகத் தோன்றினதே யொழிய மற்றப்படி எவ்வளவு பலமாயிருந்ததென் பதைப்பற்றிப் பின்னுல் பார்ப்போம். அதுவுமல்லாமல்

கோட்டைக்குள் அநேக நில அறைகள் இருந்தது. 3000 பேர் வரைக்கும் இருக்கக் கூடிய அவ்வளவு விஸ்தீரணமான இடமுமிருந்தது. உணவுப் பொருட்களை ஒரு வருஷத்துக்கு வேண்டியதைச் சேகரித்து வைத்தார்கள். இப்படிப்பட்ட அநேக வசதிகளை ஏற்கனவே செய்திருந்தார்கள். மந்திரிமார்களும், வக்கீல்களும் காலத்துக்கு ஏற்றவர்களாயிருந்தார்கள். ஆகவே பட்டத்தார்முதல் அந்தப்பாளையப்பட்டிலுள்ள தோட்டிவரை சண்டைபோடவேண்டுமென்கிற விருப்பந்தான்.

கலெக்டர் லஷிங்டன் சமனுக்கும் மறுப்பு.

லஷிங்டன் கலெக்டரான பிற்பாடும் கட்டபொம்மு நாயக்கரை இராமனுதபுரத்துக்குத்தான் வர உத்திரவு செய்தார். ஆனல் 30 பேரோடே தான் வர வேண்டுமென்று உத்திரவு இருந்தது. அந்த உத்திரவிற்கு நாயக்கர் சம்மதிக்கவில்லை. கலெக்டர் மறுபடியும் தன்னிடமுள்ள உத்தியோகஸ்தர் மூலமாய் எவ்வளவோ சிரத்தையெடுத்து பாளையக்காரனை இராமனுதபுரத்திற்குக் கொண்டுவரப் பிரயாசைப்பட்டும் முடியவில்லை. மனதில்லாதிருந்ததால் நாள் நல்ல நாளில்லை என்றும், தனக்குச் சுகமில்லையென்றும், மாமூலை விடக்கூடாதென்றும் பலவாராக முகாந்தரங்கள் சொல்லியனுப்பினர். அதன்பிறகு கலெக்டர், தாம் என்னவிதமாய் கட்டபொம்மு நாயக்கரை வரவேற்பது என்கிற

விஷயத்தை ரெவினியு போர்டுக்கு எழுதி, பதிலை எதிர் பார்த்துக்கொண்டிருந்ததோடு, நாயக்கர் செலுத்த வேண்டிய கிஸ்திப்பணத்தைக் கொண்டுவந்து செலுத் தும்படி உத்திரவு அனுப்பினார்.

கிஸ்தி விஷயமாக தன் பாளையப்பட்டில் கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக, மழையில்லாததால் ஜனங்களெல்லோரும் அயலிடங்களுக்குக் குடியேறிப் போய்விட்டார்களென்றும், அவர்களைத் திரும்ப அழைத்து அவர்களுக்கு வேண்டிய உபகாரங்கள் செய் வதாயும் சிலவிஷயங்களை சிவகங்கையிலுள்ள தன் மாம னாரிடம்கண்டுபேசி காரியாதிகளை முடித்துவிட்டு வரும் வழியில் பணத்தோடே கலெக்டரைக் கண்டுபேசலா மென்றும் தான் செவல்பட்டியில் சேர்ந்தவுடன் கலெக் டர் கழுதியில் இருக்கிறாரென்று கேள்விப்பட்டு அங்கேபார்க்கப்போகலாமென்றும் நாயக்கர் எழுதினார்.

ரெவினியு போர்டார் விளம்பரச் சுருக்கம்.

திருநெல்வேலி பாளையக்காரர்களும், அச்சில்லா விலுள்ள மற்றக் குடித்தனக்காரரும் அறியவேண்டிய தென்னவென்றால், திப்புசுல்தான் சண்டை நடந்த காலத்தில், கம்பெனியாருக்குச்செல்லவேண்டிய கிஸ்தி யையும்செலுத்தி அவர்களில் பிறக்கும் மற்ற உத்திரவு களுக்கும் கீழ்ப்படியாத எவரும் கம்பெனியுடைய ஆக் கினைக்குள்ளாவார்கள் என்ற விளம்பரத்தைத்தவிர்த்து

இச்சில்லாவிலுள்ள சிலர் கொள்ளையடிப்பதிலும் கொலை செய்வதிலும் இன்னும் அநேகவித தொந்தரவுசெய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே இவ்வளவு கண்டிப்பான ஆர்டர்களிருந்தும் இப்படி மீறிச்செய்வதனால் தங்களுக்கே மோசத்தை வருவித்துக் கொள்கிறார்கள்.

கலெக்டர் ஆர்டர்களுக்குக் கீழ்ப்படியவுமில்லை. அங்கங்கே உள்ள இராணுவங்களுக்குத் தன் படித்தரத்தைக் கொடுக்கவுமில்லை. சர்க்காருக்குத்தான் கட்டவேண்டிய பகுதிப்பணத்தைச் செலுத்தவுமில்லை அக்காலமிருந்த ரெவினியுபோர்ட் பிரசிடெண்டுக்கு கவர்ணர் ஆலோசனைச் சபையிலுள்ள சர்க்கார்அதிகாரிகள்நவாபு முதலியவர்களுக்கும் 1792ம்வரு நவாப்புக்கும் ஈஸ்டு இந்தியா கம்பெனியாருக்கும் நடந்த உடன்படிக்கைப்பிரகாரம் கிஸ்தி வசூல் சம்பந்தமாய் நவாபுக்கு யாதொரு வேலையுமில்லை. கம்பனியாரே அதற்கு வேண்டிய சிரத்தையை கம்பனியார் செலவில் எடுத்து நடத்திக்கொள்ளவேண்டியது என்றிருந்தது.

பணங்கிடைக்கக்கூடிய வழி யாதொன்றுந் தெரியவில்லை. பணந்தான் கிடைக்கவில்லையென்றால் ஊத்துமலையாருக்கும் பாஞ்சாலங்குரிச்சியாருக்கும் இதற்கிடையில் கலகங்களும் குழப்பங்களும் வந்துவிட்டது. அந்தக் கலகத்துக்கு காரணம் பாஞ்சாலங்குரிச்சியைச் சார்ந்த வீரபாண்டிய நாயக்கரும் மற்றும் 10 பாளையக்காரர்களும், எல்லாப் பிராதுகளும் சென்னை

கவர்னர் வரைக்கும் எட்டியது எரிகிற நெருப்பில் எண்ணெய்வார்த்து எரிகிறது போலவும் அப்படி எரிகிற நெருப்பிற்கு காற்றுக்கூடினது போலவுமிருந்தது. பாஞ்சாலங்குறிச்சிக்கு அநுசரணையாயிருந்தது 5 பாளையப்பட்டுகள். கம்பனியாருக்கு உதவியாயிருந்தது எட்டையாபுரம் பாளையப்பட்டு ஒன்றுதான்.

முதல் சண்டை.

மேஜர் பானர்மன் துரை.
தானாவதிப் பிள்ளையின் முடிவு.
கட்டபொம்மு நாயக்கர் முடிவு.

பிராதுகளை அந்தந்தக்கிராமத்து பெரியதனக்காரர் மூலமாய் தாசில்தார்களுக்கும், தாசில்தார்கள் மூலமாய் கலெக்டருக்கும், கலெக்டர் மூலமாய்ச் சென்னை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் ஆலோசனைகூடி இராணுவ அதிகாரிகளுக்கு மேற்கண்ட விஷயங்களை கண்டித்துக் கீழ்ப்படுத்த உத்திரவு செய்தார்கள். அப்போது மலையாளத்தில் இருந்த இராணுவ அதிகாரியாகிய மேஜர் பானர்மனுக்கு சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவருக்கு உதவியாக பாளையங்கோட்டையிலுள்ள பட்டாளத்தில் ஒரு தொகுதியும், ஆழ்வார் திருநகரியிலுள்ள படையும், தூத்துக்குடியிலுள்ள பட்டாளத்தில் சிலரும், சங்கரநயினார் கோவிலிலுள்ள

பட்டாளமும், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளவர்களும் ஒன்று கூடி சிலர் பாஞ்சாலங்குறிச்சிக்கு நேராகவும், மற்றவர்கள் கயற்றாருக்கு வந்தும், சிலர் கோவில்பட்டி மார்க்கமாயும் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தார்கள். பட்டாளம் முழுவதும் மேஜர் பானர்மன் துரையவர்கள் பார்வையின் கீழ் இருந்தது. பட்டாளத்தார் தங்கின இடம் ஒட்டப்பிடாரத்துக்கு வடபாரிசத்தில் உள்ளதும் அப்பட்டணத்தார் ஸ்நானம் செய்யும் தெப்பக்குளத்துக்கு வட கீழ்பாரிசத்தில் உள்ள இடந்தான். தெப்பத்துக்குக் கீழ்பக்கத்தில் காரையினால் கட்டப்பட்ட இரண்டு கேட்வாசல் தூண்கள் மாத்திரம் இருக்கிறது. தற்சமயம் அந்தயிடத்தில் சில மரங்கள் செழிப்பாய் வளர்ந்திருக்கிறது. ஒருசமயம் இப்போது இருக்கிற மரங்களில் சிலவை அப்போதுள்ள பட்டாளத்தாரால் நடப்பட்டிருக்கலாம்.

1799ம்௵ செப்டம்பர்மாசம் 5ந் தேதி சாயந்திரத்தில் சண்டை ஆரம்பித்தது. சண்டை அநேக நாட்கள் நடக்கவில்லை. பீரங்கிகளை, கைத்துப்பாக்கிகளை நெடுந்துப்பாக்கிகளை கம்பெனியாரின் பட்டாளத்தார் உபயோகித்தார்கள். தன் தகப்பனாகிய ஜெகவீர கட்டபொம்ம நாயக்கர் ஓடினமாதிரி இவரும் இவரைச் சார்ந்தவர்களும் கோட்டைக்குள் இருக்க வழியில்லாததால் ஓடிவிட்டார்கள். கோட்டை மதிலைக் கஷ்டப்பட்டு ஒரு ஓரத்தில் கம்பெனியார் இடித்துவிட்டார்கள். இச்சண்டையில் கோட்டைக்குள் அநேகம்

பேர்களில்லை. இவர்கள் ஓடின நோக்கம் சத்துருக்கள் எல்லோரும் வெளியேறின உடனே திரும்பி, கோட்டைக்கு வந்துவிடலாமென்று. ஏனென்றால் முன் இரண்டு,மூன்று தடவை இந்தமாதிரியாக நடந்தேயிருந்தது. அநேகர், அநேகநாட்களாய்ச் சண்டை நடந்ததென தப்பான எண்ணங்கொண்டிருக்கிறார்கள். காரியம் அப்படியல்ல. செப்டம்பர்மீ 5உயில் சண்டை நடந்ததெனத்திட்டம் அடுத்த அக்டோபர்மீ 16உயில் தூக்கிவிட்டார்கள். ஆகவே ஊடே 40 நாட்களிருந்தது. இந்த நாற்பது நாட்களில் அநேக சமாச்சாரங்கள் நடந்தது. இந்தச் சண்டையின் முதல் நாளில் தானே 5 ஐரோப்பிய இராணுவ உத்தியோகஸ்தர்கள் இறந்துபோனார்கள். சுதேச இராணுவத்தில் அநேகர் சேதம். பாஞ்சாலங்குறிச்சியார் பக்கமும் அநேக உயிர் சேதம் நேர்ந்தது. இந்தச் சண்டைக்கு எட்டையாபுரத்தார் ஒத்தாசை அதிகம். சுமார் 1000ம் பேர் வரை கம்பெனியார் பட்டாளத்தில் சேர்ந்து பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டாருக்கு விரோதமாய்ப் போர்புரிந்தார்கள். ஓர் சமயம் எட்டையாபுரத்தார் அதிக வீரத்தன்மையாய் சண்டை செய்ததைக் கண்ட மேஜர் பானர்மன் சந்தோஷங்கொண்டு அச்சமயமுள்ள எட்டையபுரத்தாருக்கு இரண்டு உயர்ந்த விலையுள்ள சால்வைகளையும், விலையுயர்ந்த குதிரைகளையும் இனாமளித்தார். சண்டையை எதிர்த்து போர்புரிய பிரியமில்லாமலோ அல்லது மேற் சொல்லிய காரணத்தாலோ கோட்-

டைக்குள்ளிருந்தவர்களெல்லோரும் இருட்டில் ஓடி விட்டார்கள். எங்கே ஓடிவிட்டார்களென்று முதலில் தெரியாது. எத்திசையிலிருந்து வந்தார்களோ அவர்கள் அத்திசைகளுக்கு ஓடிவிட்டார்கள் அரண்மனைக்காரரும் ஸ்தானாபதி வகையறாக்களும் சிலர் கோலார் பட்டிக்கும் சிலர் நாகலாபுரத்துக்கும் சிலர் ஆத்துக்குடிக்கும் போனார்கள். கட்டபொம்மு நாயக்கரும் அவருடன் ஸ்தானாதிபதிப் பிள்ளையும் மற்றும் அநேகரும் கோலார்பட்டிக்கும், ஊமைத்துரையும் அவருடைய மூத்த சகோதரனும் ஆத்துக்குடியில் தங்களைக் கம்பனியாருக்கு ஒப்படைத்துவிட்டார்கள். கோலார்பட்டியில் ஒளித்துக்கொண்டிருக்கும் சங்கதி கம்பனிப் பட்டாளத்தாருக்குத் தெரிந்தவுடன் எட்டையாபுரத்திலிருந்து சிலரைத் தங்களுக்கு ஒத்தாசைக்குக் கூட்டிக்கொண்டு எல்லோரும் தற்சமயம் இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த கோலார்பட்டிக்குப் போய் அங்கே கட்டபொம்மு நாயக்கரைக் கண்டுபிடித்தார்கள். கண்டுபிடித்து இருவருக்கும் சச்சரவு நடந்தது. கடைசியில் ஸ்தானாதிபதியாகிய சிவசுப்ரமணியபிள்ளை தான் அகப்பட்டாரேயொழிய கட்டபொம்மு நாயக்கர் அகப்படவில்லை. காடல்குடி பாளையக்காரரும் கம்பனியாருக்கு விரோதமாய் நடந்தபடியால் எங்கேயோ ஓடிப்போனார்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை விட்டு ஓடினவுடனேயே கட்டபொம்மு நாயக்கரை உயிருட னவது அல்லது கொன்றுவது கம்பனியாருக்குக் கொண்டுவந்து சேர்ப்பவர்களுக்கு 2000ம் சக்ரம் இனம் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

இக்காலத்திலேதான் அதாவது 1799ம் வருஷம் செப்டெம்பர் மீ 18ம் தெய்திதான் பாஞ்சா லங்குறிச்சி, நாகலாபுரம், கோலார்பட்டி, ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர், இந்த ஆறு பாளையப் பட்டுக்களையும் சர்க்காரில் சேர்த்துக்கொண்டார்கள். இந்த ஆறு பாளையப்பட்டுகளின் முடிவை இப்புத்தகத் தின் கடைசிப் பக்கங்களில் காணலாம். அதுவுமல்லா மல் கோட்டைகளை இடித்துவிட வேண்டுமென்ற கட்டளை பிறந்தது அப்படியே திருநெல்வேலி ஜில்லாவில் 42 கோட்டைகளிருந்தன. அவைகளை ஒவ்வொன்றாய் இடித்துத்தகர்த்தார்கள். மற்றும்அநேக சட்டங்கள் பிறந்தது. அவைகளும் பின்னால் வரிசைக் கிரமமாய் எழுதப்பட்டிருக்கிறது.

எல்லாச் சமாச்சாரங்களும் அப்போதைக்கப் போது ஈஸ்டு இந்தியாக்கம்பனியார் அதிகாரத்திலிருக் கும் பிரசிடெண்டுக்கு ரெவினியு போர்ட் அஞ்சல் மூல மாய்த் தெரிவிக்கப்படும். கோலார்பட்டியில் ஸதானுதி பதிப்பிள்ளையாகிய சிவசுப்ரமண்யபிள்ளை பிடிபட்டதும் ரிப்போர்ட் செய்யப்பட்டது. அக்காலத்திற்குச் சற்று

முன்புதான் நாகலாபுரத்தில் இராணுவம் ஸ்தாபிக்கப் பட்டது. பிடிபட்டவரை நாகலாபுரத்திற்குக் கொண்டு போய் விசாரணை செய்தார்கள். விசாரணை செய்து வாக்குமூலங்களையும் மற்றும் அதற்குச் சம்பந்தப்பட்ட சகல ரிக்கார்டுகளையும் சென்னை கவர்ன்மெண்டாருக்கு அனுப்பி அவர்கள் உத்திரவை எதிர் பார்த்தார்கள். அதன்முடிவை சொல்லுமுன் அவருடைய சாமர்த்தி யங்களையும் பணச்செருக்கையும்பற்றிக் கூறுவோம். பூர்வீகமாகவே ஒட்டப்பிடாரத்தில் வேளாளர் குலத்தில் அவர் பிறந்தவர். அக்காலத்துக்குத்தக்க படிப்பில் திறமைவாய்ந்தவரே. இவருக்கு 4 சகோதரர் வரையுண்டு. இவருக்கும் ஒரு பிள்ளை உண்டு. இவரை அதிகக்காலமாய்த் தன் சேவகத்தில் மரியாதையோடு அமர்த்தி வந்தார். இவருடைய அதிகாரம் பாஞ்சாலங் குறிச்சியில் மட்டுமல்லாமல் இதரயிடங்களிலும் நடந் தது. பழையகாலத்து ரிக்கார்ட்டைப் பார்த்தால் இவர் அதிக பூஸ்திதியும் ரொக்கப் பணமுமுள்ளவரென்று தெரிகிறது. இந்த வம்சத்தார் எல்லோரும் இந்த வம் சத்தின் பின் சந்ததியாருக்குள்ளும் அஞ்சாத்தன்மை யும் கல்வித் திறமையும் உள்ளவர்களெனத் தெரியவரு கிறது. மேற்படிபிள்ளையவர்களின் பின் சந்ததியார் தற் சமயம் ஒட்டப்பிடாரத்திலும் மற்றக் கிராமங்களிலும், அவர் வம்சத்திலிருந்து கிறிஸ்துமதத்தைச் சார்ந்தவர் கள் தங்கள் இந்துஇனத்தாரைவிட வாசிப்பில் அதிகத் தேர்ச்சியுடையவர்களென்றும் உத்தியோக முறையில்

மகா சாமர்த்தியமுடையவர்களென்றும் நம் அனுபவத்திலே தெரிந்துகொள்ளலாம்.

பின்வருகிற சங்கதியும் சண்டைக்குக் காரணமாயிருந்தது. தானுவதிப் பிள்ளையின் மகனுக்குக் கல்யாணஞ் செய்யத் தீர்மானித்து, அத்தீர்மானத்தை பாளையப்பட்டாருக்குத் தெரிவிக்க அவரும் அதிக சந்தோஷம் கொண்டார். வழக்கப்படி அரண்மனை உத்தியோகஸ்தருடைய மக்களுக்குக் கல்யாணம் நடந்தால் இராஜாக்கள் கல்யாணச்செலவைக் கொடுக்கிறதுண்டு. அல்லது சொற்ப உதவிசெய்கிறதுமுண்டு. ஸ்தானுதிபதிப் பிள்ளை மகன் கலியாணத்துக்கு பாளையப்பட்டார் 1000ம் பொன்னும் 2000 கோட்டை நெல்லும் தருவதாகச் சொன்னதைக் கேட்ட பிள்ளை எனக்குத் தாங்கள் கொடுப்பது ஒரு கோப் பலகாரப் பந்திக்கே காணாது. என்று சொல்லிவிட்டு ஒரு வாரம் வரை அரண்மனையார் கண்ணுக்கெதிர்ப்படவில்லை. பிள்ளையைப் பாராதது அரண்மனையாருக்கு அதிக மனவருத்தம்.

சம்பிரதிப்பிள்ளை தன் எஜமானனுக்குத் தெரியாமல் கம்பளங்களைத் தருவித்து அநேகமாயிரம் பொதிமாடுகளைத் தயாரித்து ஸ்ரீவைகுண்டத்துக்குப் போய் நெல் களஞ்சியங்களுக்குப் போனார்கள். அக்களஞ்சியங்களைக் காவல் காத்தது பாண்டியத் தேவர். பாண்டியத்தேவரையும் அவன் சிப்பந்திகளை

யும் ஸ்தானாதிபதி ஆட்கள் கொன்றுவிட்டு நெல்லை பொதிமாடுகளின் மேல் போட்டுக்கொண்டு பாஞ்சாலங் குறிச்சிக்கு வந்துவிட்டார்கள். இவ்விஷயம் பாளையங் கோட்டையிலுள்ள கம்பனிப் பட்டாளத்து தெரிந்து உடனே பட்டாளத்துப் பெரியதுரை தன்னுடன் சில உத்தியோகஸ்தர்களைக் கூட்டிக்கொண்டு ஓட்டப்பிடா ரத்துக்கு வந்து வடபாரிசத்திலுள்ள தெப்பத்தின் பக்கத்தில் கூடாரம் அடித்து சில தினங்கள் இருந் தார். அப்படியிருக்குங் காலத்தில் தினந்தோறும் ஒரு ஆளை அரண்மனைக்கு கடிதத்தோடு அனுப்பினார். அதே காலத்தில் ஸ்தானாதிபதிப்பிள்ளையும் மேற்சொல் லப்பட்ட நெல் களவு சமாச்சாரம் பாளையக்காரருக்கு தெரியாமலிருக்கும்படி செய்ய என்னென்ன வழி யுண்டோ அதையெல்லாம் செய்துமுடித்தார். ஆகவே துரை அனுப்புகிற ஆளை அரண்மனைக்குள் போக விடாதபடி ஆளைக் கோட்டை வாசலில் வைத்து விட்டார். போகிற ஆளெல்லாம் பதிலில்லாமலே இது வரை வந்தது. பட்டாளத்து துரை என்னசெய்வார். கடைசியில் தானே போக நேர்ந்தது. இவற்றையெல் லாம் சம்பிரதிப்பிள்ளை கவனித்துக்கொண்டிருந்து துரை கோட்டைக்கு வரும் தினத்தன்று பிள்ளையே துரைக்கு எதிராக நின்று துரையை உள்ளே போக விடாதபடி தடுத்துக்கொண்டு அவமரியாதைகள் செய்து கேவலமான வார்த்தைகளும் பேசிவிட்டார், துரைக்கு மகா கோபமுண்டும் அச்சமயம் வெகு

ஞானமாய் நடந்துகொண்டு தன் உயிர் தப்பி வந்துவிட்டார். திரும்பினவர் கோபத்துடன் தன் கூடாரத்துக்கு வந்து கூடாரத்தைப் பார்த்துக்கொள்ளும்படி சில கூலியாட்களை மாத்திரம் நிறுத்திவிட்டு நேரே பாளையங்கோட்டைக்கு வந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு விரோதமாய்ச் சண்டை போடுவதற்காக தன் கையிலிருக்கிற பட்டாளத்தாரெல்லாரையுந்தான் சொல்லுகிற இடங்களில் குறிப்பிட்ட தேதியில் தயாராயிருக்க வேண்டுமென்று உத்திரவிட்டார்.

பாளையங்கோட்டையில் சங்கதிகள் இப்படியிருக்கும்போது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் என்னென்ன நடந்ததென நாம் பார்ப்போம்.

ஒரு நாள் கெட்டிபொம்மு நாயக்கர் ஸ்நானஞ்செய்துவிட்டு மேல் மாடியில் தலையை விரித்து உரோமம் உலர்த்திக்கொண்டு நிற்கும்பொழுது தென்மேற்கு முகமாய்ப்பார்த்தார்

எதிரே ஓட்டப்பிடாரத்தின் பக்கத்தில் கூடாரங்கள் போடப்பட்டிருக்கிறதைக் கண்டார். அந்த அரண்மனையிலுள்ள அநேகரிடம் கேட்டும் அதன் விபரத்தை நாயக்கரிடம் சொல்ல ஒருவருக்குந் தெரியவில்லை. கூடாரம் போட்டிருக்கிற விஷயம் இதுவரை தெரிந்தது. பிற்பாடு அவ்விஷயத்தைப்பற்றி வற்புறுத்திக் கேட்க யாரோ ஒருவன் இன்னின்ன காரண

மென்று தெளிவாய்ச் சொல்லிவிட்டான். அதைக் கேட்டவுடன் நாயக்கருக்கு மகாமனவருத்தங்கொண்டு சப்பிரதிப்பிள்ளையை அழைத்துவரும்படி சொன்னார். அப்படியே சப்பிரதிப்பிள்ளையும் வந்து நாயக்கருடைய இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு தான் செய்தது குற்றமென்றும், தயவுசெய்து மன்னித்துக் கொள்ளவும் மன்றாடினார். நாயக்கரும் அந்த மன்றாட்டுக்கு இணங்கி மன்னித்துவிட்டார். மேலும், கூடாரங்கள் அழுத்திருப்பதைப்பற்றி பிள்ளையினிடம் கேட்டதற்கு அதற்குத்தானே ஒன்றும் வராதபடி பார்த்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டார். இவ்விஷயத்துக்கும் கிஸ்தி கெட்டாததற்குஞ் சேர்த்து தான் நாயக்கருக்கு சமன்பண்ணி பாளையங்கோட்டை வெம்படிக் கச்சேரிக்கு 1799ம்வருஷம் செப்டம்பர்மீ 4உ வரச்சொன்னது. வெம்படிக் கச்சேரியென்றால் தற்சமயம் கொக்கரகுளம் கச்சேரியிருக்குமிடத்தில் ஒரு சிறுகட்டடமும் அக்கட்டடத்தின் ஓரத்தில் ஒருபெரிய வெப்பமரமுமிருந்தது. அந்த இடத்தில் தான் பூர்வத்தில் நவாபுகளோ அவர்களால் அதிகாரம் பெற்றவர்களோ வந்திறங்கி கச்சேரி செய்வார்கள். அந்த இடத்திற்கு மெற்சொன்ன நேரத்திற்கு ஆஜர் செய்யாததால் மேஜர் பானர்மன் தான் சேகரித்த பட்டாளத்தாருடன் ஒட்டப்பிடாரத்துக்கு 1799ம்வருஷம் செப்டம்பர்மீ 5உ வந்திறங்கினூர். ராமலிங்க முதலியாரைக் கோட்டைக்கு அனுப்ப நாயக்கர் கண்டுபேசி பதில் சமாச்சாரத்தைத தன் சின்னையா கெட்டிபொம்மு நாயக்கரிடம் சொல்லியனுப்பினூர்.

காரியங்கள் இப்படியிருக்கும்போது நாகலாபுரம் பாளையப்பட்டார் சகோதரன் சௌந்தரபாண்டிய நாயக்கரும் பிடிபட்டார். அவரும் அப்பாகத்தில் அநேக தீச்செயல்களைச் செய்தவர். ஸ்தானாபதிப் பிள்ளையையும், வீரபாண்டிய நாயக்கரையும் நாகலாபுரத்தில்வைத்து விசாரணை செய்யுமுன்னே அப்பக்கத்திலுள்ள பாளையப்பட்டார்கள் எல்லாரையும் வரவழைத்து ரெவினியு போர்டார் விளம்பரங்களைத் தெளிவாய் வாசித்துக்காட்டி அவர்கள் அதற்கப்புறம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதையுங்காட்டி அதன் பின்னர் கைதிகளிருவரையும் சபைக்கு முன்னால் கொண்டுவந்து முதலாவது சிவசுப்பிரமணியபிள்ளையை விசாரித்து குற்றங்களை எடுத்துரைத்ததில் சகல குற்றங்களையுந் தான் ஒத்துக்கொண்டு கடைசியில் தான் தன் எஜமானைவிட்டு விலகிவிட வேண்டுமென்றிருந்ததாகச்சொன்னார்.

அவருக்கு முடிவு நாகலாபுரத்திலே தூக்கி பிராணன்பிரிந்த பிற்பாடு சிரச்சேதம்செய்து பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு கம்பத்தில் தூக்க உத்தரவு. அப்படியே தூக்கின பிற்பாடு தலையை வெட்டிப் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்பினதும், ரிக்கார்டு மூலமாய் வாஸ்தவமே. வீரபாண்டிய நாயக்கரையும் இதேமாதிரியாக எல்லாப் பாளையக்காரருக்கும் முன்பாக விசாரித்து முடிந்தபின்பு அவரை பள்ளிமடம் பக்கத்திலுள்ள கோபாலபுரத்தில் தூக்கிவிடத் தீர்ப்பாக்கினார்கள்.

நாகலாபுரத்தில் காரியாதிகள் இப்படியிருக்க பாஞ்சாலங்குறிச்சியிலும் ஒரு பட்டாளம் நிலைப்பாய் இருந்துவிட்டது. ஆகவே கோட்டையைவிட்டு ஓடினவர்கள் திரும்ப வந்து நுழைய மார்க்கமில்லை. இங்கேயுள்ள பட்டாளங்களுக்கு இடிபடாத கோட்டைகளை இடித்துத் தள்ளுதலும், யுத்த ஆயுதங்கள் வைத்திருப்வர்களைக்கண்டுபிடித்து அவர்களை சிட்சை செய்வதும் அரைகுறைப் பணம் செலுத்தினவர்களிடமிருந்து மீதிப்பணத்தைக வசூலிப்பதும், சண்டையில் அநுசரணையாயிருந்தவர்களை எட்டையாபுரம், இவர்கள் மூலமாய்ப்பிடித்து விசாரணைசெய்து சிறைச்சாலைக்கு அனுப்புவதுமே வேலை.

இச்சமயத்தில் கலெக்டராயிருந்த லஷிங்டன் துரைக்கு கட்டபொம்மு நாயக்கர் புதுக் கோட்டையிலிருப்பதாய்த் தெரிந்தவுடன் மேற்படி கலெக்டர் பானர்மன் துரைக்கு எழுத, மேற்படி மேஜர் பானர்மன் துரை கவர்ன்மெண்டு செக்ரட்டேரிக்கு எழுதினர். இது எழுதப்பட்டது 29—9—1799.

சங்கதி தெரிய வந்தவுடன் சென்னை கவர்ன்மெண்டு அதிகாரி புதுக்கோட்டை இராஜாவுக்கு ஒரு விண்ணப்பம் எழுத மேற்படி இராஜாவும் சர்க்கார் விண்ணப்பத்துக்கு இணங்கி தன்னால் இயன்றமட்டும் உதவிபுரிவதாக வாக்களித்து எழுதினர். எழுதின உடன் கட்டபொம்மு நாயக்கர்

எங்கே யிருப்பார் என்று தன்னால் ஆனமட்டும் விசாரித்தறிந்து அதற்குவேண்டிய பிரயாசையெடுத்து கடைசியாக கம்பனியாருடைய பட்டாளத்துடன் தன் ஆட்களையும் அனுப்பி தேடிப் பார்த்ததில் அச்சமயம் இராமனாதபுரத்திலுள்ள லஷிங்டன கலெக்டருக்குக் கேள்வியானபடி சிவகங்கைக்கு சமீபமாயிருந்தாலும், அந்தப் பூமி புதுக்கோட்டையைச் சேர்ந்திருந்த ஒரு காட்டிலிருந்தார்கள். பட்டாளத்தாரும் புதுக்கோட்டை இராஜாவுடைய துருப்புகளும் சிவகங்கைத் தாலுகாவிலுள்ள காளியப்பபுரத்துக் காட்டில் 24–9–1799ல் கட்டபொம்மு நாயக்கரையும் அவருடன் சேர்ந்த 6 பேரையும் பிடித்தார்கள்.

அவர்கள் யாரெனில் குமாரசுவாமி நாயக்கர், முத்தையா நாயக்கர், குமாரசுவாமி நாயக்கர், முத்துக் குமாரசுவாமி நாயக்கர், வீரண மணியகாரர், தாக்லி கன்னன் ஆகிய ஆறுபேர்களையும் கவர்ன்மெண்டார் உத்திரவுப்படி கைதிசெய்து மதுரைக்குக் கொண்டுவந்து அதன் பிறபாடு கயற்றாருக்குக் கொண்டுவந்தார்கள். (5—10—1799)

இந்த சமயத்தில் கயற்றாற்றில் யாரெல்லாம் கைதிசெய்யப்பட்டார்களென்று பார்ப்போம். அதில் யாஞ்சாலங்குரிச்சிப் பாளையப்பட்டாருக்குச் சொந்த உறவினர் பதினாறுபேர். அவர்கள் பெயர்களை இங்கு கூறுவோம். இவர்களெல்லாரும் தூத்துக்குடியி

லிருந்து கயற்றாற்றுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். குமாரசுவாமி நாயக்கர், வீரபாண்டிய நாயக்கர், சின்ன பொம்மு நாயக்கர், தளவாய்சாமி நாயக்கர், தளவாய் குமாரசுவாமி நாயக்கர், வீரபாண்டியசுவாமி நாயக்கர், சின்னபொம்மு நாயக்கர், தளவாய் சாமி நாயக்கர், கூடுவெள்ளி நாயக்கர், ஆறுமுகத்தம்மாள் (தாயார்) சக்கம்மாள் (மனைவி) நாகமுத்தம்மாள் (மைத்துனர் மனைவி) சௌந்திரவடிவம்மாள் (தம்பி மனைவி) சக்கம்மாள் (சின்னையா மனைவி).

ஸ்தானுதிபதிப் பிள்ளையின் உறவினர்.

வீரபத்திர பிள்ளை (சகோதரன்) நாகலாபுரம்
இராமனுஜ பிள்ளை (மைத்துனர்) நாகலாபுரம்
அணவர்தம் பிள்ளை (மைத்துனர்) பாஞ்சாலங்குறிச்சி
வேலாயுதம் பிள்ளை (மகன்) பாஞ்சாலங்குறிச்சி
முத்துவடிவம்மாள் (மனைவி) ஆறுவது நபர்

பிள்ளையவர்களுடைய மருமகள்.

மேலே சொல்லப்பட்ட பதிறாறு கைதிகளில் ஆண்களெல்லாம் கயற்றாற்றிலும் பெண்களெல்லாம் தூத்துக்குடியிலுமிருந்தார்கள். விசாரணையான பிற் பாடு ஆண்களெல்லாம் பாளையங்கோட்டைக்கு கொண்டுபோகப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள்.

கட்டபொம்மு நாயக்கர் விஷயமாய் கவர்னர் ஆலோசனைச் சபையிலிருந்து கலெக்டருக்கும் மேஜர் பானர்மன் துரைக்கும் ஆர்டர் வந்தது. எப்படியெனில் 1799௵ செப்டம்பர்மீ 5௳ சண்டை நடக்கும்போது கோட்டைக்குள்ளே பாளையப்பட்டாராகிய கட்டபொம்மு நாயக்கர் இருந்தாரா? இல்லையா என்று திட்டமாய் விசாரித்து தீர்ப்புச்செய்ய. மற்றெல்லாப் பாளையக்காரருக்கும் இது ஒரு முன்னடையாளமான தண்டனையாயிருக்கவேண்டுமென்று யோசித்து எல்லாப் பாளையப்பட்டுக்களையும் கயற்றாற்றுக்கு வரவழைத்து எல்லாருக்கும் முன்பாக விசாரணை செய்தார். விசாரிக்கும்போது 4 சாட்சிகள் கோரப்பட்டார்கள்.

முதலாவது சாட்சி இராமலிங்க முதலியார், இரண்டாவது அப்துல் ரஹிமான், மூன்றாவது சாமி என்பவர் நான்காவது கெட்டிபொம்மு நாயக்கர், கேஸ் விசாரணை தெலுங்கில். அதற்காகவே விசேஷமாக ஒரு துரையை வரவழைத்தார்கள். அத்துரை கேஸ் விசாரணை முழுவதுமிருந்து இங்கிலீஷ்படுத்தினர். விசாரணை விபரமாவது கீழ்வருமாறு:—

இதில் விசேஷமாக கட்டபொம்மு நாயக்கருடைய கேஸில் கம்பனியார் எவ்வளவோ நீதியும் நியாயமுமாய் நடந்து நாயக்கரை விடுதலை செய்தும், நாயக்கர் மறுபடியும் கலெக்டரை பார்க்காமலிருப்பதும், தன் கிஸ்தியை இதுவரையில் கட்டாமலிருப்

பதும், சிவகிரி யாளையப்பட்டாருக்கு விரோதமாய் மற்ற துஷ்டரோடுசேர்ந்து சண்டைக்கு ஏதுகாஞ்செய்கிறது. தப்பான காரியமாதலால் மேற்படி சில்லாவை மேஜர் பானர்மன் துரையே மேல் பார்த்து, சமாதானத்துக்குக் கொண்டுவரும் வரைக்கும் கலெக்டருக்கும் பாளையக்காரருக்கும் யாதொன்று சம்பந்தமில்லையென்று இதனல் எல்லோரும் அறிந்துகொள்ளவும். மேலே சொல்லப்பட்டவை ரெவினியு போர்ட்டார் உத்தரவு.

மேஜர் பானர்மன் துரைக்கும், இன்னும் இரண்டு துரைமார்களுக்கும் மற்றுந் திருநெல்வேலி ஜில்லாப் பாளையப்பட்டார் அனைவருக்கும் முன்பாக கயற்றாற்றில் 1799ம் வருஷம் அக்டோபர் மீ 16ம் தெய்தி பாஞ்சாலங்குரிச்சி பாளையக்காரர் கட்டபொம்மு நாயக்கர் விசாரணைக்கு நிறுத்தப்பட்டார்.

சுமத்தப்பட்ட குற்றங்கள்.

1. கம்பனியாருக்கு கிஸ்தி செலுத்தாதது. 2. கலெக்டர் லஷிங்டன் துரை அனுப்பிய சமனுக்கு தன் படையில்லாமல் ஆஜராகாதது. 3. சிவகிரி பாளையப்பட்டார் மகனுக்கு தன் சைன்யங்களை அனுப்பித் தகப்பனுக்கும் மகனுக்கும் கலகம் உண்டாக்கியது. 4. கம்பனியாருக்குக் கீழ்ப்படிந்து வந்த சமன்களுக்கு

ஆஜராகாதபடி கம்பனியாரோடு எதிர்த்துச் சண்டை செய்து அப்படிச் சண்டை செய்ததின் பொருட்டு அநேகரைக் கொன்றது.

கேள்விகள்.

1799ம் வருஷம் செப்டம்பர்மீ 1ம் தெய்தி கலெக்டரிடமிருந்து வந்த கடிதம் கிடைத்ததா இல்லையா என்கிற கேள்விக்குக் கிடைத்ததென்றார். மேற்கண்ட கடிதம் வாசிக்கப்பட்டதின் மேல்தான் மேலே கண்ட கேள்வி.

முதல் கடிதத்தில் 1799ம் வருஷம் செப்டம்பர்மீ 4ம் தெய்தி பாளையங்கோட்டைக்குப் போய் பானர்மன் துரையைப் பார்க்கவும் அப்படிப் போகும் போது சுப்ரமணிய பிள்ளையையும் கூட்டிக்கொண்டு போகவும் எழுதியிருந்தது.

மேற்கண்ட கடிதம் 3ம் தெய்தி கிடைத்தது. கிடைத்த அன்றைய தினமே கட்டபொம்மு நாயக்கர் பதில் எழுதுகிறார்.

கலெக்டர் கடிதத்தைத் தாம் பெற்றுக்கொண்டதாயும், அதில் சிவசுப்ரமண்ய பிள்ளையைத் தம்மோடு கூட்டிக்கொண்டு போகவும், உத்தரவு இருந்தது. 4ம் தெய்தி நல்லநாளல்லாததால் ஒரு நல்ல தினத்தில் சுப்ரமண்ய பிள்ளையுடன் கலெக்டரைப் பார்ப்பதாக எழுதினார்.

மேற்கண்ட கடிதத்தையும் வாசித்துக் காட்டி இதைத்தான் அவர் எழுதினதாவென்று கேட்டதற்கு ஆம்! என்று பதிலளித்தார். பிற்பாடு 4 சாட்சிகளை விசாரித்தார்கள்.

முதலாவது சாட்சியாகிய இராமலிங்க முதலியாரைக் கூப்பிட்டார்கள். அவர் பானர்மன் துரைக்கு துவிபாஷிகர். அவர் சத்தியம்பண்ணி பின்வருமாறு சொல்லுகிறார். தான் கோட்டைக்குள் பானர்மன் துரை கொடுத்த சமாச்சாரத்தைத் தெரிவிக்க 5-9-1799ல் கோட்டைக்குள் போனதாகவும், கட்டபொம்மு நாயக்கரும் எதிரில்கண்டு அரண்மனைக்குள் கூட்டிக்கொண்டு போனதாகவும் அங்கே கெட்டிபொம்முநாயக்கர் என்ற இன்னொருவர் இருந்ததாகவும் ஆக மூன்றுபேரும் உட்கார்ந்து பானர்மன் வந்த விஷயத்தை மிகத்தெளிவாய்ச் சொன்னார். சொன்னபோது நாயக்கர் நாள்பார்த்து வருவாரென்றும் சொன்னார்.

பின்பு அவர்கள் கேப்டன் டேவிசன் சுகமாயிருக்கிறாரா என்று கேட்டார்கள் என்றுஞ்சொன்னார் பிற்பாடு நாயக்கர்வந்து பார்க்கப் பயப்படுவதாயும் சொன்னதற்கு நானே அவர் உயிருக்கு உத்தரவாதம் செய்வேனென்று சத்தியஞ் செய்யக்கூடுமென்றும் கம்பனியாரை பாளையக்காரர் எதிர்த்து ஜெயிக்கமுடியாதென்றும் தேசமெல்லாம் கம்பனிக்குச் சேர்ந்துவிட்டதென்று முதலியார் சொன்னபின்பு பாளையக்காரரும்

அவருடைய சின்னையாவும் அங்கேயுள்ள பெரிய சத்திரத்திற்குப்போய் யோசனைசெய்து பின்பு கெட்டி பொம்மு நாயக்கரைத் தன்னுடன் பானர்மன் துரையிடம் அனுப்பியதாகவும் இராமலிங்க முதலியார் எழுதியே கொடுத்துவிட்டார். இவற்றையெல்லாம் நாயக்கருக்கு வாசித்துக்காட்டிய பின் அவரும் சரியென்று ஒத்துக்கொண்டார்.

இராமலிங்க முதலியார் பாளையக்காரரிடம் பேசினபோது இங்கே சொல்லப்படுகிற 3 சாட்சிகளுங் கூடயிருந்தார்கள்.

இரண்டாவது சாட்சி. இப்ராயீம்கான் பானர்மன் துரையின் ஆர்டர்லி அவில்தார்.

இராமலிங்க முதலியார்கூட கோட்டைக்குப் போனதுண்டா என்ற கேள்விக்கு ஆம் என்று உத்திரவு சொல்ல, மற்றெல்லா சாட்சியும் முதல் சாட்சிக்கு முற்றிலும் பொருந்தியிருந்தது.

சுவாமி.

பானர்மன் துரையின் ஒரு உத்தியோகஸ்தன் சத்தியஞ்செய்த பின் 5—9—1799ல் முதல் சாட்சியுடன் கோட்டைக்குப் போனதுண்டா வென்று கேட்டதற்கு ஆம்என்று உத்திரவுசொன்னார் மற்றெல்லா சாட்சியமுமே முதல் சாட்சிக்கு முற்றிலும் பொருந்தியிருந்தது.

கெட்டிபொம்மு நாயக்கர் 4வது சாட்சி. பாளையக்காரர்களுக்கு சின்னையா. என்னுடைய துவிபாஷிகளாகிய இராமலிங்க முதலியார் 5—9—1799ல் கோட்டைக்கு வந்தபோது நீர் இருந்தீரா என்றதற்கு தாம் இருந்ததாக ஒத்துக்கொண்டார்.

இராமலிங்க முதலியார் பாளையக்காரர்களுக்கு நான் அனுப்பிய செய்தியைச் சொல்லும்போது நீர் இருந்தீரா என்று கேட்டதற்கு நான் பக்கத்தில்தான் நின்றேன் என்றார்.

அன்று நீர் என்னிடம் வந்தபோது உம்முடைய மகனை கம்பனியாருக்கு யாதொரு கட்டுப்பாடில்லாமல் ஆஜர் செய்யாவிடில் நேரேயே கோட்டையை நிர்மூலம் பண்ணிவிடுவேன் என்று சொல்லவில்லையா? என்று கேட்டதற்கு ஆம். நீங்கள் சொன்னதெல்லாவற்றையும் அதிகக் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேனென்றார். பின்பு கோட்டையைப் பீரங்கிபோட்டபோது கட்டபொம்மு நாயக்கர் கோட்டைக்குள் இருந்தாரா என்று கேட்டதற்கு குண்டுகள்போடும் போதெல்லாம் கோட்டைக்குள்ளிருந்தாரென்றுஞ் சொன்னார். சிவகிரிக்கு 1000ம்பேரைத் திரட்டிக்கொண்டு போனது யார் என்றதற்கு தளவாய் குமாரசுவாமி என்றார்.

எல்லாருக்கும் முன்பாக விசாரணை செய்து பின்பு கட்டபொம்மு நாயக்கரை தூக்கும்படி உத்திரவு கொடுத்துவிட்டு மேஜர் பானர்மன் தன்னிருப்பிடத்

திற்குப் போய்விட்டார். பின்பு கொலையாளர் நாயக்கரை ஒரு மரத்தின்கீழ்க் கொண்டுபோகும்போது நாயக்கர் இருபக்கமும் நின்ற பாளையக்காரரை இங்குமங்கும் பார்த்துக்கொண்டு போனார். முகத்தில் யாதொரு கவலையில்லாதவராய், மலர்ந்த முகத்துடன், மரணத்துக்குச் சற்றேனும் பயப்படாதவராயுந் தோன்றினார். எட்டையபுரத்து பாளையக்காரரையும் சிவகிரி பாளையப்பட்டாரையுந்தான் மனதில் துயரங்கொண்டு ஒருவிதமான பார்வை பார்த்தார். மரத்தில் தூக்குப்போடுஞ் சமயத்தில் தன் தம்பி ஊமைத்துரையைப்பற்றித்தான் அதிகக் கவலை. பின்னும் தன் கோட்டையில் சண்டை நடக்கும் சமயத்தில் இறந்தேனில்லையே என்றார்.

ஆகவே ஜெகவீரக்கெட்டிபொம்மு துரையை 1799 ம் ஹு அக்டோபர் மீ 16 ம் தெய்தியில் கயற்றாற்றுக்கு வடபக்கத்திலுள்ள பழய கோட்டைக்கு சமீபமாய் வடக்கே மதுரைக்குப் போகும் ரோட்டின் இடது பக்கமாயுள்ள ஒரு புளிய மரத்தில் தூக்கப்பட்டு அதே இடத்தில் தகனஞ் செய்யப்பட்டார். அந்த இடத்தை ஞாபகப்படுத்த தெற்கே இருந்து வடக்கே போகிறவர்களும் வடக்கேயிருந்து தெற்கே போகிறவர்களும் ஆளுக்கு ஒரு கல் எடுத்துப் போட்டுவிட்டுப் போவது தற்காலவரைக்கும் வழக்கம். அந்த ரோட்டின் மார்க்கமாய்ப் போகிறவர்களில்

ளோரும் அந்தக் கல் குவியலைப் பார்த்திருப்பார்கள். அவர்கள் பின் சந்ததியாரும் வருஷம் ஒரு முறை அல்லது இரண்டு முறை அந்தக் கல் குவியலைப் போய்ப் பார்த்து ஏதோ விசேஷங்கள் செய்வது வழக்கமாயிருக்கிறது கல் போடுவது தாங்கள் நினைத்த காரியம் கைகூடுமென நம்பிக்கை.

கட்டபொம்மு நாயக்கர் தூக்கப்பட்ட பிற்பாடு கோட்டை லெப்டினென்ட் பேக்ஷா என்பவருடைய சேனையால் அழிக்கப்பட்டது. அதே காலத்தில் மேஜர் பானர்மன் துரையால் ஒரு விளம்பரமும் இச்சில்லாவிலுள்ள பாளையக்காரருக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

அதாவது, இடிபட்ட கோட்டைகளைக் கட்டக் கூடாதென்றும், துப்பாக்கி முதலிய ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாதென்றும், அவ்வுத்திரவை மீறி நடந்த பாளையக்காரர்கள் சர்க்கார் யுத்தத்தில் ஏற்படும் தண்டனைக்குள்ளாவார்கள்.

ஒவ்வொரு பாளையப்பட்டாரும் அவரவர்கள் பாளையப்பட்டில் குடியிருக்கும் ஜனங்கள் செய்யுங் குற்றங்களுக்குப் பொறுப்புள்ளவர்களென்றும், குடிஜனங்களில் யாராவது, துப்பாக்கி மற்றும் கெடுதிக்குக் காரணமாயிருக்கும் ஆயுதங்களை வைத்திருந்தால் அந்த ஆள் பிராண தண்டனைக்குள்ளாகிறதுந் தவிர

அந்த ஆள் எந்தப் பாளையப்பட்டைச் சேர்ந்தமோ அந்தப் பாளையப்பட்டாரும் சர்க்காரில் விதிக்கும் தண்டனைக்குள்ளாகவேண்டும்.

மேற்கண்ட விதிகள் தோத்தின் நன்மைக்காக, பாரம்பரையாயிருப்பதற்கு பித்தளைத்தகட்டில் எழுதி ஒவ்வொரு பாளையப்பட்டின் தலைநகரியிலும் எல்லோரும் வாசிக்கத்தகுந்த இடத்தில் பதிக்கவேண்டுமென உத்திரவு.

மேற்கண்ட விவரமானது 1799 ம் வருஷம் அக்டோபர் மீ 21 ம் தெய்தி மேஜா ஜாண் பானர்மண் துரையால் திருநெல்வேலி ஜில்லா, கயற்றாற்றில், சகல பாளையப்பட்டார் முன்பும் கொடுக்கப்பட்டது.

இரண்டாவது சண்டை.

இரண்டாவது சண்டைக்குக் காரணமென்னவென்றால், பாஞ்சாலங்குறிச்சிக்கு விரோதிகளாயிருந்தவர்கள் பாளையக்காரனைச் சேர்ந்த ஜாதியாரிடத்திலும் அவர்களுடைய சிநேகிதரிடததிலும் மனதுக்கு வருத்தங் கொடுக்கக்கூடிய சங்கதிகளைப் பலவாறுகப் பேசியும், அவதூறுபண்ணியும், இன்னும் பற் பல விஷயமாக கம்பளத்தார் மனதைப் புண்ணாக்கினபடியால் கம்பளத்தார் எல்லோரும் ஒருநாள்தினம் மணியாச்சி ஜங்ஷனுக்கு வடகிழ்த்திசையில் சற்றேறக்குறைய ஒருமைல் தூரத்திலுள்ள ஓட்டநத்தம் கிரா

மத்தியில் கூடினார்கள். கூடி ஆலோசனைகள்மேல் ஆலோசனைகள்செய்து கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். அத்தீர்மானம் என்னவென்றால் கும்பினியார் இடித்துவிட்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் திரும்பக்கட்டிவிட வேண்டுமென்றும் பாளையங்கோட்டையில் அடைபட்டிருக்கும் தங்கள் எஜமானர்களை எப்படியாவது விடுவித்துக் கொண்டுவந்து அவர்கள் அரண்மனையில் சேர்த்துவிடவேண்டுமென்றும் அப்படிச் சேர்த்துவிட்டு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அவர்களை அவதூறிப்பேசிக் கேலிபண்ணுபவர்களை பழிவாங்கவும் தீர்மானஞ் செய்தார்கள். இப்படி இவர்கள் தீர்மானஞ் செய்த காலம் சங்கராந்தி சமயம். இதற்கு என்ன தந்திரஞ் செய்யலாம் என்று யோசிக்கும்பொழுது அவர்கள் மனதிற்கு ஒன்று தென்பட்டது. அது என்னவென்றால், சங்கராந்தி சமயமாயிருக்கிறபடியால் நம்மில் அநேகர் திருநெல்வேலி பாளையங்கோட்டைக்கு விறகு விற்பவர்கள் போலவும், புல் விற்பவர்கள் போலவும் சந்நியாசிகள் மாதிரியும், ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் போகிற பிரயாணிகள் மாதிரியாயும் பிரயாணப்படுவோம். நம்மில் தைரியமுள்ள 1000 பேர் வரை புறப்படவேண்டும். அப்படி புறப்படும்போது ஒவ்வொருவனும் தான் உபயோகிக்கக்கூடிய ஆயுதங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி எடுத்துக்கொண்டு வருகிற ஆயுதங்களை விறகுக் கட்டுகளுக்குள்ளோ

புல்லுச்சட்டுகளுக்குள்ளே சிறு ஆயுதங்களா
யிருந்தால் தங்கள் வஸ்திரங்களுக்குள்ளே மறைத்து
வைத்துக்கொண்டு. விறகு விற்பவர்களும் புல் விற்
பவர்களும் தங்கள் சாமான் பெருகிற கிரயத்துக்கு
பதின் மடங்காய் விற்கவும், ஏன் அப்படி விற்கிறீர்கள்
யென்று கேட்டால் சங்கராந்தி சமயம் அப்படி
விற்றால் தான் கட்டுமென்று சொல்லவும், சந்நியாசி
களாயுள்ளவர்கள் தெருத் தெருவாய்ப் போய் யாசகம்
கேட்கவும், பிரயாணிகள் போல் நடிப்பவர்கள் சத்தி
ரங்கள், சாவடிகளில் தங்கியிருக்கவும், பகல் பொழுது
கழிந்த உடன் எல்லோரும் பாளையங்கோட்டைக்கு
வந்து அங்கேயுள்ள கோட்டையைச் சுற்றித் தங்கள்
விறகுக்கட்டுகளுடனும், புல்லுக்கட்டுகளுடனும் படுத்
துக்கொள்ளவும், கோட்டையிலுள்ள காவலாளர்
என்ன இங்கே படுத்திருக்கிறீர்களென்று கேட்டால்
கொண்டுவந்த சாமான்கள் விற்கவில்லையென்று சொல்
லவும், கோட்டைவாசலைப் பூட்டுகிற சமயம் எல்லோ
ரும் விழிப்பாயிருந்து பூட்டுகிற உத்தியோகஸ்தர்
மேல் திடீரென்று பாய்ந்து விழுந்து கொன்றுவிட்டு
அங்கே கிடைக்கக்கூடிய மற்ற ஆயுதங்களையும் சேக
ரித்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானம் செய்து,
அவர்கள் தீர்மானஞ் செய்தபடியே 1801ம் வருஷம்
பெப்ரவரி மீ 2ம் தெய்தி செய்தும் விட்டார்கள்.
கைதிகளை வெளியேற்றிவிட்டு பாஞ்சாலங்குறிச்சிக்குப்
புறப்படுமுன் பாளையங்கோட்டை, திருநெல்வேலியில்

தங்களுக்கு யென்ன பொருட்கள் எளிதில் கிடைக்குமோ அவைகளை கொள்ளையாடிச் சேகரித்து தங்களை யார் யார் அவதூறபண்ணினார்களோ அவர்களைப் பழி வாங்கிக்கொண்டே பாஞ்சாலங்குரிச்சியிலுள்ள அரண்மனைக்குச் சென்றார்கள். அரண்மனைக் கோட்டை வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை, கம்பளங்கள் எத்தனையோ ஆயிரங்கள் இராப்பகலாய் வேலைகள் செய்தாலும் அவர்களுக்கு ஒத்தாசையாய் 2000 பேர் திருநெல்வேலிக்குத் தென்பாரிசத்திலுள்ள கிராமங்களிலிருந்தும் வேலைக்கு வந்தார்கள். கடைசியாய்க் கட்டப்பட்ட கோட்டை தான் மிகப்பலமானது என்று நமக்குத் தெரியவருகிறது. ஏனென்றால் எத்தனையோ பீரங்கிகளை உபயோகித்தாலும் கொஞ்சம் மண்ணாவது சுவரிலிருந்து விழவில்லை யென்று நாம் கேள்விப்படுகிறோம். இதற்குக் காரணம் யென்னவெனில், காயல் நட்டாத்தி என்னுமிடங்களிலிருந்து வந்த பதநீர்க்குடங்களுக்குக் கணக்கில்லையாம். ஆகவே கோட்டைமுடிய சற்றேறக் குறைய இரண்டுவாரங்கள் தான் பிடித்தன. பாளையக்காரர்கள் கோட்டையிற்சென்ற தினமே பாஞ்சாலங்குரிச்சிக்கு அநேகமாயிரம் கம்பளத்தாரும் இன்னும் அவர்களுக்கு உதவிபுரிய நினைத்த அனைவரும் வந்து சேர்ந்தார்கள்.

இது காரியம் நிற்க, நாம் ஜெயிலிலிருந்து விடுவித்தவர்களையும், வெளியேறினவர்களைப் பற்றியும்

பார்ப்போம். விடுவிக்கப் போனவர்கள் என்ன யோசனையில் போனார்கள். சரி விடுவிக்க வேண்டுமென்று போனவர்கள் ஜெயிலிலுள்ள உத்தியோகஸ்தர்களைக் கொன்றார்களே. அதன் பிற்பாடாவது மற்ற காரியங்களைச் செய்யாமலிருக்கும்படி காவலிலுள்ளவர்கள் செய்திருக்கக் கூடாதா? காவலிலுள்ள கைதிகளாவது யெங்களுக்குச் சொற்ப நாட்கள்தானிருக்கிறது அந்நாட்களைக் கழித்து நாங்கள் வருவோம் என்று சொல்லியிருக்கக் கூடாதா என்ன செய்யலாம்! பாளையக்காரரைப்பிடித்த கெட்ட காலந்தான், இவ்வளவு முரட்டுத்தனங்களெல்லாம் நடந்தேறியது என்று சொல்லவேண்டும். மீதி கொஞ்ச நாட்களை ஜெயிலில் கழித்திருந்தால் அவர்கள் விஷயம் இன்றையத்தினம் வேறுமாதிரியா யிருந்திருக்குமல்லவா? இதை வாசிப்பவர்களே நிதானித்துக்கொள்ளுங்கள்.

இனி பாளையங்கோட்டையிலுள்ள கம்பனியார்கள் என்ன சிரத்தை யெடுத்தார்களெனப் பார்ப்போம். மறுதினமே, சங்கரநயினார்கோவிலிலுள்ள பட்டாளத்தார் கயற்றாற்றில் 6ம் தெய்தியில் பாளையங்கோட்டையிலிருந்துவரும் பட்டாளத்தாரோடு சேர்ந்து பாஞ்சாலங்குரிச்சிக்குப் போகவேண்டுவதாய் பட்டாளத்துப் பெரியதுரை உத்திரவு பிறப்பித்தார். இப்பட்டாளத்துடன் நவாப் குதிரைப் பட்டாளத்தைச்சேர்ந்த 28 பேர்களும் வெள்ளைக்காரப்பட்டாளம் கொஞ்சமும்

அந்தரங்கமாகவே பாஞ்சாலங்குரிச்சிக்குப் புறப்பட்டார்கள். எல்லாருஞ்சேர்ந்து 900ம்பேர் வரையுமிருந்தார்கள். பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டு கயற்றாற்றுக்கு வந்து, 8ம் தெய்தி ஒட்டப்பிடாரத்துக்கு மேற்கே சற்றேறக்குறைய 3 மைல் தூரத்திலுள்ள குலையநல்லூர் என்னும் கிராமத்தில் தங்கி, பட்டாளத்தாரனைவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே பாளையப்பட்டார் சுமார் 1200 பேர் வரை திடீரென்று ஒரு மேட்டின் மேல் காணப்பட்டார்கள். அவர்கள் கையில் யுத்த ஆயுதங்களிருந்தன.

ஆகவே இரு பக்கத்தாருக்கும் சண்டை நடந்ததில் பாளையக்காரர் பக்கம் சுமார் 40 பேர் வரை கொல்லப்பட்டார்கள். இறந்துபோனவர்களை போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். கும்பனியார் பக்கம் 7 பேர் கொல்லப்பட்டார்கள். சண்டையெல்லாம் ஓய்ந்துவிட்டதென்று கம்பனியர் பட்டாளத்தார் நினைத்துக்கொண்டிருக்கும் போது திடீரென்று பாளையக்காரர் ஆட்கள் இராத்திரி 9மணிக்கு துப்பாக்கி சத்தத்தைக் கிளப்பிவிட்டார்கள்.

அதன் மேல் கம்பனியார் படை இரவுமுழுவதும் விழித்திருந்து 9ம்௳ காலையில் 9மணிக்கு பாஞ்சாலங்குரிச்சிக்கு அருகாண்மையில் பாளையமிறங்கினார்கள்.

இடிந்த கோட்டை புதிதாய் அதி சீக்கிரத்தில் கட்டப்பட்டதைக் கண்ட பட்டாளத்தார் ஆச்சரியப் பட்டார்கள். ஏனென்றால் பழைய கோட்டையை இடித்தவர்களில் அநேகம் சிப்பாய்கள் இச்சமயம் வந்தார்கள். அதுவுமல்லாமல் பாளையக்காரர் வகையறுக்களில் 1500 பேர்வரை கோட்டையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

கம்பனியார் பக்கமிருந்த படைகளில் அநேகர் புதிதாய்ப் பட்டாளத்தில் சேர்ந்தவர்களும், பட்டாளத்தை நடத்த அனுபவமுள்ள ஐரோப்பிய துரைகளுமில்லாததாலும், கோட்டையைத் தகர்க்கத் தக்க பீரங்கிகள் கைவசமில்லாததாலும் சண்டைபோட மனமில்லாமல் பட்டாளத்தாரனைவரும் ஒட்டப்பிடாரத்துச்குச் சமீபமாய்ப் பாளையமிறங்கி சாப்பிட்டு இளைப்பாறி இருட்டான உடனே கோட்டைக்குள் நுழைய வேண்டிய வழியைச் செய்வோம் என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது பட்டாளத்தாரில் சிலர் வந்து பாளையக்காரர் வகையறுக்களில் 5000ம் பேர்வரை கோட்டைக்குள்ளும் வெளியுமிருக்கிறார்களென்றும் இருட்டான உடன் கம்பனியார் பட்டாளத்துடன் சண்டை செய்வதாய்த் தீர்மானித்திருக்கிறார்களென்றும் பட்டாளத்துத் துரை தெரியலானார். தெரிந்த உடன் பட்டாளத்தாரெல்லாரையும் எச்சரித்து சாயந்தரம் இரண்டு மணிச் சுமாருக்குக் கோட்டையைத் தாக்குகிறவர்கள்

போல் நடிக்க உடனே பாளையப்பட்டார் வகையருக்களில் சுமார் 1500 பேர் வரை ஈட்டி வல்லையத்தோடு கோட்டைக்கு வெளியே வந்து நிற்க அவர்கள் வல்லயங்களெல்லாம் வெயிலில் பட்டுப் பளீர் பளீரென்று மின்னிற்று. ஆகவே பொழுதும் போயிற்று. பொழுதானவுடன் பட்டாளத்தாரெல்லோரும் பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டார்கள். புறப்பட்டு கொஞ்சத்தூரம் வந்தவுடன் பாளையப்பட்டார் ஜனங்கள் பின்னால்வந்து பட்டாளத்தார் மேலே வந்துவிழுந்தார்கள். அப்படிச் சண்டை செய்ததில் பாஞ்சாலங்குரிச்சியார் பக்கம் 100 ஆட்கள் சேதமும் கம்பனியார் பக்கம் 3 ஆட்கள் சேதம். இவ்வளவு கஷ்டப்பட்டு பாளையங்கோட்டைக்கு மேற்படி மாதம் 10உ 9 மணிக்குப் போயச் சேர்ந்தார்கள்.

மறுபடியும், பட்டாளங்கள் புறப்பட 20 நாட்கள்வரை சென்றது. இந்த இருபது நாட்களில் பாளையக்காரர் தூத்துக்குடிக்குப்போய் அங்கேயிருந்த பட்டாளத்தாரிடமிருந்த ஆயுதங்களைப் பிடுங்கிக்கொண்டு தங்களால் எவ்வளவு ஆயுதங்களும், கருமருந்தும் சேகரிக்கக்கூடுமோ அவ்வளவையும் சேர்த்துக்கொண்டார்கள். அங்கேயுள்ள பட்டாளத்தாரையாவது மற்றெவரையாவது சேதப்படுத்தவில்லை. ஆக மொத்தத்தில் பாளையப்பட்டாருக்கு 1000-ம் துப்பாக்கிகள்வரை கிடைத்தது.

கடைசியாக மார்ச்சுமீ 27வ மேழ சொல்லப்பட்ட பட்டாளங்களும அவைகளை நடத்தின துரைமார்களும் கயற்றூற்றுக்குப் போனார்கள். கேப்டன் பேக்ஷாவின் கையில் ஒரு பயனீர் தொகுதியும், லெப்டனெண்ட் கிரஹம், பெங்கால் ஆர்ட்டிலரியை மேல் பார்த்தும், கேப்டன் ஜான்கெம்பல் 74 ரெஜிமெண்டையும், லெப்டனெண்ட் கிராண்டு கவர்னர் பாடிகார்டையும், லெப்டனெண்ட் லேயன் என்பவர் விசாரணையில் சுதேச 1வது ரெஜிமெண்டும், மேஜர் ஷெப்பார்டு சுதேச 3வது ரெஜிமெண்டு முதல் பாட்டலியனையும் கேப்டன்னேகல் 4 சுதேச பட்டாளத்து முதல் பாட்டலியன் 5 கம்பனிகளையும், கேப்டன்என், சிமித் என்பவர் 14 சுதேசப் பட்டாளத்திலுள்ள முதல் பட்டாலியனுள்ள 6கம்பனிகளையும், கேப்டன் ஹேஜார்டு என்பவர் 9வது சுதேசபட்டாளத்தைச் சேர்ந்த முதல் பட்டாலியனில் 3 கம்பனிகளையும் கேப்டன் டி. மக்டானல்டு என்பவர் 9வது சுதேசப் பட்டாள 2வது பட்டாலியனில் ஒருகம்பனியையும், கேப்டன் ஜி. லேங் என்பவர் 13வது சுதேசப்பட்டாளம் முதல் பட்டாலியன் 3 கம்பனிகளையும் நடத்தினர். மொத்தம் பட்டாளத்தார் 3000பேர். இதுதவிர பீரங்கிகள் அநேகமிருந்தன. இந்தப் பட்டாளம் முழுவதற்கும் அதிகாரி மேஜர் காலின் மெக்காலே என்பவர்.

பட்டாளத்தார் முழுவதும் கயற்றூற்றில் கூடி அதன் பிறகு கிழக்கே 8மைல் தூரத்திலுள்ள ஒட்ட

ரப்பட்டி வழியாக பசுவந்தனைக்குப் போனார்கள். அங்கே பாளையக்காரர் ஆட்களுக்கும் கம்பனியாருக்கும் சண்டை நடந்தது. சண்டை மும்முரமாய் நடக்கும்போது தற்செயலாய் ஒரு காடு எதிர்ப்பட்டபடியால் பாளையக்காரர் ஜனங்கள் தப்பி ஓடிவிட்டார்கள். சண்டை நடந்ததில் பாளையக்காரர் பக்கம் 96 பேர் கொல்லப்பட்டாரகள். கம்பனியார் பக்கம் 9 பேர்.

இச்சண்டை நடந்த பிற்பாடு மார்ச்சுமீ 31ம் தெய்தி காலை 8 மணிக்கு பாஞ்சாலங்குறிச்சிக்குப் போனார்கள். போனதும் சண்டைக்குவேண்டிய ஆயுதங்களைத் தயார் செய்தார்கள். முதலாவது பட்டாளத்தார் நோக்கம் வடமேற்கு கொத்தளத்தை நொறுக்கிவிடவேண்டுமென்பதுதான். முதலாவது 900 கெஜத் தூரத்திலுள்ள ஒரு குளக்கரையிலிருந்து பீரங்கி பிரயோகித்தார்கள்.

பீரங்கி அதிக வேகமானதாயிருந்தாலும் கோட்டையில் ஒரு குண்டாவது போய்ப் பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே மத்தியானத்தில் பீரங்கியை 400 கெஜத் தூரத்திலுள்ள மற்றொரு குளக்கரைக்குக் கொண்டுவந்து வேட்டுக் கிளப்பினார்கள். அப்பொழுதும் கோட்டைக்குயாதொரு கெடுதி நேரிட்டதாகத் தெரியவில்லை. கோட்டையிலிருந்து கொத்தளங்கள் மூலமாய் துப்பாக்கிக் குண்டுகள் வருகிறவை கணக்கிலல்ல. அதை எதிர்த்து இரண்டு பட்டாளங்கள்

தங்கள் உயிரைப் பெரிதென்று பார்க்காமல் முன் சென்றது. அப்படி அவர்கள் முன் பார்த்தபடி கோட்டையைச் சுற்றியுள்ள இலந்தை முள் கோட்டையைக் கூடத் தாண்டி கோட்டை மீதேறப் பிரயாசைப்பட்டால் கொத்தளங்களிலிருந்து வருகிற ஈட்டிகள் சாமான்யமல்ல. எங்கிருந்து வல்லயக்குத்துகள் வருகிறதென்று சொல்ல முடியவில்லை. இப்படியாக உயிர்ச் சேதங்கள் அதிகரித்ததைக் கண்ட இராணுவ அதிகாரி தன் பட்டாளத்தைச் சற்று பின்னடையச் சொன்னான். கோட்டையை கொஞ்சம் இடித்துத் தள்ளியிருந்தாலும் கோட்டைக்குள்ளே யிருந்த ஒரு மேடையிலிருந்து ஓயாத துப்பாக்கிப் பிரங்கிப் பிரயோகங்கள். அதற்குச் சற்றுத் தாழ்விலிருந்து 20அடி நீளமுள்ள வல்லயங்கள் பிரயோகம். கம்பனிப் பட்டாளம் பின்னடைப்பதைக் கண்ட பாளையக்காரருடைய வீரர்கள் வல்லயத்தால், கோட்டை அடிவாரத்தில் இறந்தும் குற்றுயிராயும் கிடக்கும் ஆட்களை குத்தியும் அவைகள்மேல் மிதித்து நடந்தும் கம்பனியார் பட்டாளத்தில் கடைசி வரிசைகளைத் தாக்கினார்கள். அன்று கம்பெனியார் பக்கம் 53 பேர் சேதம். பாளையக்காரர் பக்கத்துக்குக் கணக்கில்லை.

கம்பெனியார் பட்டாளம் கோட்டையிலிருந்து 1500 கெஜம் தூரத்துக்கப்பால் போய் ஒளிவிருந்து கொண்டு அன்றையத்தினம் சண்டை நடந்ததைப் பற்

றியும் அதில் தோற்றுப்போனதைப் பற்றியும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனதில் நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தபடியால் பாளையமெங்கும் அமைதியுண்டாயிற்று. அவர்கள் தங்கியிருந்த இடத்துக்கும் கோட்டைக்கும் மத்தியில் ஒரு மேடு இருந்தது. ஆகவே அன்றையத்தினம் இறந்தவர்களும் காயப்பட்டவர்களுமாக 106 பேர்கள். இது ஒரு பெருந்தொகைதான். வந்த இரண்டொரு தினத்தில் இவ்வளவு பேர் நஷ்டமானால் சண்டை முடிவாக இன்னும் எத்தனைநாட்கள் செல்லுமோ எத்தனை பேர்கள் சாவார்களோ எனக்கலக்கம் பட்டாளத்தார் மனதிற் ஏற்படுவது சாதாரணந்தானே. இவர்களுக்குஉதவிசெய்ய எட்டயபுரத்தார் 1000 பேர் வரை அனுப்பியிருந்தார்கள். அவர்களையும் ஒரு ஐரோப்பிய அதிகாரி பார்வையிட்டார். எட்டைய புரத்திலிருந்து வந்தவர்கள் கம்பனியாரிடம் விசுவாசமுள்ளவர்களாய்ச் சண்டையிட்டாலும் அவர்களிலும் அனேகர் சேதம். ஆகவே 3வது நாளாகியும் இறந்துகிடப்பவர்களை அடக்கம்பண்ணவில்லை.

அதுவிஷயத்திற்குக் கொடிபோட்டுக்கேட்க அப்படியே உத்திரவு கொடுக்கப்பட்டது. இறந்துகிடப்பவர்களையெல்லாம் எடுத்து மரியாதையுடன் அடக்கஞ்செய்தார்கள். அடக்கஞ்செய்யும் சமயம் அவர்கள் யாதொரு குழப்பமுஞ் செய்யவில்லை. அன்று இராத்திரியிலும் நல்ல தூக்கந்தான். அந்தவிஷயத்தில் பாளையக்

காரர்கள் எவ்வளவோ மனுஷத்தன்மையுடையவர்களாகவே காணப்பட்டார்கள். இவ்வளவு பலமுள்ளவர்களால் காக்கப்பட்ட கோட்டையைப் பிடிப்பது கூடாத காரியம் என்று மனதில் வியாகூலப்பட்டு மேஜர்மெக்காலே என்பவர் தன் துருப்புகளுடன் சண்டைபோட்டதில் அவருக்குக் காயமில்லை. ஆகையால் எதிர்த்துச் சண்டைபோடுவதில் தன் பட்டாளத்துக்கு மோசம் வருமென்று நினைத்து அம்மட்டிலேயே சண்டையை நிறுத்தி கூடக்கொஞ்சம் படையையும் வெடிமருந்து குண்டு முதலியவைகளையும் எதிர்பார்த்து தற்சமயம் இருக்கிற கோட்டைமேட்டுக்குத் தென்மேற்குத்திசையிலுள்ள குளங்கள் பக்கமாய் பாளையமிறங்கினார்கள்.

கம்பெனியார் காரியாதிகள் இப்படியிருக்க ஏப்ரல்மீ 2உயில் யாதொரு அமளியுமில்லை. பாளையப்பட்டார் சேனைகள் இராசிக்கு வந்து கம்பெனியாருக்குக்கீழ்ப்படிவோம், கிஸ்தியையுங் கட்டுவோம். ஆனால் எங்கள் எஜமானர்களைச் சிறையில் வைக்கக்கூடாது என்று ஓயாமல் சத்தமிட்டுக் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். அவ்வார்த்தைகளைக்கேட்ட கம்பனி அதிகாரிகள் சொன்னதாவது நீங்கள் உங்கள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு உங்களில் முக்கியஸ்தர்களையும் எங்களிடம் யாதொரு நிபந்தனையில்லாமல் ஒப்புவித்து விடுங்கள் என்றார்கள்.

இவ்வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்த அந்த நாளில் கம்பனிச் சேனையார் இராத்திரி 8 மணிச் சுமா

ருக்கு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் சமயம் திடீரென்று வெடிச்சத்தங்கள் கிளம்பியது. பாளையக்காரர் அனேகம் வெடிகள் சுட்டு பாளையத்திலுள்ள ஒரு உத்தியோகஸ்தரையும் இன்னும் 5 பேரையும் பலமாய்க்காயப்படுத்தி விட்டார்கள்.

இதிலிருந்து 20 நாட்கள் வரை பலத்த சண்டைகள் நடக்கவில்லை. தினசரி சொற்பசச்சண்டை நடந்தது. அதில் இருதிறத்தாரிலும் வெகு சொற்பப்பேர் இறந்தார்கள். ஆனால் கம்பனிச் சிப்பாய்களோ தங்கள் இருப்பிடங்களை பலப்படுத்திக்கொண்டே வந்தார்கள்.

ஏப்ரல்மீ 22உ அதிக விசேஷமான நாள். அன்றையத்தினம் காற்றும் மழையும் மின்னலும் வெகு மும்முரமாயிருந்தது. வெடி மருந்துக்கும் மழைக்கும் வெகுதூரம் வெடிமருந்து நனைந்துபோனால் பிரயோஜனப்படாது. கோட்டைக்கு 400 கெஜம் சமீபத்திலுள்ள குளத்தின் கரைமீது பீரங்கியை ஏற்றிவைத்து சுட்டார்கள். பீரங்கிக்கும் கம்பனியார் பாளையத்துக்கும் சுமார் முக்கால் மைல் தூரமிருக்கும் கம்பனியார் பட்டாளத்துக்கு இரண்டு விரோதிகள். ஒன்று பாளையக்காரர் ஆட்கள் 1000 பேர் ஒவ்வொருவர் கையிலும் ஈட்டி வல்லயம். மற்றொன்று மழை. ஒரு தடவை சுட்டாகிவிட்டதென்றால் மறுபடி மருந்து கிட்டித்துச் சுட வசதியில்லை. அப்படி அவர்கள் மருந்து கிட்டித்து தயாராக்க முன்னால் எதிராளிகள் கையில் கிடைத்து

விட்டது அதை மறுபடியும் கம்பனித் துருப்புகள் மேல் விழுந்து கைப்பற்றிக்கொள்வார்கள். சண்டை நேரத்தில் ஓயாமல் பெய்துகொண்டிருந்த மழையும் நின்றுவிட்டது. இருபக்கத்தாரும் தங்கள் பிராணனைப் பெரிதென்று பாராமல் வெகு மும்முரமாய்ச் சண்டையிட திடீரென்று மழையும் நின்றுவிட்டது. மழை நின்றுவிட்ட உடனே புகை அதிகமாயிருந்தபடியால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுப் பிராணனைவிட வழியில்லை. ஆகவே சண்டை நின்றது.

இராத்திரி 9மணிக்கு மறுபடியும் காற்று மழையும் வந்தது. அப்படி யிருக்கும்போது துப்பாக்கிச் சத்தங்களும் அதனுடன் சேர்ந்த வெளிச்சமும் தெரிந்தது. இடையிடையே பீரங்கிச்சத்தமும் கேட்டது. ஈட்டி வல்லயக்குத்து மாத்திரமில்லை. கம்பனியார் படைகள், வெடி மருந்துகள் மழையில் நனையாமலிருக்கவேண்டுமே என்கிற கவலை. அதற்காக அதிக சிரத்தை எடுத்து நனையவிடவில்லை. இப்படி சண்டை அதிகம் பலமாய் நடக்கும்போது 200 பேர் வரை அவர்கள் மேல் பாய்ந்து விழுந்து அடிப்பவர்கள் போல தென்பட்டார்கள். உண்மையில் அவர்கள் கம்பெனியார் பட்டாளத்தை சேர்ந்தவர்களென்று பின்னால் தெரிய வந்தது. இவர்கள் எதிரிகளுடைய முழக்கத்தையும் அவர்கள் ஆவேசத்தையும் கண்டு பயந்து ஓடிவந்துவிட்டார்கள். ஏனென்றால் அவர்கள் கையில் எவ்வித

ஆயுதங்களும் கிடைக்காது. இரண்டு மணி நேரத்துக்குப் பின்பு மழை வெறித்து விட்டது. மழை வெறித்தவுடன் இரு கட்சிக்காரரும் அவரவர்கள் இடத்துக்குப் போய்ச் சமாதானமாய் இருந்தார்கள். அன்று இராத்திரியில் யாதொரு குழப்பமும் கிடையாது.

மறுநாள் மேஜர் மெக்காலே என்பவர் கோட்டையைச் சுற்றிப்பார்க்கப் போன போது எதிரிகள் பீரங்கிக் குண்டுகள் போட்டார்கள். அது ஒன்றும் சேதம் செய்யவில்லை. அதே சமயம் கம்பனியார் குதிரைப் பட்டாளத்தாரும் சுட்டார்கள்.

19ம் தெய்தி வரை விசேஷமாய் யாதொன்றும் நடக்கவில்லை. தினந்தோறும் கலகங்கள் உண்டாகிறது தான் இரண்டொருவர் சாகிறது தான் ஆக அப்படிச் சாதாரண சண்டையில் செத்தவர்கள் 60 பேர் கோட்டைக்குள்ளிருந்து குண்டுகள் அடிக்கடி வெளியே வருகிறது தான் அக்குண்டுகளால் அவ்வளவு சேதமில்லை. இச்சமயத்தில் தான் கோட்டை மேட்டுக்கு மேல்பக்கத்தில் குளத்தின் உள்வாயில் தற்சமயம் பீரங்கிமேடு என்று சொல்லப்பட்ட ஒரு மேட்டைப்போட்டார்கள். இந்த மேட்டிற்குக் கிழக்கே 150 கெஜத்துக்கப்பால் ஒரு பீரங்கிமேடு போடப்பட்டிருந்தது. நாம் முன்னே பார்த்தபடி 22ம் தெய்தி இராத்திரி எதிரிகள் வெட்டி சமமாக்கிவிட்டார்கள். ஆனால் புதிதாய் செய்யப்பட்ட மேட்டில் காவலுக்காக 60 பேர்களை வைத்தார்கள்.

இச்சமயத்தில் தான் கர்னல் ஆக்னியூ என்பவர் மெயீ 21ம்உ கேப்டன் மன்ரோ, கேப்டன் மார்ஷல் என்பவர்களோடு வந்து சேர்ந்தார். இவர்கள் வந்து சேர்ந்தவுடன் கோட்டையைத் தாக்க ஆரம்பித்தார்கள். மறுபடியும் 22ம் தேதி 77 வது ரெஜிமென்டும் ஒரு ஆர்ட்டிலரியும் 3 பட்டாலியன் கம்பனிகளும் இரண்டு இராணுவ அதிகாரிகள் பார்வையில் வந்து சேர்ந்தன.

மெயீ 23உ சூரிய உதயத்தில் மறுபடியும் கோட்டையை இடிக்க பிரங்கி வேலை ஆரம்பித்தது. இன்று தான் ஒரு காருண்யமில்லாத சண்டை. துப்பாக்கிப்பிரயோகங்களுக்குக் கணக்கில்லை. பிரங்கிச் சத்தங்களுக்குங் கணக்கில்லை. கைகலந்து யுத்தம் செய்ததால் அநேகர் சேதம். கோட்டையை இடித்தார்கள். கம்பனியார் பட்டாளங்கள் எவ்வளவு கஷ்டங்களையும் எதிர்பார்க்காமல் இடிந்த கோட்டை வழியாய் உள்ளே நுழைந்துவிட்டார்கள். கோட்டைக்குள்ளிருந்தவர்கள் எவ்வளவு காலந்தான் கஷ்டங்களைச் சகிப்பார்கள். அந்தக்கோட்டைக்குள் 3000 பேர்வரை இருந்தார்கள் பெண்களுமிருந்ததாகத் தெரிகிறது. கோட்டைக்குள் எங்கும் குழிகள்தான் காணப்பட்டன. அந்தக்குழிக்குள் ரெக்கி, துப்பாக்கிக் குண்டுகளுக்குப்பயந்து இருந்தார்கள். கோட்டையைவிட்டு ஓடும்போது பெண்களில் அநேகர் தானாகவே இறந்துபோனதாகத் தெரிகிறது. கோட்டையின் விஸ்தீரணத்தை முன்னமே எழுதியிருக்

கிறபடியால் திரும்பவும் அதைப்பற்றி இங்குகூற அவசியமில்லை. ஆக இன்று இறந்தவர்களில் ஐரோப்பியர் 19 சுதேசிகளில் 24.

கோட்டையை விட்டு வெளியே ஓடுகிறவர்களை வெட்ட ஒரு குதிரைப்பட்டாளம் தயாராய்வைக்கப்பட்டிருந்தது. உயிர்தப்பி ஓடினவர்கள் சுமார் 2000 பேர். குதிரைப்பட்டாளத்தார் கையில் அகப்பட்டு வெட்டுப்பட்டவர்கள் 600 பேர். கோட்டைக்குள்ளேயே இறந்துகிடந்தவர்கள் 450 பேர். இதுவுந்தவிர கோட்டைக்குள் இறந்தவர்களை கோட்டைக்குக்கிழ்பக்கம் எறிந்துவிட்டார்கள். அதன் தொகை நமக்குத் திட்டமாய்த் தெரியாது.

கோட்டைக்குள்ளிருந்தவர்கள் வடக்குமுகமாய் ஓடினார்கள். அப்படி ஓட்டம் பிடித்தவர்களில் தற்சமயம் கட்டபொம்மு நாயக்கருக்குப்பின்பு வாரிசாயிருந்து சர்க்காரில் அலவென்ஸ் வாங்கிக்கொண்டு வருபவர்கள், திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டந்தாலுகாவிலுள்ள மேலச்செக்காரக்குடியிலிருக்கும் "பாஞ்சாலங்குறிச்சி அரண்மனையில்" வசிக்கிறவர்களுடைய பேரனாருடைய தாயார். அந்த அம்மாளுடைய காரியாதிகளைப்பற்றி சற்றுபின்னால் விவரிப்போம்.

வடக்குமுகமாய் ஓடினவர்களைப் பின்தொடர்ந்து துரத்தினது கர்னல் அக்கினியு துரையும் தன்னோடிருந்த இராணுவமும். அப்படித்துரத்திக்கொண்டு

பொருதும்போது எட்டயபுரத்தார் தங்கள் சேனையுடன் வாகனல் அவர்களுக்கு மேற்படியாரை அதிகத்தூரம் துரத்தும்படி உத்திரவு செய்துவிட்டு பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிவிட்டார். அக்காலத்தில் சாயந்திரந்தோறும் யுத்த களத்துக்குப் பெண்கள் போய் பார்த்துவிட்டு தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவருவது வழக்கம் ஏனென்றால் தங்கள் புருஷர்களை, பிள்ளைகளை யுத்தத்திற்குப் போயிருப்பார்கள். காட்டில் இறந்த பிரேதங்கள் கிடக்கும். அப்பிரேதங்களைப் போய்ப்பார்த்து அவைகளில் தங்களுக்குச் சொந்தமானது ஏதாவது இருந்தால் அதன்மேல் விழுந்து அழுது தங்கள் துக்கத்தை ஆற்றிக்கொண்டு பின்பு வசதியிருந்தால் அடக்கத்துக்கு வேண்டிய வழியைத் தேடுவார்கள். அப்படி ஒருநாள் தினம் சில பெண்கள் போய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது போனவர்களில் ஓர் அம்மாளுடைய மகன் குற்றுயிராய்க் கிடக்கிறதைக் கண்ட தாய் தன் மகனுக்கு வேண்டிய சிகிட்சைசெய்ய எத்தனிக்கையில் மகன் தாயைப்பார்த்து, "அம்மா நீ எனக்கு ஒன்றுஞ்செய்ய வேண்டாம். எனக்குச் சாகப்பயமில்லை சாமி அதோ கிடக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகள்செய்து அவர்களைப் பிழைக்கவை" என்று சொல்லிவிட்டுத் தான் மரித்துப்போனான். அந்த சாமி யாரென்றால் ஊமைத்துரை. அவரை மரித்துப்போன அந்த வாலிபன் சொன்னபடியே பெண்கள் அவரை எடுத்து கோயப்பக்கமாய்க் கொண்டுபோய்

வெள்ளையர்களுக்குச் செய்து கட்டுப்படுத்திவிட்டார்கள். இதை எதற்குச் சொன்னேனென்றால் அந்த மதுரைத் துரையின் மேல் எவ்வளவு பற்றுதலாக இருந்தார்கள் என்று இப்போது சொல்லப்பட்ட சரித்திரத்தின் மூலமாய்த் தெரிகிறதல்லவா? கடைசியாக இந்த மதுரைத் துரையும் அதே வருஷம் ஜூன் மீ 10உக்கு மேல் கோட்டைமேட்டுக்கு மேல்புறத்திலுள்ள ரெங்கி மேட்டின் மேல் தூக்கப்பட்டாரென்று நமக்குத் தெரிகிறது.

பிற்பாடு பட்டாளத்தார் சில தொகுதிகள் சேர்ந்து கோட்டை முழுவதையும் இடித்துத் தகர்த்து அதில் உப்பையும் ஆமணக்கு முத்தையும் போட்டு உழுதுவிட்டார்கள்.

கோட்டையிலுள்ள மரங்களை ஏலம்போட்டு விட்டு மீதியுள்ள கட்டைகளைக்கொண்டு சர்க்கார் கட்டடங்களுக்கும் உபயோகித்துக்கொண்டார்கள்.

ஓட்டப்பிடாரத்திலும் அதைச்சுற்றிலுமுள்ள கிராமங்களில் இச்சண்டை நடந்த காலங்களில் கட்டப்பட்ட அநேக நாயக்கமார் வீடுகளில் பாஞ்சாலங்குறிச்சி அரண்மனையிலுள்ள மரச்சாமான்களை உபயோகித்திருக்கிறார்கள். அதை இப்போதும் காணலாம்.

சண்டை முடிந்த உடன் கர்னல் அக்னியு என்பவரும் முதல் சண்டை முடிவில் மேஜர் பானர்மன்

துரை பிரசுரித்த பிரகாரமாகவே ஒரு தேசவிளம்பரத்தைத் தயாரித்து சென்னை கவர்ன்மெண்டார் ஒவ்வொரு கிராமத்திலும் வெளியாக்கினார்கள். அந்த விளம்பரத்தின் சுருக்கம் பின் வருமாறு:—

என்ன காரணத்தால் முதல் சண்டை இரண்டாவது சண்டை நேர்ந்ததென்றும், அதற்கு காரணமாயிருந்தவர்களுக்கு வந்த முடிவையும். அச்சண்டையால் சர்க்காருக்குச் சேரவேண்டிய பூஸ்திதியை கம்பனியார்களுக்கு உதவிபுரிந்தவர்களுக்கே கொடுத்துவிட்டதையும், மேஜர் பானர்மன் காலத்தில், ஆயுதவர்க்கங்களை வைத்திருப்பவர்களைத் தண்டிப்பதாக பிரசுரம் பண்ணியதை இச்சமயம் உறுதிப்படுத்தி அவ்வாயுதங்களை சர்க்காரில் ஒப்படைததுவிட்டால் அதற்குப் பதிலாக சர்க்காரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் விதத்தையும், அப்படி ஆயுதங்களைத் தயார்பண்ணுதவர்களைக் குறித்து சர்க்காருக்கு ரிப்போர்ட் செய்பவர்களுக்குச் சர்க்காரால் அளிக்கப்படும் இனுங்களைப்பற்றியும், பாளையக்காரர் தங்கள் பந்தோபஸ்துக்காக கொஞ்சம் வல்லையக்காரரை வைத்துக்கொள்ளலாமென்றும், மேற்சொன்ன எற்பாடு கலெக்டர் மூலமாய் நடைபெற வேண்டுமென்றும், ஆயுதங்களை மூன்று மாதத்திற்குள் சர்க்கார் கச்சேரியில் ஆஜர் செய்ய வேண்டுமென்றும், அப்படி செய்யத் தவறினவர்களை தேசாந்திரம் அனுப்பிவிடுவதாயும், சர்க்காரில் தங்கள்

வசமிருக்கிற பாஞ்சாலங்குரிச்சியைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்களை தேசாந்திரம் அனுப்புவதாயும், இந்தச் சண்டையில் சம்பந்தப்பட்ட மற்ற எல்லோரையும் கம்பனியார் பூரணமாய் மன்னித்துவிட்டார்களென்றும், பாளையக்காரருக்கு ஜமீன்தார்களென்றும் வரிசை கொடுத்து அதற்கேற்ற என்றென்றைக்குமுள்ள ஒரே தீர்வையை ஏற்படுத்துவதாயும், மற்றும் சமாதானத்துக்குக் காரணமான சகலவித சட்டங்கள் ஏற்படுத்துவதாயும் 1801ம் வருஷம் டிசெம்பர்மீ 26ம்வ கர்னல் ஆக்னியு கையொப்பமிட்ட தேச விளம்பரம் வெளியிடப்பட்டது.

பாஞ்சாலங்குரிச்சியார் பின் சந்ததியார் வம்ச வரலாறு.

கோட்டை பிடிபட்ட சமயம் சுமார் 40 வாரிஸ் வரை யிருந்தது. அதில் சண்டையில் இறந்தவர்கள் சிலர், சிறையிலகப்பட்டவர்கள் சிலர், போனவிடந்தெரியாமல் போனவர்கள் சிலர். சில அற்பக்குற்றத்தால் பயந்து தான் வாரீஸ் இல்லையென எழுதிக்கொடுத்தவர்கள் சிலர். அப்படிக் கடைசியாக வாரீஸென்று அலவன்ஸ் சர்க்காரிலிருந்து பெறுகிறவர்கள் தற்சமயம் பாண்டியபுரம் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சற்றேறக்குறைய தெற்கே 4மைல் தூரத்திலிருக்கும் மேலச் செக்காரக்குடி என்னும் கிராமத்தில் வசிப்பவர்களே.

கம்பனியார் கோட்டையை பீரங்கிகளால் இடித்துத்தள்ளினார்களென்றும், அதிலிருந்து சுமார் 2000 பேர் வரை தப்பிப் பிழைத்தார்களென்று பார்த்தோம். உள்ளே பட்டாளத்தார் நுழைய, ஒரு கர்ப்ப ஸ்திரீ ஒரு கூடைக்குள் தன் குலதெய்வத்தையும், மற்றோர் கையில் தன் ஆண் குழந்தை ஒன்று பெண்குழந்தைகள் இரண்டையுங் கூட்டிக்கொண்டு எங்கேயாவது போய்ப் பிழைக்கலாமென்றெண்ணி கோட்டைக்குள்ளிருந்து வெளியேறிக் கீழச் செக்காரக்குடிக்கு நடந்துபோய் தனக்குத் தெரிந்த ஒரு கவுண்டர் வீட்டில்ச் சேர்ந்தாள். அச்சமயம் அரண்மனையைச் சேர்ந்த வாரீஸ்களைப் பிடிக்க சர்க்காரிலிருந்து அதற்கு ஏற்பட்டவர்கள் அலைந்து திரிந்தார்கள். அரண்மனை அம்மாள் போட்டிருக்கும் நகை கவுண்டர் ஜாதிப் பெண்கள் அணிந்து கொள்ளும் நகைக்கு ஒப்பானது. ஆகையால் அந்த அம்மாளை வித்தியாசப்படுத்திப் பிடிக்க முடியாது. அல்லாமலும் அந்த வீட்டார் எவ்வளவோ மரியாதையாய் நடத்தி வருங்காலத்தில் தங்கள் அரண்மனையிலேயே அதிகமாய்ப் பழகி மேற்கண்ட குழந்தைகளைச் சிறு வயது முதல் எடுத்து அவர்களுக்கு அன்னம் ஊட்டி வளர்த்தவரான ஒருவர் அந்தச் செக்காரக்குடியிலேயே இருந்தார். அவர் வேளாளர் குலத்தில் பிறந்தவர். இப்படி இந்த அம்மாளும் அந்த அம்மாள் குழந்தைகளும் அந்தக் கவுண்டர் வீட்டில் தங்கி சில நாட்கள் கழித்தார்கள்.

அரண்மனை யிருக்கும் காலத்தில் அரண்மனைகளிலுள்ள பால் சுரக்காத பசுக்களை அடிமைகள் வசம் ஒப்புவிக்கிறது வழக்கம். அப்படிப்பட்ட பசுக்கள் கன்று போட்டவுடன் அப்பசுக்களை அடிமைகள் அரண்மனையில் கொண்டுபோய் விடுவார்கள். செக்காரக்குடிக்குத் தெற்கேயுள்ள ஒரு கிராமத்தில் அரண்மனையைச் சேர்ந்த அடிமை ஒருவனிருந்தான். அரண்மனையார் அவனிடம் விட்டுவைத்திருந்த ஒரு பசு கன்று போட்டிருந்தது. அரண்மனையில் சண்டை நடந்துகொண்டிருந்தபடியால் அந்தப் பசுவைத் தன் வீட்டிலேயே நிறுத்தி வைத்திருந்தான். பின்பு அரண்மனையார் செக்காரக்குடிக்கு வந்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு அந்த அடிமையும் தன் மனைவியுமாக பசுவையும் கன்றையும் முன்விட்டுச் செக்காரக்குடிக்கு வந்து சேர்ந்தார்கள். அரண்மனை அம்மாள் தங்கியிருக்குமிடத்திற்கு வந்து அடிமையின் மனைவிமாத்திரம் அம்மாளைப் பார்த்துக் கும்பிட்டு சமாச் சாரத்தைச் சொல்ல அந்த அம்மாளுக்குக் கோபம் பொறுக்காமல் தன் அண்டையிலிருந்த துடைப்பத்தை எறிய அது அத்த அடிமையின் மனைவியுடைய முகத்தில் பலமாய்ப் பட்டதில் இரத்தம் சலீரென்று கிளம்பிற்று. அந்த அடிமைப் பெண் அழுதுகொண்டு தெருவில் நின்றாள். வந்தவர்களிடமெல்லாம் அரண்மனை நாச்சியார் அடித்துவிட்டார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது மெட்டுச்

சேவகர்களுடன் கொத்தவால்காரரும் வந்து வீட்டை வளைந்துகொண்டார்கள். மெட்டுச் சேவகர் என்றால் தற்காலமுள்ள போலீஸ் சேவகருக்கும், கொத்தவால் காரர் என்றால் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் ஒப்பா னவர்கள். அந்த உத்தியோகஸ்தர் வந்து அந்த அம்மாள், அம்மூன்று குழந்தைகள், அச்சபயம் அக் குழந்தைகளில் ஒன்றுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தவர் ஆக இவ்வைந்துபேரையும் பாளை யங்கோட்டைக்குக் கொண்டுபோய்விட்டார்கள் குழந் தைகளுக்கு யார் சாப்பாடு கொடுத்தார்களென்று முன் னமே பார்த்தோம். ஜெயிலிலிருக்கும்போது அந்தப் பிள்ளையவர்கள் தான் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். அப்படியில்லாமற்போனால் பிள்ளைகள் சாப் பிடுகிறதில்லை. இக்குழந்தைகள் தகப்பனார் பெயர் ஊமைத்துரையென்ற துரைசூடாமணிகள் என்றும் திருநெல்வேலிச் சாமியென்றுஞ் சொல்லுவார்கள். பாஞ்சாலங்குறிச்சி அரண்மனைப் பெயர்களில் இரண்டு பெயர் முக்கியம். பட்டத்துக்கு வந்தவர்களுக்கெல் லாம் கட்டபொம்மு நாயக்கரென்றும் மற்றவர்களில் ஒருவருக்கு ஊமைத்துரை என்றும் இன்றுவரை அழைக்கிறார்கள். இப்பெயர்க் குழப்பங்களால்தான் யார்யார் என்று தெரிந்துகொள்ள கஷ்டமாயிருக்கும்.

பாளையங்கோட்டைக்குப் போனவர்களைப் பற்றிப்பார்ப்போம். அக்காலத்திலுள்ள சர்க்கார் அதி

காரிகள் அவர்கள் மேல் அதிகப் பக்ஷமாயிருந்தார்கள். ஜெயிலில்தான் பெண்களில் மூத்தது புஷ்பவதியா யிற்று. அதற்கு வேண்டிய சடங்காச்சாரங்களை உறவின் முறையாரை வரவழைத்து முடித்தார்கள். அச்செலவுக்கெல்லாம் கம்பனியாரே கொடுத்தார்கள். பாளையங்கோட்டையில் சிறிது நாட்கள் கழிந்த பிற் பாடு கவர்ண்மெண்டார் உத்தரவின் மேல் திருச்சிறுப் பள்ளிக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அங்கே போய்ச் சேர்ந்த பின்புதான் தற்சமயம் செக்காரக்குடி யில் வசித்து வருபவர்களுடைய பாட்டனார் திருச்சி ருப்பள்ளி ஜெயிலில் பிறந்தார். அச்சமயம் அந்த அம்மாளும் மற்றும் 6 பேர் வரை இருந்தார்கள். சர்க் காரில் அவர்களெல்லாருக்குஞ் சேர்த்து மாதம் 40 வராகன் கொடுத்தார்கள். நாற்பது வராகன் 120 ரூபாய்க்குச்சரி. பிறந்த ஆண் குழந்தைக்குக் கம்பனி யாரே பேர் வைத்துக்கொள்ளுவோம் என்று வற் புறுத்த அந்த அம்மாள் சம்மதித்தார்கள். அந்தக்குழந் தைக்கு கம்பனிச்செல்வம் என்று பெயர் வைத்தார்கள். இவர்களெல்லோரும் திருச்சிறுப்பள்ளியில் இருந்த தால் வாசிப்பில் அதிகத் தேர்ச்சியுள்ளவர்களாயிருந் தார்கள். சில வருஷங்கள் சென்ற பின்பு கம்பனிச் செல்வம் என்ற துரை மகனுக்கு மூத்தவர்கள் மூன்று பேர்கள் இருந்தார்கள் என்று முன்னமே பார்த்தோ மல்லவா. அவர்களெல்லோரும் கல்யாணப் பிராயமாகி விட்டார்கள். மேற்கண்ட விஷயத்தைக் கம்பனியாருக்

ருத் தெரிவிக்க கம்பனியாரும் மேற்கண்டவர்களும் ஆலோசித்து தங்கள் சுய ஜாதியில் மாப்பிள்ளைக்குப் பெண் பார்க்கவும். பெண்களுக்கு மாப்பிள்ளை பார்க்கவும் ஏற்பாடுகள் செய்து, பெண்ணையும், மாப்பிள்ளைகளையும் திருச்சிறைப்பள்ளிக்குக் கொண்டுபோய்க் கல்யாணங்களை நடத்தினார்கள். இம்மூன்று கல்யாணங்களும் பிரயோஜனமில்லாமல் போய்விட்டதென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் இம்மூவருக்கும் பிள்ளையில்லாமலே இறந்துபோனார்கள்.

கடையாயக கம்பனிச் செல்வம் என்னு சொல்லப்பட்ட துரைக்கும் மேற்கண்ட மாதிரியே சொந்த பந்துத்துவத்தில் ஒரு பெண்ணைத் தெரிந்தெடுத்துத் திருச்சிறைப்பள்ளிக்குக் கொண்டுபோய்க் கல்யாணம் நடத்தினார்கள். அவருக்கு இரண்டுதாரம்.

முதல் தாரத்துக்கு ஜெகவீர பாண்டியத்துரையும், பாஞ்சாலி அம்மாளும் பிறந்தார்கள்.

ஜெகவீர பாண்டியத்துரை படிப்பில் விசேஷ தேர்ச்சியுள்ளவர். அவருக்கும் 6 பாஷைகள் தெரியும். பேச்சில் மகா வல்லமையுள்ளவர். இவர் வாலிபமாயிருக்கும் போது தன் நாட்டைத் திரும்பக் கைப்பற்ற கவர்ன்மெண்டாருடன் அதிக வழக்குத் தொடுத்தார். அப்படி வழக்குத் தொடுக்க சென்னைப்பட்டணத்திற்குப் போயிருந்த சமயம் அவருக்குத் தேகமெல்லாம்

கொப்பளங்கள் உண்டாகி திடீரென்று பட்டணத்தி லேயே இறந்துவிட்டார்.

இனி அவர் சகோதரி பாஞ்சாலி அம்மாளைப் பற்றிப் பார்ப்போம். அந்த அம்மாளுக்கு மாந்தரீக சக்தி அதிகம் உண்டு. கல்வியிலும் தேர்ச்சி, சங்கீதக் யானம் அதிகம் உண்டு. அந்த அம்மாளுக்குக் கல்யா ணம் ஆன போதிலும் ஞானமார்க்கமாயிருந்தார்கள். அந்த அம்மாளுக்குப் பிள்ளையில்லை.

கம்பனிச் செல்வத்துரைக்கு இரண்டாந்தர மூலமாய் 2 ஆண்களும் 1 பெண்ணும்.

அந்த அம்மாள் பெயர் பாக்கியலெஷிமி அம்மாள். கல்யாணமாகியும் குழந்தைகள் பெறுமலே இறந்துவிட்டது.

மேற்சொன்ன இரண்டுபேரில், மூத்தவருக்கு 4 ஆண்களும் இளையவருக்கு 2 ஆண்களும். தற் சமயம் 4 ஆண்கள் மேலச்செக்காரக்குடியில் "பாஞ் சாலங்குரிச்சி தெற்கு அரண்மனையிலும்" அந்த இரண்டு ஆண்கள் வடக்கு அரண்மனையிலுமிருக்கிறார் கள். அதில் தெற்கு அரண்மனையிலுள்ள மூத்தவருக் குக் கல்யாணம் நடந்திருக்கிறது. பிள்ளையில்லை. அடுத்த இரண்டுபேருக்கும் கல்யாணமாகி மூத்தவ ருக்கு 2 பெண்களும் இளையவருக்கு 1 பெண்ணுமிருக் கிறார்கள். 4வது மகனுக்கு இன்னும் கல்யாணம் ஆக

வில்லை. வடக்கு அரண்மனையிலுள்ள மூத்தவருக்கு 3 ஆண்கள் இளையவருக்கு 2 பெண்கள் மாத்திரமிருக்கிறார்கள் அவர்களெல்லாருக்குஞ் சேர்த்துத் தற்சமயம் வெகு சொற்ப அலவன்ஸ்தான் கிடைக்கிறது.

பொதுக்குறிப்புகள்.

பாஞ்சாலங்குரிச்சி கட்டப்பட்ட இடமே கோட்டை விஸ்தரிப்பு என்னும் பாராவில்கண்டபடி மகா விசேஷமானதுதான். தேக ஆரோக்கியத்துக்கும் வசதியான இடந்தான். ஜல வசதி அதிகம். தற்சமயமுமுள்ள கோட்டை மேட்டுக்குத் தென்மேற்கு திசையிலும் மேற்கிலும் பெரிதுஞ்சிறிதுமாகச்சேர்த்து ஏழு குளங்கள்வரையுண்டு. ஆடுமாடுகளுக்கேற்ற ஜல வசதியுள்ளதென்று மேற்சொல்லப்பட்ட குளங்களால் தெரிகிறது. பின்பு, வேளாண்மை விஷயத்திற்கும் மேற்சொல்லிய குளங்களே ஆதாரம்.

இதுவுந்தவிர பாஞ்சாலங்குரிச்சியில் நாலைந்து தெப்பங்கள் இருந்தன. பின்னும், கோட்டைக்குள்ளும் கோட்டைக்கு வெளியேயும் எண்ணிறந்த கிணறுகளும உண்டு. மேற்சொல்லிய எல்லா வசதிகளையும் நாம் கவனிக்கும்பொழுது அக்காலத்தில் அந்த ஊர் எவ்வளவு சிறப்பாயும், அழகாயும், செழிப்பாயுமிருந்திருக்கவேண்டும்.

தற்சமயம் அக்கோட்டை மைதானத்தைச் சுற்றியுள்ள கிராமத்தார் கோழி அடை வைக்குமுன் கோட்டை மேட்டிலேயுள்ள மண்ணைக்கொண்டுபோய் அந்த மண்மேல் முட்டையை வைப்பது வழக்கமாய் நடந்து வருகிறது. ஏனென்றால், அதில் பொரித்து வெளியாகுங் குஞ்சுகள் பெரிதாகுங் காலத்தில் மற்ற கோழிகளைவிடப் பருமனும் பலமுள்ளதாயுமிருக்கு மென்று ஒரு நம்பிக்கை. சேவலோ மகா விசேஷமா யிருக்கிறபடியால் சேவல் போரில் மற்றச் சேவல்களை எளிதில் ஜெயித்து வருகிறதென்கிறார்கள். இன்னும் சில விடங்களில் குழந்தை பிறந்தவுடன் முதல் முதல் ஆகாரத்தில் (சேனையில்) கோட்டை மண்ணைக்கரைத்த ஜலத்தில் இரண்டொரு துளியை விட்டுக்கொடுப்பதும் இச்சில்லாவில் சில சில பாகங்களில் வழக்கமாயிருக் கிறது. அதனால் குழந்தைக்குப் பிணி அணுகாதென் றும்; நல்ல வளர்ச்சியும் தேக பலனும் உண்டாகுமென் றும் உறுதி சொல்லுகிறார்கள்.

மதாச்சாரம்.

பூர்வத்தில் வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த வர்களாயினும், அவர்கள், நாம் முன்னே பார்த்தபடி சக்கம்மாள்தேவிக்கே இன்று வரை தொண்டர்களா யிருக்கிறார்கள். கோட்டைக்குள் மூன்று தேவதைகள் இருந்தபோதிலும் அவர்கள் பாசுவந்தனை, ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர் என்னும் ஸ்தலங்களுக்குப்

போவது வழக்கமாயிருந்தது. அம்மூன்றில் திருச்செந்தூர் முக்கியம். அவ்வாலயத்தில் மத்யானப் பூஜை நடத்துவது கோட்டைக்கு உடனே நகராக்கள் தொனி மூலமாய்த்தெரிய வந்தது. அப்பூஜைக்குப்பின் தான் கோட்டைக்குள் போஜனம் நடந்தது. அவ்வாலயத்துக்கு, இந்நாள்வரைக்கும் நாம் பார்க்கிறபடி, வெகு திரவியங்களையும் ஆபரணங்களையும் கொடுத்திருந்தார்கள். இதுவுந் தவிர அநேக விஷ்ணு சிவஸ்தலங்களுக்கு பெருத்த மானிபம் அளித்திருக்கிறார்கள். இன்னும் சில ஸ்தங்களுக்கு கிராமங்கள் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

வேட்டையாடுதல்.

பாஞ்சாலங்குரிச்சியாருக்கு வேட்டையாடுவதில் வெகு பிரீதி. அவர்கள் வழக்கமாய் வல்லநாட்டு மலைக்குப் போவார்கள். போகும் வழியில் மணியாச்சியில் கொஞ்சந் தங்கி இளைப்பாறிவிட்டுப் போவது வழக்கம். அவர்கள் அங்கே தங்கியிருக்கும் போது மணியாச்சி பாளையக்காரர்தான் வேண்டிய சாப்பாடு, தாம்பூலம் முதலியவவ்றைத் தயாரித்துக் கொடுத்தார். பாஞ்சாலங்குரிச்சியார் அடிக்கடி வேட்டைக்குப் போகுங் காலத்தில் மணியாச்சிப் பாளையக்காரர் சாப்பாடு விசாரிக்கிற விஷயத்தில் தொல்லையடைந்தபடியால் தனக்குப் பாத்தியப்பட்ட பாண்டியாபுரத்தையும் இன்னுமிரண்டு கிராமங்களாகிய கந்தசாமியாபுரம்

கொடியங்குளத்தையும் மானியமாகவே பாஞ்சாலங் குரிச்சியாருக்கு விட்டுவிட்டார்.

பாஞ்சாலங்குரிச்சி பாளையப்பட்டின் வடபாகமாகிய 79 கிராமங்களை எட்டையபுரத்தாருக்கும் மீதி 25 கிராமங்களை மணியாச்சிப் பாளையப்பட்டாருக்கும் கவர்ண்மெண்டார் சேர்த்துவிட்டார்கள்.

நகைகள்.

அரண்மனை நகைகள் பற்பல விதமாய்ச் சிதறிப் போயிற்று. அரண்மனையார் மனதாரவே அக்காலம் தூத்துக்குடியில் வசிதத ஜாதித் தலைவர் என்றவருக்கும் தட்டப்பாறையிலுள்ள நாயக்கமாருக்கும் கொடுத்துவிட்டார்கள். இவர்கள் பாஞ்சாலங்குரிச்சியாருக்குச் சண்டையில் உதவி செய்தவர்கள்.

கற்குவியல்கள்.

கம்பனியாருக்கும், பாஞ்சாலங்குரிச்சியாருக்கும் சண்டை நடந்ததை ஞாபகப்படுத்தும் பொருட்டு இச்சில்லாவில் இரண்டு இடங்களில் கல் குவியலைக் காணலாம் ஒன்று முன் பார்த்தபடி கயத்தாருக்கு வடபக்கத்தில், மற்றொன்று குலையநல்லூருக்கு வடபாரிசமுள்ள பரும்புக்குத் தென்சரிவில் கயற்றாரிலிருந்து ஒட்டப்பிடாரத்துக்குப் போகும் வழியில்.

கம்பளத்துத் தோக்கலவர் சிதறிப் போனதின் காரணம்.

சண்டை முடிந்தவுடன் மேற் சொன்ன ஜனங்களெல்லாருக்குமே மனதில் பெருந்திகில் உண்டாகிவிட்டது. ஆகையால் அநேகர் தத்தம் இருப்பிடங்களை விட்டுவிட்டு பற்பல இடங்களுக்குப் போய்த் தங்கள் சமசாதிகளிடமோ மற்றவர்களிடமோ அடைக்கலம் புகுந்துகொண்டார்கள்.

செக்காரக்குடி.

தற்சமயம் செக்காரக்குடியிலுள்ள அரண்மனையாருடைய தகப்பனார்தான் முதல் முதலாகச் செக்காரக்குடியில் குடியேறினது. இங்கே வந்து குடியேறினதற்குக் காரணம் யாதெனில் அவர் பெண்கொண்ட இடம் செக்காரக்குடியில்தான்: திருச்சிணப்பள்ளியில் கல்யாணம் நடந்தது. கல்யாணவிஷயத்திற்கும் கம்பனியார் பணவுதவி செய்தார்கள். கல்யாணமாகி சிலகாலமான பிற்பாடு சர்க்காருக்குத்தெரிவித்து. அவர் அலவென்ஸையும் இச்சில்லாவிக்கு மாற்றிக்கொண்டு இவ்விடம் வந்துசேர்ந்தார்.

பாஞ்சாலங்குரிச்சி.

பாஞ்சாலங்குரிச்சி தற்சமயம் மண்மேடாய்க் கிடக்கிறது. அதில் இன்றையத்தினம் நாம் போனால்

சக்கம்மாள் தேவி ஆலயத்தின் வட்டவடிவமான அடிச் சுவரையும், யானைக்கட்டு கல்லையும் உறைக்கிணற்றை யும், அக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களின் அடி வரிசைச் செங்கல் சுவர் தரை மட்டத்துக்கும், கோட் டைக்குத் தென்பாரிசத்தில் வயல்களில் சிறு சிறு குத்துக் கற்களையும், பீடங்களையும், பழைய தெப்பங் கள். இருந்த இடங்களின் சிறு பள்ளங்களையும் பார்க்க லாம். இதுவுந் தவிர கோட்டைக்கு மேற்கேயுள்ள குளத்துள்வாயில் ஒரு மண் மேடு யிருக்கிறது. இந்த மண் மேட்டில் பீரங்கியார் கோட்டையைத் தாக்கினார் கள். இரண்டாவது சண்டை முடிந்த பிற்பாடு கட்ட பொம்மு நாயக்கருக்குச் சொந்தமான இருவர்களை இந்த மேட்டில் தூக்கினார்கள் என்று ரிக்கார்டு மூல மாய்த் தெரியவருகிறது.

இம்மேட்டுக்கு நேரே மேற்கில் ஒரு வட்ட வடிவமாயுள்ள சுவரும் அதனுள்ளும் வெளியேயும் காரால் செய்யப்பட்ட திடுகளுமிருக்கின்றன. அவை தான் சண்டையில் மாண்ட இராணுவ அதிகாரிகளை அடக்கம்பண்ணப்பட்ட இடம். இதன் பக்கத்தில் ஒரு கிணறும் அதன் ஓரத்தில் சில மரங்களுமிருக்கின்றன. இக்கிணறு, அடக்கம்பண்ணப்பட்ட சுதேச இராணுவ வீரர்கள் ஞாபகார்த்தமாய் வழிப்போக்கருக்குப் பிர யோஜனமாயிருக்கும் பொருட்டு வெட்டப்பட்டுள்ளது. அதன் பக்கமாயுள்ள மரங்களும் அக்காலத்தில் நடப் பட்டவைதான்.

அதிலிருந்து நேரே வடக்கே சற்றேறக் குறைய 2 பர்லாங் தூரத்தில் ஒரு காரைச் சுவர் கம்ப வுண்டுக்குள் இரண்டாவது சண்டையில் இறந்த ஐரோப்பிய பட்டாளத்து ஸோல்ஜர்களையும், உத்தியோகஸ்தர்களையும் அடக்கஞ் செய்திருக்கிறார்கள். அவர்களின் தொகை 47. அடக்கம்பண்ணப்பட்ட யிடத்தில் எழுதப்பட்ட வாசகத்தை இதன் பின்னால் பார்த்துக் கொள்ளுங்கள்.

கடைசியாக, ஒட்டப்பிடாரத்துக்கு வடபக்கம், தெற்பக்குளத்துக்கு கிழக்கே மேற்குமுகமாய்ப் பார்த்த ஒரு காரைக் கம்பவுண்டுக்குள் 4 ஐரோப்பிய இராணுவ உத்தியோகஸ்தரை அடக்கஞ் செய்திருக்கிறார்கள். இவர்கள் 4பேரும் முதல் சண்டையில் இறந்தவர்கள். இதில் தான் காலன் துரையையும் அடக்கஞ் செய்திருக்கிறார்கள்.

இதுவுந் தவிர சண்டையில் போர்புரிந்த ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளின் பெயரைப் பற்பலவிதமாய்க் கீழ்க்கண்டபடி கூப்பிடுவதுமுண்டு. சிறு நெருப்பு, பெரு நெருப்பு, நீர்மேல் குமிழி, மக்காளி, காலன், அக்கினிச்செனரல். ஆகையால், இச்சண்டைக் காலத்திலுள்ள சர்க்கார் அதிகாரிகளின் பெயர்களும் பாஞ்சாலங்குரிச்சியில் போய் போர் புரிந்தவர்கள் பெயர்களும் இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன.

லாட் எட்வார்டு க்ளைவ்
மதருஸ் கவர்னர்.

ஸ்டீபன் லஷிங்டன் திருநெல்வேலிக்கு முதல் கலெக்டராயிருந்து பின்னால் மதருஸ் கவர்னரானார்.

லெப்டனென்டு கர்னல் மேக்ஸ்வெல் செட்டில்மெண்டு உத்தியோகஸ்தர்.

எட்வார்டு சாண்டர்ஸ் ரெவினியு போர்டு பிரசிடெண்டு, மதருஸ்.

உல்லியம் பேட்றி ௸

ஜோசப் வெப் மதருஸ் கவர்ண்மெண்டு செக்ரட்டேரி.

மேஜர் ஜான் பானர்மன் திருவாங்கூர் ரெஸிடெண்டு.

கேப்டன் டிஹ்டன். ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பட்டாளத்து அதிகாரி.

மேஜர் ஸ்டீபன்சன் 1796ம் வருஷம் சேத்தூர் கோட்டையை முற்றுக்கை போட்டார்.

லெப்டனென்டு சென்ட்லெஜர் பூலித்தேவருக்கு விரோதமாய்ச் சண்டை செய்தார்.

கேப்டன் ஹாமில்டன். ஆழ்வார் திருநகரியிலுள்ள பட்டாளத்து அதிகாரி.

கேப்டன் டேவிசன். தூத்துக்குடியிலுள்ள பட்டாளத்துக்கு அதிகாரி.

W. C. ஜேக்ஸன் என்பவர் இராமனாதபுரம் கலெக்டராயிருந்தார்.

மேஜர் ஸ்மார்ட் பாளையங்கோட்டையிலுள்ள பட்டாளத்து அதிகாரி.

லெப்டனென்டு கிளார்க் இராமனாதபுரத்துப் பட்டாளத்திலுள்ள ஒரு அதிகாரி.

தோமாஸ் டிஷ்போர்ன், பாளையங்கோட்டையிலுள்ள பட்டாளத்து அதிகாரி.

க்ரீம். இராமனாதபுரத்தில் ஆக்டிங் கலெக்டர்.

லேண்டன். இராமனாதபுரத்தில் 1799ம் வருஷம் கலெக்டராயிருந்தார்.

லெப்டனென்டு டாலா, கேப்டன் ஓரிலி, கேப்டன் பேட்ரிக் ஜாய்ஸ். லெப்டனென்டு போவன், மேஜர் நோல்ஸ். (மேஜர் ராபர்ட் டூரிங், ஜியார்ஜ் ஹியூஜஸ், மேஜர் ஜாண் பானர்மன் இம்மூவரும் கட்டபொம்மு நாயக்கரை கயற்றாற்றில் விசாரணை செய்தவர்கள்).

மேஜர் மக்காலே பாளையங்கோட்டைப் பட்டாளத்து அதிகாரி.

மேஜர் ஜெனரல் ப்ளாய்ட் திருச்சிறுப்பள்ளி பட்டாளத்து அதிகாரி.

கேப்டன் பேக்ஷா, லெப்டெனண்ட் ச்ரஹாம், கேப்டன் ஜான் கேம்பெல், லெப்டெனண்ட் ஜெய்ம்ஸ் க்ராண்ட், லெப்டனெண்டு லையின், மேஜர் ஷெப் பார்டு, கேப்டன் நேகல், கேப்டன் யன். ஸ்மித், கேப் டன் ஹெஜார்டு. கேப்டன் டி. மக்டானல்டு.

கேப்டன் ஜி. லேங்,
மேஜர் காலின் மக்காலே
லெப்டெனெண்டு பிளச்சர்
,, க்ரீவ்ஸ்
,, மேக்னல்
,, க்லேபாம்
,, டக்லஸ்
,, டோரியானோ
,, டார்மியூ
,, நோரிஸ்
,, காலின்ஸ்
,, எலியட்
,, ப்ளெக்
,, ப்ரௌன்
,, ரைட்
,, மெக்கே
,, டே

லெப்டினென்டு	க்ளீஸன்
,,	ஜில்க்ரைஸ்ற்
,,	ஸ்பால்டிங்
,,	ப்ரெஸர்
,,	வேலன்டின்
,,	பர்ச்சு
,,	டர்னர்
,,	மண்ட்
,,	ப்ராட்லி
கேப்டன்	சார்ல்ஸ் ட்ராட்டர்
,,	நிக்கொலாஸ்
,,	ஜான்மன்றோ
,,	மார்ஷல்
,,	ஸ்ர் ஜான் சிங்கிலேர்
,,	காட்ப்ரே
,,	டவுண்ஸெண்டு
,,	டவுட்டன்
,,	எட்லி
,,	ப்ரூஸ்
,,	வெளி
கன்னர்	பின்ளி
டாக்டர்	பார்ட்டர்

லெப்டினண்ட் கர்னல் ஸ்ப்ரை.

லெப்டினன்டு கர்னல் அக்னியு

கடைசியில் சொல்லப்பட்டவராகிய கர்னல் துரைதான் சண்டையை முடிவுக்குக்கொண்டுவந்தவர்.

இதனடியில் சண்டையில் இறந்து அடக்கம் பண்ணப்பட்ட பீடங்களின் மேல் வரையப்பட்ட ஆங்கில வாசகமும் இங்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதன் விபரம் பின் வருமாறு.

ஒன்று இலக்கமிட்டதில் 1799ம் வருஷம் செப்டம்பர்மீ 5உயில் பாஞ்சாலங்குரிச்சியில் நடந்த முதல் யுத்தத்தில் இறந்தவர்கள் 4 ஐரோப்பியர்.

இரண்டாவது இலக்கமிட்டதில் 1801ம் வருஷம் மார்ச்சுமீ 31உயும் மேமீ 24உயும் நடந்த இரண்டாவது சண்டையில் இராணுவ உத்தியோகம் வகித்த ஐரோப்பியரில் 10 பேர்வரை இறந்துபோனதாக எழுதப்பட்டிருக்கிறது.

மூன்றாவது இலக்கமிட்டதில் இரண்டாவது சண்டை முடிந்து ஜெயங்கிடைத்த சமயத்தில் மரித்துப்போன ஒரு ஐரோப்பிய வாலிபனுடைய பராக்ரமத்தைப்பற்றியும் அந்நியோன்யத்தைப்பற்றியும் வெகு விமரிசையாய் வரையப்பட்டிருக்கிறது.

(1)

" In memory

of

Lientenants

Douglas, Dormieux Collins and Blake,

and

Gunner Finny

Who fell in the attack of Panjalankurichy.

5th September

1799 "

(2)

" Sacred
to
The memory of
Captain John Campbell; Lieutenants A. Campbell D. Gilchrist
And P. Shank of H. M. 74th Regiment.
Lients, J. Spalding and A. Campbell H. M. 77th Regiment.
Lieutenants M. Egan It Bt. 3rd. Regiment. N. I.
Lients. W. Fraser and Mangnell It Bt. 4th Regiment. N. I.
And Lient C. Torrians It Bt. 9th Regiment N. I.
Who bravely fell or died of wounds received in the assault on
the Fort of Panjalancourichy. The 31st. March & 24th May.
1801. "

(3)

" Here lie the remains of Dougald W. Gilchrist, Lieutenant of his Majesty's 74th Regiment. This gallant youth, who had not attained his one and twentieth year was killed on the twenty—fourth of May A. D. 1801 in the breach of the fort of Panjalancourichy in the moment of victory. By his death His Majesty's Service lost an officer of great enter prise and valour, and society a beloved and valuable member. "

இச்சண்டை நடந்த சமயத்தில் இங்கிலாந்தில்
மூன்றாம் ஜியார்ஜ் என்பவர் அரசாண்டார்.

கோவில்பட்டி
சரஸ்வதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

Cwdg
1-11-90